

மௌனம்
உன் மொழியா?
ட்சுமி சுதா
மௌனம்
உன் மொழியா
ட்சுமி சுதா



## என்னுரை

அனைவருக்கும் வணக்கம்!

என்னுடைய இருபதாவது நாவல் 'மௌனம் உன் மொழியா?' மூலம் உங்களை மீண்டும் சந்திப்பதில் எனக்குப் பெருமகிழ்ச்சி.

இந்தக் கதையின் நாயகி மிதுலா துடிப்பான பெண். ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் துணை எடிட்டராக வேலை பார்த்து வருகிறாள் அவள்.

அவள் வாழ்வில் அதிரடியான மாற்றங்கள் சட்டென ஏற்படுகின்றன. அதற்குக் காரணம் அவளின் புதிய முதலாளி சச்சித்.

அந்த மாற்றங்களை அவள் எப்படிச் சமாளிக்கிறாள்? சச்சித்தோடு எப்படி இணைகிறாள் என்பதே இந்தக் கதை.

கதையைப் படித்துக் கருத்துகளைத் தெரிவித்து என்னை மேலும் மேலும் எழுதத் தூண்டும் அத்தனை வாசகர்களுக்கும் என் உள்ளம் கனிந்த நன்றி.

உங்களுடைய கருத்துக்களையும் விமர்சனங்களையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

அன்புடன்,

**லட்சுமி சுதா**
lakshmisudha2010@yahoo.com

# மௌனம் உன் மொழியா?

## 1

இந்தப்
பூமியே
ஒரு
அழகான
மலர்வனம்!
நீ
இருக்கிறாய்
அதனாலே
பெண்ணே!

நீ
நடந்து
செல்லும்
பாதை
எல்லாம்
தேன்
சிந்தும்
பனிக்
கட்டிகள்!
முடிவு
இல்லாத
பாதையில்
நீயும்
நானும்...

**மி**துலா தன் அறையை அலங்கரித்துக் கொண்டிருந்த திரைச்சீலையை விலக்கினாள். அந்த அடுக்கு மாடிக் கட்டடத்தின் பத்தாவது தளத்தில் இருந்து பார்க்கப் பார்க்க இயற்கைக் காட்சிகள் திகட்டாத ஒன்று. எப்பவும் அவளுக்கு.

தொலைதூரத்தில் பரந்து விரிந்த கடல், புள்ளியாகத் தெரியும் கப்பல்கள், பச்சைக் கம்பளமாகத் தெரியும் மரங்கள், ஆங்காங்கே மரத்தின் மேல் சிதறியிருக்கும் வண்ண நட்சத்திரங்களாகப் பூக்கள், மரங்களுக்கிடையே, உயரமாக எழும்பும் கட்டடங்கள் என எல்லாவற்றையும் அவள் விழிகள் ரசனையோடு படம் எடுத்தன.

"மிதுலா... புது பாஸ் இங்கே இருக்கிறார் இன்றைக்கு." என்ற குரல் கேட்டுத் திரும்பினாள் அவள்.



அங்கே ஹெலன் நின்று கொண்டிருந்தாள். 'தி ரியல் ஃபேஸ்' பெண்களின் பத்திரிகையின் எடிட்டர் மாதவியின் காரியதரிசி, ஹெலன்.

அவள் முகத்தில் பதற்றம் தெரிந்தது. எப்பவும் அவள் முகத்தை அலங்கரிக்கும் புன்னகை அப்பொழுது காணவில்லை.

"புது பாஸ் வந்தால் என்ன? நம்மைக் கடித்தா முழுங்கிவிடப் போறார்."

"ம்... கடித்து முழுங்கி விடமாட்டார். ஆனால் அவர் 'வேலைப் பிசாசு' என்று கேள்விப்பட்டேன். இப்பொழுது மேடம் ரூமில் தான் இருக்கிறார்."

"நானும் அப்படித்தான் கேள்விப்பட்டேன். பிரகாஷ் ஸாரின் மகன். அவர் அப்பா போல் கிடையவே கிடையாது.

அதோடு இவர் வெளிநாட்டில் படித்தவர் போல. புதிய புதிய முறைகளைப் பத்திரிகைத் துறையில் புகுத்துவது இவரோட தனித் தன்மை என்று, நிறையப் பேர் சொன்னார்கள்.

அவர் கால் வைக்கும் இடங்களில் எல்லாம் கண்டிப்பாக மாற்றம் இருக்குமாம். ஆள் குறைப்பு செய்வது அவருக்கு ரொம்பப் பிடித்த வேலையாம்.

பார்க்கலாம் இங்கே என்னென்ன செய்யப் போகிறார் என்று. அதிரடி நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்."

"கவலையாத்தான் இருக்கு மிதுலா. வேற வேலை தேட வேண்டியதுதான் போல..."

"நல்லதே நினைப்போம் ஹெலன். இன்று தானே வந்திருக்கிறார். பொறுத்திருந்து பார்ப்போம்."

ஹெலன் குழப்பமான முகத்தோடு வெளியே செல்வதைப் பார்த்தாள் மிதுலா. மனதை மீண்டும் இயற்கைக் காட்சிகளில் பதிய வைக்க முயன்றாள் அவள்.

அவள் டேபிளில் இருந்த தொலைபேசி சிணுங்கியது. திரையில் தெரிந்த நம்பரைப் பார்த்ததும் மாதவி மேடம் அழைக்கிறார் என்று அவளுக்குப் புரிந்தது.

"சொல்லுங்க மேடம். மிதுலா தான் பேசறேன்."

"என்னோட அறைக்கு வர முடியுமா? இங்கே நம்ம ஆபீஸின் புது பாஸ் மிஸ்டர் சச்சித் இருக்கிறார்.

அவருக்கு நாம் எப்படி இந்தப் பத்திரிகையை நிருவகிக்கிறோம் என்று வந்து சொல் மிதுலா," என்றார் மாதவி.

"சரி மேடம். நான் வருகிறேன்," என்று சொல்லிவிட்டு இணைப்பைத் துண்டித்தாள் மிதுலா.

மேடம் எல்லாவற்றையும் தன்னம்பிக்கையோடு திறமையாக நடத்துவார்கள். ஆனால் அவர்கள் குரல் சோர்ந்து இருந்தது போல் தோன்றியதே இன்று.

ஏன் அப்படி? மாதவி மேடமின் முயற்சியால் தானே 'தி ரியல் ஃபேஸ்' பத்திரிகை பெண்களுக்கிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

இப்பொழுது சமீபத்தில் நடந்த ஆய்வின்படி இந்தப் பத்திரிகை பெண்களால் விரும்பிப் படிக்கப்படுகிறது என்று தெளிவாகத் தெரிந்தது.



இரண்டாவது இடத்தில் உள்ள இந்தப் பத்திரிகைக்காக மாதவி மேடம் எவ்வளவு உழைத்திருப்பார்கள். அவர்களை அப்ஸெட் ஆக்கும் திறன் இந்த புது பாஸிற்கு இருக்கிறதா என யோசித்தபடியே அறையின் கதவைத் தட்டிவிட்டு உள்ளே சென்றாள் அவள்.

"வா மிதுலா. சிட் டவுன்," என்றார் மாதவி.

"குட் மார்னிங் மேடம்... குட் மார்னிங் ஸார்...."

"என்ன மேடம் துணை எடிட்டர் மிதுலா பள்ளிக்கூட மாணவி மாதிரி 'குட் மார்னிங் மேடம்... குட் மார்னிங் ஸார். அப்படின்னு சொல்றாங்க!" என்றான் கிண்டலாக அவன்.

அவள் கன்னங்கள் அவமானத்தால் சிவந்தன. "நீங்க வெளிநாட்டில படிச்சதால உங்களுக்கு இங்க இருக்கற சிஸ்டம் எல்லாம் மறந்திடுச்சு போல, ஸார்.

'குட் மார்னிங்' எல்லோராலேயும் உபயோகப்படுத்தப் படற ஒண்ணா இருக்கே. வாட்ச்மேன் முதல் கம்பெனியின் எம்.டி. வரை..." என்று படபடத்தாள் மிதுலா.

"எனக்குத் தெரியாத விஷயங்களை, மறந்து போன சமாச்சாரங்களை இனி உன்னிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

நைஸ் டு ஸீ யூ மிதுலா. ஐ யாம் சச்சித்!" என்று கை குலுக்க கை நீட்டினான் அவன்.

பதிலுக்கு எழுந்து கை நீட்டிய மிதுலா அவனை அண்ணாந்து பார்த்தாள். ஆறு அடி உயரம் இருப்பான் போல. முகத்தில் தெரிந்த தீவிரம், கண்களில் தெரிந்த துடிப்பு இவை எல்லாமே அவன் நினைப்பதை நடத்தி முடிப்பவன் என்று சொல்லாமல் சொல்லியது.

அதே நேரம் அவன் கண்கள் நிதானமாகத் தன் மேல் தலை முதல் கால் வரை படிவதை அவளால் உணர முடிந்தது. ஏனோ அந்தப் பார்வை அவளை உலுக்கியது.

அடுத்த ஒரு மணி நேரம் அவன் கேட்ட கேள்விகள், பத்திரிகை பற்றி அக்கு வேறு ஆணி வேறாக அவன் கேட்ட விவரங்கள், பத்திரிகைக்குத் தேர்வாகும் கதை, கட்டுரை பற்றி, தேர்வு செய்ய உள்ள விதி முறைகள் பற்றி, பத்திரிகையின் டிஸைன் பற்றி, பத்திரிகைக்கான விளம் பரங்கள் பற்றி, படிக்கும் வாசகர்கள் பற்றி எல்லாமே பிரமிப்பாக இருந்தது மிதுலாவிற்கு.

அவன் எல்லா விஷயங்களிலும் ஆழமாக, நுணுக்கமாகத் தகவல்களைச் சேகரிக்கும் திறன் படைத்தவன் என்று அவளுக்குப் புரிந்தது.

பத்திரிகைக்கு ஆகும் செலவு, வேலை பார்ப்பவர்களின் சம்பளம், பத்திரிகையின் விற்பனை போன்ற பணம் சம்பந்தப்பட்ட விவரங்கள் எல்லாம் அவன் ஏற்கனவே துல்லியமாகத் தெரிந்து வைத்திருந்தது அவளுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

"பத்திரிகை விற்பனை கடந்த இரண்டு ஆண்டுகளாக எப்படி இருக்கிறது?

எவ்வளவு சதவீதம் விற்பனை கூடுதலாக இருக்கிறது?"

"நமக்கு முன்னே 'இட் இஸ் யூ' பத்திரிகை முன்னணியில் இருக்கிறது. பெண்கள் பத்திரிகையில் அது முதல் இடம். நாம் இரண்டாவது இடத்தில் இருக்கிறோம்." என்றாள் மிதுலா.



"யெஸ். அவர்களுக்கும் நமக்கும் விற்பனையில் பத்து சதவீதம் வித்தியாசம் உள்ளது.

பத்து என்பது பெரிய நம்பர். நம் பத்திரிகை முதல் இடத்தைப் பிடிக்க வேண்டும்.

அதற்கு ஏன், மாதவி மேடம்! நீங்கள் முயற்சிகள் ஏதும் எடுக்கவில்லை?"

மிதுலாவிற்குக் கோபம் வந்தது. ஏதோ மேடம் ஒன்றுமே செய்யாதது போல் அல்லவா பேசுகிறான். மேடமின் அனுபவம் இவன் வயசாக இருக்கும்.

ஆனால் என்ன ஒரு திமிர். எப்படி இந்த மாதிரி இவனால் கேள்வி கேட்க முடிகிறது என்று எரிச்சலோடு இருந்தாள் அவள்.

"வாசகர்களின் விமர்சனம் எப்படி இருக்கிறது? எந்தக் கட்டுரை அதிக வரவேற்பைப் பெறுகிறது? ஏன் ஒரே ஒருவரே 'வீடு' செக்ஷனைப் பற்றி எழுதுகிறார்?

புதிய எழுத்தாளர்களையும், ஓவியர்களையும் நம் பத்திரிகையில் எப்படி ஊக்கப்படுத்துகிறோம்?" என்று கேள்விக் கணைகளைத் தொடுத்தான் அவன்.

பேசிப் பேசி நாக்கு உலர்ந்து போனது போல் இருந்தது மிதுலாவிற்கு. ஆனால் அவன் தொடங்கும் பொழுது இருந்த அதே உற்சாகத்துடனும், தெம்போடும் இருப்பதைக் கவனித்தாள் அவள்.

"நீங்கள் எப்பொழுதிலிருந்து இந்தப் பத்திரிகைக்கு எடிட்டராக இருக்கிறீர்கள் மேடம்?" என்றான் கூலாக சச்சித் - மாதவியைப் பார்த்து.

"நீ குட்டிச் சட்டை, குட்டி பேண்ட் போட்டுக் கொண்டு ரோடில் கிரிக்கெட் ஆடிக் கொண்டிருந்த காலம் முதல்!" என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள் மிதுலா.

மேடமின் முகத்தைப் பார்க்கவே அவளுக்கு ஏனோ கஷ்டமாக இருந்தது. எவ்வளவு உழைத்து இந்தப் பத்திரிகையை நல்ல நிலைக்குக் கொண்டு வந்து இருக் காங்க.

பாவம் மேடம் என மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் அவள். சச்சித் மேல் கோபம் அதிகரித்தது.

"முப்பது வருடங்களாக இருக்கிறேன்!" என்றார் மாதவி.

"ஓ... தட் இஸ் நைஸ்..." என்று புன்னகைத்தான் சச்சித்.

இவனுக்குச் சிரிக்கக்கூடத் தெரியுமா என மனதினுள் நினைத்துக் கொண்டாள் அவள். அவன் சிரிப்பது ஏனோ புலியின் முகத்தை அவளுக்கு நினைவுபடுத்தியது.

"மே ஐ கம் இன்?" என்று ஒரு தட்டு நிறைய பிஸ்கெட்ஸ் தேநீர்க் கோப்பைகளுடன் உள்ளே நுழைந்தாள் ஹெலன்.

அங்கிருந்த மூவருக்கும் அவள் தேநீரையும், பிஸ்கெட் தட்டையும் நீட்டினாள்.

"தேங்க்ஸ்" என்று பிஸ்கெட்டைச் சுவைத்தபடியே மேலும் விவரங்களைச் சேகரிக்கத் தொடங்கினான் அவன்.

பின்பு ஆஃபீஸில் இருந்த எல்லாரையும் அவனுக்கு அறிமுகப்படுத்தத் தொடங்கினார் மாதவி. அடுத்த ஒரு மணி நேரம் அவன் அங்கே இருந்தவர்களிடம் சகஜமாகப் பேசுவதில் கழிந்தது.



"மேடம்! இப்ப உங்களுக்கு ஒரு அப்பாயின்ட்மென்ட் இருக்கு!" என்றாள் ஹெலன் மாதவியிடம்.

"ஓ... நல்ல காலம், ஞாபகப்படுத்தினாய். சச்சித், ஸாரி. எனக்கு ஒரு முக்கியமான அப்பாயின்ட்மென்ட் இருக்கிறது. மிதுலா உங்களைக் கவனித்துக் கொள்வாள்!" என்று சொல்லிவிட்டு வேகமாக அங்கிருந்து சென்றாள் மாதவி.

"உன் அறைக்கு போய்ப் பேசலாமா?" என்றான் உத்தரவு போடும் தொனியில் சச்சித்.

"போகலாமே..."

"வாவ்... இதுதான் உன் அறையா? இங்கிருந்து வியூ ரொம்ப அழகாக இருக்கிறது."

"உங்களுக்கு வேறு ஏதாவது பத்திரிகை பற்றி தெரிய வேண்டுமா ஸார்...?"

"யெஸ்... ஆனால் அதற்கு முன்னால் உன்னை ஒன்று கேட்க வேண்டும்."

"என்ன ஸார்..."

"எல்லாரிடமும் இப்படித்தான் பதிலுக்குப் பதில் பேசுவாயா... இல்லை... என்னிடம் மட்டுமா...?

அப்புறம் நீ பேசும்பொழுது மரியாதை மனதில் இருந்தால் போதும். அதனால் 'ஸார்' எல்லாம் வேண்டாம்."

"சரி... பத்திரிகை சம்பந்தமாக உங்களுக்கு என்ன தெரிய வேண்டும்?"

"அதற்கு மட்டும்தான் பதில் சொல்வாயா...?"

"ஆமாம்..."

"சரி... இந்தப் பத்திரிகையை முதல் நிலைக்குக் கொண்டு வர என்ன செய்ய வேண்டும்?

உன்னுடைய கருத்துகளைச் சொல்..."

"என்னது... என்னுடைய கருத்துகளா...?"

"தட்ஸ் ரைட். உன்னுடைய கருத்துகள்தான்."

"ஆனால் என் கருத்துகள் உங்களுக்கு எதற்கு?"

"உன்னைக் கருத்துகள் கேட்பதற்கு எனக்கு உரிமை இருக்கிறது.

நீதான் இங்கே துணை எடிட்டர். நாம் பேசிய கொஞ்ச நேரத்திலேயே எனக்குத் தெரிந்துவிட்டது, நீ புத்திசாலி என்று.

நீ திறமையாக வேலை பார்ப்பாய் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அதனால்தான் உன்னைக் கேட்கிறேன்.

உனக்கெனக் கருத்துகள் கண்டிப்பாக இருக்கும். சொல் மிதுலா."

"எனக்கு அவ்வப்பொழுது தோன்றும் கருத்துகளை நான் மேடமிடம் சொல்வேன்."

"அவர்கள் அதை எடுத்துக் கொள்ள மாட்டார்களே..."

"நான் அப்படிச் சொல்லவில்லையே..."

"நீ வெளிப்படையாகச் சொல்ல வேண்டாம். பத்திரிகையைப் பார்த்தாலே தெரிகிறது.



புதுமையாக எதுவுமே இல்லை. கடந்த பத்து ஆண்டுகளாக ஒரே மாதிரி இருக்கிறது."

"பட் பத்திரிகை வெற்றிகரமாக இருப்பதால் மக்கள் மனதில் இடம் பெற்றிருக்கிறது.

"நாம்தான் இரண்டாவது இடத்தில் இருக்கிறோம் தென் இந்தியாவில். வெற்றிக்கு இந்த ஃபார்முலாவே நன்றாக இருக்கிறது.

அதனால் மாற்றங்கள் தேவையில்லை என்பது என் கருத்து."

"இரண்டாவது இடத்தில் இருந்து முதல் இடத்திற்கு நம் பத்திரிகை வர வேண்டும் என்பது என் விருப்பம்!" என்று சொல்லும்பொழுது அவன் குரலில் பொறுமை இல்லை.

அவனைப் பார்த்தாள் மிதுலா. அவன் கண்களில் பிடிவாதம் தெரிந்தது. அவளை அறியாமல் ஒரு பெருமூச்சு அவளிடம் இருந்து பிறந்தது.

"ஸோ... உனக்கு என்னைப் பிடிக்கவில்ல. ஓ பேட். ஆனால் உனக்கு வேலை வேண்டும் என்றால் நீ இதை எல்லாம் பழகிக் கொள்ள வேண்டும்."

"நீங்கள்... நீங்களாக ஏதோ நினைத்துக் கொள்கிறீர்கள். நான் அப்படி..." என்று அவள் முடிக்கும் முன்பு அவன் குறுக்கிட்டான்.

"கமான் மிதுலா. உன்னுடைய முகம் நீ மனதில் நினைப்பதை அப்படியே காட்டிக் கொடுத்துவிடுகிறது."

அவள் திகைத்துப் போய் அவனைப் பார்த்தாள். "ம்... யெஸ். நான் வந்ததிலிருந்து கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன்.

யூ ஆர் பியூட்டிஃபுல் அண்ட் இண்டலிஜெண்ட். உன் கண்களில் இப்பொழுது தெரிவது என்ன தெரியுமா?"

"சந்தேகம்..."

"ம்... லுக். வேலை பார்க்கும் இடத்தில் சந்தேகம் இருக்கக்கூடாது. அதனால் நான் சொல்வது போல் செய்."

"என்ன..."

"நாம ரெண்டு பேரும் இன்னிக்கு லன்ச் சாப்பிடப் போறோம். வெளியே போய்ச் சாப்பிடலாம்."

"இஸ் இட் எ பிஸினெஸ் லன்ச்?"

"ஆமாம். வேற என்னவென்று நீ நினைத்தாய்? நீ தான் என்னைப் பற்றி நினைத்து, என்னைப் பற்றி 'இவன் இப்படித்தான்' என்று எண்ணங்களை உருவாக்கி இருப்பாயே?

உன்னைப் பொறுத்தவரை நான் ஒரு பக்கா பிஸினெஸ்மேன். என்னுடைய எல்லாச் செயல்களுமே பிஸினெஸில் பணத்தை அதிகப்படுத்துவதற்குத்தான் இருக்கும்.

என்ன, நான் சொல்வது எல்லாம் சரிதானே?" என்றான் கிண்டலாக.

"யெஸ்... எனக்குத் தெரிந்தவரை அப்படித்தான்."

அவன் அதைக் கேட்டுச் சிரித்தான்.

"சரி வா... இங்கே பக்கத்தில் உள்ள ஹோட்டலுக்குப் போய் லன்ச் சாப்பிட்டு விட்டு வரலாம்."

"பட் நான் லஞ்ச் எடுத்துக் கொண்டு வந்துவிட்டேன்."



"இட்ஸ் ஓ.கே. அதைக் கொட்டிவிடு."

"ஐயாம் ஸாரி. சாப்பாட்டை வீணடிப்பது எனக் பிடிக்காது. நான் இதை யாரிடமாவது கொடுத்துவி வருகிறேன்."

## 2

தீ
சுடவில்லை
உன்னைப்
பார்த்த
நாள்
முதல்
......
மார்கழி
குளிரவில்லை
உன்னைப்
பார்த்த
நாள்
முதல்
......
இரவு
பகல்
எல்லாமே
ஒரே
மாதிரியாக
உன்னைப்
பார்த்த நாள்
முதல்....

அடையாறு அருகில் இருந்த அந்த ஹோட்டலில் இருவரும் லன்ச் சாப்பிட்டுக் கொண்டே பத்திரிகை பற்றி பேசிக்கொண்டு இருந்தனர்.

"ஏன் இப்படிக் குறைவாகச் சாப்பிடுகிறாய்?"

"ம்... நிறையச் சாப்பிட்டால் தூக்கம் வரும்."

"ம்... உனக்கு வேண்டுமானால் மதியம் லீவ் தருகிறேன். பெய்ட் லீவ். சம்பளத்துடன் கூடிய விடுமுறை."

"தேங்க்ஸ். அது வேண்டாம் எனக்கு. அப்புறம் இந்த மாதிரி சலுகைகள் எனக்கு வேண்டாம்.

அதையே சாக்காக வைத்து அப்புறம் டிஸ்மிஸ் செய்தாலும் செய்வீர்கள்."

"உன்னை நான் அப்படி எல்லாம் செய்ய மாட்டேன். உன்னை வெளியே சாப்பிட அழைத்து வந்ததற்குக் காரணமே நம்முடைய 'வொர்க்கிங் ரிலேஷன்ஷிப்பை'ச் சீராக்குவதற்கே."

"ம்... அப்படியா? தேங்க்ஸ். பட் நல்ல உணவு எனக்கு ஏற்ற லஞ்சம் என்று நினைக்கிறீர்களா?"

"ஓ... அப்ப இது இல்லை உனக்குப் பிடித்தது. ம்... வேறு என்ன செய்தால் உனக்குப் பிடிக்கும்?" என்றான் கண்களில் குறும்பு மின்ன சச்சித்.

"எனக்குத் தெரியவில்லை. இதுவரை யாரும் இப்படிப் பேசியது இல்லை. செய்ததும் இல்லை."

"என்னைச் செய்யும்படி நீ தூண்டுகிறாய்."

"நோ... தட் இஸ் நாட் மை இன்டென்ட்."



"ஓ.கே. போகலாமா?" என்று சொன்ன குரலில் தெரிந்த கோபம் அவளுக்குப் புதிதாகத் தோன்றவில்லை.

ஏதும் பேசாமல் கார் ஓட்டிக் கொண்டிருந்தவனின் முகத்தில் தெரிந்த இறுக்கம் அவளுக்குப் பயத்தை வரவழைத்தது.

அவன் கண்களில் தெரிந்த பிடிவாதம், கோபம் இதெல்லாம் அவளுக்கும் எரிச்சலை வரவழைத்தது.

ஆஃபீஸில் இருவரும் சேர்ந்தபடி வருவதைப் பார்த்த ஹெலனின் கண்களில் ஆச்சரியம் தெரிந்தது.

"தேங்க்ஸ் ஃபார் தி லன்ச்!" என்றாள் மிதுலா, வலிய வரவழைத்த புன்னகையோடு.

"ம்... இட்ஸ் மை பிளஷர்!" என்று அவளைப் பார்க்காமல் முணுமுணுத்தான் சச்சித்.

இவனுடன் வேலை பார்ப்பது கஷ்டம் என்று ஒரு எண்ணம் அவள் மனதை அரித்தது.

"மிதுலா... என்ன, பாஸோட அவுட்டிங்கா?" என்றாள் ஹெலன்.

"ஏய்... நத்திங். லன்சிற்குப் போனோம். தட்ஸ் ஆல்."

"ம்... நம்பிட்டேன்!" என்று குறும்பாகக் கண் அடித்தாள் ஹெலன்.

"கமான் ஹெலன், நீ நினைக்கற மாதிரி ஏதும் இல்லை. அதோடு ஹி இஸ் நாட் மை டைப்."

அடுத்த ஒரு வாரம் ஆஃபீஸில் பெரிதாக மாற்றம் இல்லை. ஆனால் சச்சித் அடிக்கடி அங்கே தென்பட்டான்.

அவன் இருப்பதாலேயே எல்லோரும் கூடுதலாக வேலை பார்த்தனர். அதுவே அவன் வெற்றியின் ரகசியம் என்று தன் மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் மிதுலா.

எல்லாருக்கும் அவன் அங்கே இருப்பது பழகிவிட்டது. ஆனால் மிதுலாவிற்கு மட்டும் அவன் அடுத்து என்ன செய்யப் போகிறான் என்பதே சஸ்பென்ஸ் மாதிரி இருந்தது.

"மிதுலா, என் அறைக்கு வா," என்று மாதவி அவள் அருகே வந்து சொல்லவும் கணினியில் இருந்து பார்வையைத் திருப்பினாள் மிதுலா.

"சரி மேடம்," என்றாள்.

ஏதோ சரியில்லை என்று அவள் உள்ளுணர்வு சொல்லியது. தன் டைரியை எடுத்துக் கொண்டு மேடமின் ரூம் நோக்கிச் சென்றாள் அவள்.

"உட்கார் மிதுலா... நான் ராஜினாமா செய்ய முடிவு செய்துள்ளேன். இது என் மீது திணிக்கப்பட்ட முடிவு இல்லை.

சச்சித் இஸ் யங். நிறையப் புதுமையான கருத்துகளையும், புதிய முயற்சிகளையும் அவன் பத்திரிகையில் செய்ய விரும்புகிறான்.

எனக்கு அதில் உடன்பாடு இல்லை. அதனால்தான் நான் இந்த முடிவிற்கு வந்தேன்.

சச்சித் இஸ் எ நைஸ் பெர்ஸன். ராஜினாமா மூலம் எனக்கு நல்ல பணம் கிடைக்கும். அதைத் தெளிவாக விளக்கினான் சச்சித்.



'கோல்டன் ஹாண்ட் ஷேக்' இது என்னைப் பொறுத்தவரை. நான் வேறு ஏதாவது பத்திரிகை நிறுவனத்தில் வேலை பார்க்க முடிவெடுத்துள்ளேன்.

பகுதி நேர வேலை மாதிரி பார்ப்பது போல் யோசிக்கிறேன். கொஞ்சம் லைட்டான ரோலாக எடுக்கப் போகிறேன்."

அதைக் கேட்ட மிதுலாவிற்கு அதிர்ச்சியாக இருந்தது. ஆனால் என்ன சொல்வது என்று புரியாமல் திகைத்தாள் அவள்.

வேலை அதுவும் மேடமின் அனுபவத்திற்கும், வயதிற்கும் ஏற்ற வேலை கிடைப்பது கஷ்டம் என்று மிதுலாவிற்குத் தெரியும்.

இந்த மாதிரி ஒரு நிலைமைக்கு மேடமை ரொம்ப சாமர்த்தியமாகத் தள்ளி இருக்கிறான் சச்சித் என்று அவளுக்குப் புரிந்தது.

"ஆல் தி பெஸ்ட் மேடம். இது எனக்கு அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் கலந்து கொடுக்கிறது!" என்றாள் மெதுவாக.

மாதவியின் இதழ்களில் புன்னகை படர்ந்தது. "தேங்க்ஸ் மிதுலா. காலம் எல்லாவற்றையும் மறக்கச் செய்யும்.

அப்புறம் சச்சித் உன்னுடன் பேச வேண்டும் என்று சொன்னான். யூ கோ அண்ட் மீட் ஹிம் நவ்."

"சரி மேடம்," என்று மேடமின் அறையிலிருந்து வெளிவந்தாள் மிதுலா.

வந்த கொஞ்ச நாட்களிலேயே சச்சித் அவனுடைய வேலையைக் காட்டத் தொடங்கி விட்டான் என்று நினைத்த படியே அவனுடைய அறைக் கதவை தட்டிவிட்டு உள்ளே நுழைந்தாள்.

"யெஸ் மிதுலா... மாதவி மேடம் உன்னிடம் அவர்கள் ரிடையர் ஆவது பற்றி பேசினார்கள்தானே?"

"யெஸ்..."

"ம்... உனக்கு அதில் சந்தோஷம் இல்லை போலத் தெரிகிறதே..."

"நான் ஏன் சந்தோஷப்பட வேண்டும்? மேடம் ஒரு நல்ல பாஸ். திறமையான எடிட்டர். எ குட் ஃபிரெண்ட். எனக்கு அவர்களிடம் வேலை பார்க்க எப்பவுமே பிடிக்கும்."

"திறமையான எடிட்டர். பட் கருத்துகள் எல்லாமே பழமையாக இருக்கின்றன. மே பி ஷீ இஸ் ஓல்ட்."

"ஐம்பத்திரண்டு வயது ரொம்ப ஓல்ட் இல்லை. அறுபது வயது தான் ரிடையர்மெண்ட் வயது.

நீங்கள் அவர்களுக்கு இன்னொரு வாய்ப்புக் கொடுக்கக் கூடாதா... ப்ளீஸ்!"

"நான் வாய்ப்புக் கொடுத்தேன். ஆனால் அவர்கள் மறுத்துவிட்டார்கள். செட்டில்மெண்ட் பணம் அவர்களுக்கு அதிகமாகக் கொடுக்க முடிவு செய்துள்ளேன்.

அதைப் பற்றி அவர்களிடமும் பேசினேன். ஷீ இஸ் ஹாப்பி. அதனால் நாம் இதைப் பற்றி மேலும் பேச வேண்டாம்.



அடுத்து லைனில் இருப்பது நீதான். அது உனக்கே தெரியும்."

"எதற்கு, வேலையை ராஜினாமா செய்வதற்கா?"

"இல்லை... எடிட்டர் ஜாபிற்கு."

ஒரு சில நிமிடங்கள் அங்கே மௌனம் நிலவியது.

"எனக்கு இந்தப் பொறுப்பை அளிக்கிறீர்களா?"

"யெஸ். உனக்கு எடிட்டர் வேலைக்கு என்னென்ன தேவை என்பது நன்றாகத் தெரியும்.

உனக்குச் சம்பள உயர்வும் உண்டு. கூடுதல் பொறுப்புகளும் உண்டு."

"எவ்வளவு சம்பள உயர்வு இந்தக் கூடுதல் பொறுப்பிற்கு எனக்குத் தருவதாக முடிவு செய்துள்ளீர்கள்?"

கேட்ட பின்புதான் தப்பு என்று புரிந்தது அவளுக்கு. அன்று பேசிய 'லஞ்சம்' அவள் மனதில் நிழலாடியது. குற்ற உணர்வோடு அவன் முகத்தைப் பார்த்தாள் அவள்.

ஆனால் அவன் முகத்தில் கோபத்திற்குப் பதிலாக ஒரு புன்னகை இருப்பதைப் பார்த்து ஆச்சரியமடைந்தாள் அவள்.

அவன் சொன்ன சம்பள உயர்வைக் கேட்டு அவள் பிரமித்தாள்.

"சொல் மிதுலா... இதில் உனக்கு விருப்பம்தானே? இந்தப் புதிய பொறுப்பேற்க உனக்குச் சம்மதம்தானே?"

"ம்... நான் யோசிக்க வேண்டும்."

"ஓ.கே. இரண்டு நாள் டைம் எடுத்துக் கொள். அதற்கு மேல் என்னால் தர முடியாது."

இரண்டு நாள் கழித்து உன் முடிவைச் சொல். இப்பொழுது நீ போகலாம்."

"தேங்க்ஸ்..." என்று சொல்லிவிட்டு அறையிலிருந்து வெளியே வந்தாள் மிதுலா.

அவன் சொன்னதையே அவள் மனம் அசை போட்டபடி இருந்தது. அவனுக்கு என்ன முடிவு சொல்வது என்று யோசித்தபடியே இருந்தாள் அவள்.

யோசனையில் மூழ்கி இருந்தவளைக் கலைத்தது அவளது செல்ஃபோன் ரிங்டோன்.

திரையில் 'தீபக்' என்று ஒளிர்ந்தது.

"சொல் தீபக்..."

"ம்... நாளையிலிருந்து நான் சிங்கப்பூர் செல்ல வேண்டும். ஒரு வாரம் அங்கே தான் இருக்க வேண்டும்.

அங்கே 'ஸ்போர்ட்ஸ் மீட்' நடக்கிறது. என் பத்திரிகை சார்பாக நான் அதைக் கவர் செய்யப் போகிறேன்."

"தட்ஸ் குட். என்ஜாய் தீபக்."

"ம்... இன்னிக்கு ஈவினிங் உன்னைச் சந்திக்கலாம் என்று நினைத்தேன்.

உன்னால் வர முடியுமா? கடற்கரையை ஒட்டி உள்ள ரெஸ்டாரெண்டிற்கு..."

"ம்... இன்னிக்கா?"

"ப்ளீஸ் மிதுலா."

'சரி... தி பாம் ட்ரீ ரெஸ்டாரெண்டில் பார்க்கலாமா?"



"தட்ஸ் நைஸ். எத்தனை மணிக்குப் பார்க்கலாம்? இரவு எட்டு மணி என்றால் உனக்கு ஓ.கே.வா..."

"ஐயாம் ஃபைன் வித் தட். பை தீபக்!" என்று சிவப்பு பட்டனை அழுத்தினாள் அவள்.

தீபக் அவளுக்கு நல்ல ஃபிரெண்ட். 'தி ஹாலிடே' பத்திரிகையில் வேலை பார்த்து வந்த அவனை ஒரு பத்திரிகை மாநாட்டின் போது சந்தித்தாள் மிதுலா.

அதற்குப் பின்பு இருவரும் அடிக்கடி சந்தித்துப் பேசிக் கொண்டனர். ஒரே துறையில் இருந்ததால் இருவருக்கும் பேசுவதற்கு நிறைய விஷயங்கள் பொதுவானதாக இருந்தன.

தீபக்கிடம் கூட 'எடிட்டர் ஜாப்' பற்றி கருத்துக் கேட்கலாம் என்று நினைத்துக் கொண்டாள் மிதுலா.

பத்திரிகையின் ஃப்ரூப் ரீடிங்கை முடித்தாள் அவள். 'தி ஹோம்' செக்ஷனின் டிஸைனை மாற்றினாள். பின்பு அதை மாதவி மேடமிற்கும், சச்சித்திற்கும் ஈமெயிலாக அனுப்பினாள்.

சுவர்க் கடிகாரம் மணி ஏழு என்று காட்டியது. இப்பொழுது கிளம்பினால் தீபக்கை டின்னருக்கு மீட் செய்யலாம் என்று மனதிற்குள் நினைத்தபடியே கணினியை அணைத்தாள்.

பார்க்கிங் ஸ்லாட்டிலிருந்து தன் ஸ்கூட்டியைக் கிளப்பினாள் அவள். அடுத்த பத்து நிமிடத்தில் தன் வீட்டில் இருந்தாள் அவள்.

வீட்டிற்குச் சென்றவள் வியர்வைக் கசகசப்பு போகக் குளித்துவிட்டு வந்தாள். ஒரு பிங்க் லாங் ஸ்கர்ட்டும், நீல நிற டாப்ஸும் அணிந்து கொண்டாள், அவள்.

தன்னுடைய கூந்தலை வழக்கமான போனி டெயிலிற்குள் அடக்கினாள். லேசான ஒப்பனையோடு கதவைப் பூட்டிவிட்டுக் கிளம்பினாள் அவள்.

ரெஸ்டாரண்டில் அவளுக்காகக் காத்துக்கொண்டு இருந்தான் தீபக்.

"ஹாய் மிதுலா. கம். உட்கார் இங்கே."

"ஹாய் தீபக்... வந்து ரொம்ப நேரம் ஆச்சா?"

"நோ.. ஒரு ஃபைவ் மினிட்ஸ் முன்னாடிதான் நான் வந்தேன்.

அப்புறம் வேலை எல்லாம் எப்படி இருக்கு?"

"ம்... அதைப் பற்றி உன்னிடம் கருத்துக் கேட்கலாம் என்றுதான் வந்தேன்."

"என்ன ஆச்சு? எனி ப்ராப்ளம்?"

"ப்ராப்ளம் எல்லாம் இல்லை. எங்க பத்திரிகையின் எடிட்டர் மாதவி மேடம் தானாக ரிஸைன் செய்வதாகச் சொன்னார்கள்..."

"ஓ... அப்படியா? ஸோ... சச்சித் தன் வேலையை ஆரம்பித்து விட்டான்."

"ம்... மேடம் தானாக ரிஸைன் செய்வதாகச் சொன்னார்கள்."

"சரி... அது அவர்களுடைய ப்ராப்ளம். உனக்கு இதில் என்ன கஷ்டம்?"



"ம்... கஷ்டம் இல்லை. சச்சித் இந்த எடிட்டர் போஸ்ட்டை எனக்குத் தருவது பற்றி பேசிக் கொண்டிருந்தான்."

"வாவ்! நீ சரி என்று சொல்லிவிட்டாய்தானே!"

"இல்லை தீபக். என்னவோ ரொம்ப சந்தர்ப்பவாதி போல் இருக்க எனக்கு மனம் இடம் கொடுக்கவில்லை."

"ஏன் இப்படி எல்லாம் நினைக்கிறாய் மிதுலா? மாதவி மேடம் இதற்கு ஒன்றும் சொல்ல மாட்டார்கள்.

சொன்னாலும் நீ அதைக் கண்டுகொள்ள வேண்டாம். அவர்கள் உன் பாஸ் இல்லை இனிமேல்..."

"சே... சே... மேடம் அப்படி எல்லாம் கிடையாது. ஷீ இஸ் எ குட் வுமன்."

"நீ இதை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் புதிதாக வேறு யாரையாவது நியமிப்பார்கள்."

"யெஸ்... கரெக்ட்..."

"அதற்கு நீயே இதை ஏற்றுக் கொள்ளலாமே. வாட் இஸ் தி ப்ராப்ளம்?"

ஏனோ தான் சம்பளத்தை பற்றி சச்சித்தோடு பேசியது அவளின் நினைவுக்கு வந்தது.

நல்ல சம்பள உயர்வு. கண்டிப்பாக அம்மாவிற்கும் தம்பிக்கும் ரொம்ப உதவியாக இருக்கும். ஆனால் ஏனோ ஒரு உணர்வு அவளை நிம்மதி யில்லாமல் ஆட்டிப் படைத்தது.

பணம் கொடுத்து சச்சித் என்னை அவன்பால் இழுக்கிறானா என்று ஒரு எண்ணம் ஒரு நொடி அவள் மனதில் தோன்றியது.

"இந்தச் சம்பள உயர்வு எனக்கு ரொம்ப தேவை தீபக்."

"ம்... பணம் எல்லாருக்கும் தேவை மிதுலா."

"ம்... ஆனால் ஏனோ குழப்பமாக இருக்கிறது."

"ஏன் சச்சித்தைப் பார்த்துத் தயங்குகிறாயா?"

"யெஸ்... சம்திங் அபவுட் ஹிம் பாதர்ஸ் மீ."

"நீ பயப்பட வேண்டாம். சச்சித் இப்பொழுது நீனா என்ற அழகியோடு பிஸியாக இருக்கிறான்."

"நீனா... 'தி ஃபேமஸ்' பத்திரிகையை நடத்துபவரின் பெண்தானே அவள்.

பட் ஷி இஸ் மேரீட்."

"அது போன வாரத்துச் செய்தி. லேட்டஸ்ட் நியூஸ். என்ன தெரியுமா? அவளுடைய கணவனை அவள் விவாகரத்து செய்யப் போகிறாள்.

பின்பு சச்சித்தோடு திருமணம் நடக்கும் என்று எல்லாரும் நினைக்கிறோம். ஸோ நீ பயப்படாமல் இந்த எடிட்டர் வேலைக்குச் 'சரி' சொல்லிவிடு."

"தேங்க்ஸ் தீபக். உன்னிடம் பேசிய பின்பு ஐ ஃபீல் பெட்டர்."

அதற்குள் ஆர்டர் செய்த உணவு வகைகள் வந்துவிட அதைச் சாப்பிடத் தொடங்கினர் இருவரும்.



"தேங்க்ஸ் மிதுலா. சிங்கப்பூரிலிருந்து உனக்கு என்ன வேண்டும் சொல். நான் வாங்கி வருகிறேன்."

"ஓ... தேங்க்ஸ் தீபக். யூ ஆர் நைஸ். எனக்கு எதுவும் வேண்டாம்."

"உன்னிடம் கேட்டால் இந்தப் பதில்தான் வரும் என்று எனக்குத் தெரியும்.

நான் பார்த்துக் கொள்கிறேன். சரி மிதுலா, கிளம்பலாமா?"

"ம்... தேங்க்ஸ் ஃபார் தி டின்னர். போன் வாயேஜ்!" என்றாள் புன்னகையோடு மிதுலா.

வீட்டை நோக்கி ஸ்கூட்டியில் செல்லும்பொழுது அவள் மனம் தீபக் சொன்ன விஷயத்தை அசை போட்டது.

நீனாவை அவள் நிறைய விழாக்களில் பார்த்திருக்கிறாள். நல்ல அழகான பெண். ரொம்ப பந்தா இல்லாமல் கூலாக இருப்பாள்.

நீனாவின் அப்பா கோடீஸ்வரர்.

சச்சித் எல்லா முடிவுகளையும், பிஸினெஸ் மற்றும் பணம் இவற்றுக்குச் சாதகமாகத்தான் எடுப்பான்.

அதனால் அவன் திருமண முடிவும் அப்படித்தான் இருக்கும். அவன் எப்படிப் போனால் எனக்கென்ன என்று நினைத்தபடியே பூட்டைத் திறந்தாள் அவள்.

# 3

நீ
அங்கே
சுகமா?
....
உன்
செல்ல
நாய்க்குட்டி
சுகமா?
....
உன்
தோட்டத்து
ரோஜாக்கள்
சுகமா?
நீயும்
நானும்
பேசிய
அந்த
நாள்
என்
நினைவில்
சுகமாக
இருக்கிறது!
நிஜமான
நீயும் நானும்
சுகமா?



**அ**டுத்த நாளே சச்சித்திடம் தன் சம்மதத்தைச் சொல்லி விட வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள் மிதுலா.

அவன் அறையின் முன் நின்றபடி யோசித்துக் கொண்டு இருந்தாள் அவள்.

"மிதுலா, நீ உள்ளே போகலாம். பாஸ் ஃப்ரீயாகத் தான் இருக்கிறார்," என்றாள் ஹெலன்.

"தேங்க்ஸ்" என்று சொல்லிவிட்டு அறையினுள் சென்றாள் மிதுலா.

"வா... மிதுலா. ஸிட் டவுன்."

"நான் எடிட்டராகக் கூடுதல் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள முடிவு செய்துள்ளேன்."

"தட்ஸ் குட். முடிவை உடனே சொன்னதற்கு நன்றி. இரண்டு நாட்களுக்கு முன்பே சொல்லிவிட்டாயே.

சரி. நீ இன்றைக்கு ஃப்ரீயாகத்தானே உள்ளாய்?"

"ஏன்..."

"உன்னை வெளியே அழைத்துச் செல்லலாம் என நினைக்கிறேன்.

இந்தப் பொறுப்பை நீ ஏற்றுக் கொண்டதற்கு உனக்கு நன்றி தெரிவிக்கத்தான். டின்னர் போகலாம் என நினைத்தேன்."

"இல்லை... அதெல்லாம் வேண்டாம்."

"இதுவும் பிஸினெஸ் சம்பந்தப்பட்டதுதான். புதிதா நான் ஒரு எடிட்டரைத் தேடிக் கண்டுபிடிக்க கொஞ்சம் நா ஆகும்.

அதற்கு விளம்பரம் கொடுக்க வேண்டும். நேர்மு தேர்வு வைக்க வேண்டும். சேரும் புதிய ஆள் நம்மோ கம்பெனிக்கு ஸெட் ஆக வேண்டும்.

இந்த வேலைகளில் இருந்து என்னை நீ காப்பாற் இருக்கிறாய். அதற்குத்தான். அதனால் நீ வருகிறாய்."

"இது கட்டளையா ஸார்?"

"ம்... யெஸ். அதோடு நீ என்னை சச்சித் என் கூப்பிட வேண்டும். இதுவும் என் ஆர்டர்."

"ஓ.கே..."

"உன் அட்ரெஸ் சொல். நான் வந்து உன்னைப் பி அப் செய்கிறேன்."

"இல்லை. நானே வந்து விடுவேன். இடம் மட்டு எங்கே என்று சொல்லுங்கள்."

"இந்தா. இதில் உன் முகவரியை எழுதிக் கொடு.

ஏழு மணிக்கு வந்து நான் உன்னை பிக் அ செய்கிறேன். தயாராக இரு."

பல்லைக் கடித்துக்கொண்டு முகவரியை எழுதி அங் வைத்துவிட்டு அறையிலிருந்து வேகமாக வெளியேறினா அவள்.

'என்ன திமிர் இவனுக்கு. சர்வாதிகாரி போல் அல்லவ நடந்து கொள்கிறான். நீனா நான் அவனுடன் வெளியே செல்வதைப் பார்த்தால் என்ன நினைப்பாள்?



இவனிடம் சண்டை பிடிப்பாளா? சான்ஸே இல்லை. சண்டை போட்டாலும் இவன் சரிக்கட்டி விடுவான். இது பிஸினெஸ் முன்னேற்றத்திற்காகச் செய்வது.

ஆஃபீஸில் வேலை செய்யும் ஸ்டாப் சந்தோஷமாக இருக்க வேண்டும். அதற்குத்தான் இந்த டின்னர் என்று சொல்லிச் சமாளித்துவிடுவான்' என்று நினைத்தபடியே கணினியில் மூழ்கினாள் அவள்.

அன்றே அவள் எடிட்டராகப் பொறுப்பேற்பது பற்றி சச்சித் மாதவி மேடமிடம் பேசினான். ஏனோ அவளுக்கு மேடமைப் பார்க்கக் கூச்சமாக இருந்தது.

"கங்கிராட்ஸ் மிதுலா. நீ நல்ல முடிவு எடுத்திருக்கிறாய். ஐ யாம் ஹாப்பி!" என்று புன்னகையோடு சொன்னாள் மாதவி.

"தேங்க்ஸ் மேடம்!" என்றாள் நிம்மதியான மனதுடன் மிதுலா.

ஆஃபீஸில் இருந்த மற்ற ஸ்டாஃப் எல்லோரும் இந்த மாற்றத்தை உற்சாகமாக வரவேற்றது அவள் மனதிற்கு நிம்மதியை அளித்தது.

மாதவி மேடம் அவளிடம் தன் வேலையைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்தார். பெரும்பாலான வேலைகள் அவளுக்குப் பழக்கமானவையாகத்தான் இருந்தன.

முற்றிலும் புதிதாகத் தோன்றியதை எல்லாம் எப்படிச் செய்ய வேண்டும் என்று கவனமாகக் குறிப்பெடுத்துக் கொண்டாள் அவள்.

கைகடிகாரத்தைப் பார்த்தாள் மிதுலா. ஆறு மணி என்று காட்டியது அது. மாதவி மேடம் எல்லாப் பொறுப்புக்களையும் தன்னிடம் ஒப்படைத்துவிட்டார்கள் என்று நினைத்தபடியே பெருமூச்சுவிட்டாள் அவள்.

சச்சித் டின்னருக்கு அழைத்தது அவள் நினைவுக்கு வந்தது. இப்பொழுது கிளம்பினால் கரெக்ட்டாக இருக்கும்.

ஏனோ இதயத்துடிப்பு அதிகரிப்பது போல் தோன்றியது அவளுக்கு. சச்சித் வீட்டிற்கு வேறு வருகிறானே...

சே... ஏன் இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறான். நினைத்ததை முடித்துக் கொள்வான் போல என நினைத்த படியே வீட்டை அடைந்தாள்.

கை, கால், முகம் கழுவிவிட்டு, சேரில் உட்கார்ந்தாள் அவள். என்ன உடை உடுத்துவது எனக் குழம்பினாள்.

ஒரு பச்சை நிற டாப்ஸும், வெள்ளை நிற லாங் ஸ்கர்ட்டும் அணிந்து கொண்டாள். தலைமுடியை போனி டெயிலிற்குப் பதிலாக விரித்துவிட்டு ஒரு கிளிப்பை மேலே பொருத்தினாள்.

காலிங் பெல் சப்தம் கேட்டது. மணி சரியாக ஏழு. சரியான 'டிஜிடெல் க்ளாக்'தான் என நினைத்தபடியே கதவருகே சென்றாள்.

தான் பதட்டமாக இருப்பது அவளுக்குப் புரிந்தது. ஒரு ஆழ்ந்த மூச்சை உள்ளிழுத்தாள் அவள். பின்பு கதவைத் திறந்தாள்.

"ஹாய் மிதுலா!" என்றான் சச்சித்.



"ஹலோ... வாங்க உள்ளே. ஒரு ரெண்டு மினிட்ஸ். நான் கிளம்பிடறேன்."

"ம்... டேக் யுவர் டைம். எனக்குக் குடிக்கத் தண்ணீர் கிடைக்குமா?"

"ஓ... ஸாரி... இதோ!" என்று சொன்னபடியே ஃபிரிட்ஜ் அருகே சென்றாள்.

"ஒன் மினிட்" என்று அவள் கையைப் பற்றியவன் அவள் முதுகில் கை வைத்தான்.

திடுக்கிட்டுத் திரும்பிய மிதுலா, அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

"கையை விடுங்க. சே... இப்படி பிஹேவ் செய்ய உங்களுக்கு அசிங்கமாக இல்லை?" என்று சீறினாள்.

"காட்... உன் டாப்ஸில் ஜிப் பாதியில் மாட்டிக்கொண்டு இருந்தது. அதைச் சரியாகப் போட முயன்றேன்.

ஆனால் உன் மனதில் வேறு எண்ணம் இருக்கிறது போல. அதான் நீ அப்படி நினைக்கிறாய்."

அவன் சொன்னதைக் கேட்டு அவமானத்தால் அவள் முகம் சிவந்தது.

"ஐயாம் ஸாரி!" என்று முணுமுணுத்தாள் அவள்.

ஃபிரிட்ஜில் இருந்த தண்ணீர் பாட்டிலை அவனிடம் நீட்டினாள்.

அவன் ஏதும் சொல்லாமல் அதை வாங்கிக் கொண்டான். தன்னை நினைத்து அவளுக்கு அவமானமாக இருந்தது.

சே! அவன் என்னைப் பற்றி என்ன நினைத்திருப்பான் என்று மனதிற்குள் வருந்தினாள் அவள். ஆமாம், உடை சரியில்லை என்றால் அதை அவளிடம் சொல்லி இருக்க வேண்டியதுதானே.

அதை விட்டுவிட்டு அவன் ஏன் கையை வைக்க வேண்டும் என்று அவள் மனம் எதிர்க் குரல் கொடுத்தது.

அங்கே இருந்த மௌனம் ஏனோ அவள் இதயத் துடிப்பை அதிகரித்தது.

தன் அறைக்குள் சென்றவள் உடை எல்லாம் சரியாக உள்ளதா என்று பார்த்துவிட்டுப் பின்பு வெளியே வந்தாள்.

"போகலாமா மிதுலா...?"

"யெஸ்... ஐயாம் ரெடி."

காரில் போகும்பொழுது அவன் பேசாமல் கார் ஓட்டிக் கொண்டு இருப்பதை அவள் கவனித்தாள்.

தன் மேல் அவனுக்குக் கோபம் என்று அவளுக்குப் புரிந்தது. கோபப்பட்டால் எனக்கென்ன? நான் ஸாரியும் சொல்லியாகி விட்டது.

சட்டென அப்படிக் கை வைத்தது சரியா என்ன என்று தனக்குத் தானே பேசிக் கொண்டிருந்தாள் மிதுலா.

பெசன்ட் நகர் பீச்சை ஒட்டி இருந்த அந்த உயர்ரக ஹோட்டல் முன் காரை நிறுத்தினான் அவன்.

அவள் இறங்குவதற்காகக் கதவைத் திறந்தபடியே பிடித்துக் கொண்டு நின்றான் அவன். கீழே இறங்கிய அவளை வரவேற்றது கடற்கரைக் காற்று.



"கொஞ்ச நேரம் நடக்கலாமா? உனக்கு ஆட்சேபனை இல்லையே...?"

"எனக்கு ஏதும் இல்லை."

கடற்கரையில் அன்று அவ்வளவாகக் கூட்டம் இல்லை. குழந்தைகள் கடற்கரை மணலில் பந்து வைத்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

மணலில் வெறும் காலோடு நடக்க வேண்டும் என்று அவளுக்கு ஆசையாக இருந்தது.

"ஒரு செகண்ட்..." என்று சொல்லியபடியே ஸ்லிப்பரைக் கையில் எடுத்தாள்.

"ஏய் என்ன திடீர்னு... நான் ஒண்ணுமே செய்ய வில்லையே!" என்று பதறினான் அவன்.

அவள் கலகலவெனச் சிரித்தாள்.

"வெறும் காலில் நடக்க வேண்டும் என்று ஆசையாக இருந்தது... அதனால்தான்" என்றாள் சிரித்தபடியே அவள்.

"காட்... நான் ஒரு நிமிஷம் பயந்து போய்ட்டேன். உன் வீட்டில் நடந்ததற்கு லேட்டாக பனிஷ்மெண்ட் கொடுக் கிறாயா?" என்றான்.

அங்கே நடந்ததை நினைத்தபொழுது அவள் முகம் அவளை அறியாமல் சிவந்தது.

"ஸாரி... நான் உன்னிடம் உன் உடை பற்றிச் சொல்லி இருக்க வேண்டும்.

அதற்குப் பதிலாக நானாக அப்படி 'ஜிப்' போட முயன்றதால் நீ என்னைத் தப்பாக நினைத்துவிட்டாய்.

ஐயாம் ஸாரி மிதுலா. யூ ஆர் அன் அட்ராக்டிவ் கேர்ள். அதனால் நீ அப்படிச் செய்தது சரிதான்.

பட் நான் ஒன்றும் அவ்வளவு மோசமானவன் இல்லை. சட்டென ஒரு பெண் மேல் கை வைப்பதற்கு..."

"ம்... சரி... நாம் இனி அதைப் பற்றிப் பேச வேண்டாமே..."

"சரி... ஓ.கே... போகலாமா?"

கடற்கரை மணலில் நிலவின் ஒளியில் நடப்பது நன்றாக இருந்தது அவளுக்கு. காலில் ஏதோ குத்தியது போல் தோன்ற, சட்டென நின்றாள் அவள்.

"ஸ்... ஆ!" என்று முணுமுணுத்தாள் அவள்.

"எ... என்ன ஆச்சு?"

"காலை ஏதோ குத்திடுச்சின்னு நினைக்கிறேன்."

"இரு... ஒரு நிமிஷம்..." என்று கீழே உட்கார்ந்தான்.

அவள் காலைத் தன் கையில் ஏந்தினான் அவன்.

"மிதுலா... என் தோளைப் பிடிச்சுக்கோ. இல்லாட்டி அப்படியே உட்கார்!" என்றவன் அவள் தோளைப் பிடித்து அவள் உட்கார உதவி செய்தான்.

பின்பு அவள் காலை எடுத்துத் தன் மடியில் நீட்டி செல்லில் இருந்த வெளிச்சம் வழியாகக் குதிகாலைக் கூர்ந்து கவனித்தான்.

அவன் கையில் தன் கால் பாதம் இருப்பது ஏனோ அவளுக்குக் கூச்சமாக இருந்தது. அவனின் தொடுகை அவளுள் ஏதோ ஒரு உணர்வை ஏற்படுத்தியது.



"ஒன்றும் இல்லை... லீவ் இட்."

"இல்லை மிதுலா... லேசாக இரத்தம் வருகிறது. நான் போய் காரிலிருந்து முதல் உதவிப் பெட்டியை எடுத்து வருகிறேன்..."

"நோ... நத்திங். என்னால் நடக்க முடியும்."

"சொன்னதைக் கேள். நீ இங்கேயே இரு. இல்லாவிட்டால் இன்னொரு வழி உள்ளது."

"என்னது அது?"

"சினிமாவில் வருவது போல் நான் உன்னைத் தூக்கிச் செல்கிறேன் கார் வரை!" என்றான் கண்களில் குறும்பு மின்ன.

"நான் இங்கேயே இருக்கிறேன்."

"தட்ஸ் எ குட் கேர்ள். ஒரு செகண்ட்," என்று சொல்லி விட்டு ஓட்டமும் நடையுமாகக் காரை நோக்கிச் சென்றான்.

அவனின் அக்கறை அவளுக்குப் பிடித்தது. அவன் வேகமாகச் செல்வதையே பார்த்தபடி இருந்தாள் அவள். காலில் கல் குத்தியிருக்குமா, இல்லை கண்ணாடி ஏதேனும் குத்தியிருக்குமா என நினைத்தபடியே இருந்தாள் அவள்.

ஐந்து நிமிடத்தில் திரும்பி வந்தவன் நெற்றியில் வியர்வைப் பூக்கள். கைகளில் முதலுதவிப் பெட்டி இருந்தது.

"ம்... இப்ப இரத்தக் கசிவு குறைந்திருக்கு!" என்று சொல்லியபடியே அவள் காலைத் தன் மடியில் வைத்தபடி அடிபட்ட இடத்தில் பஞ்சை வைத்து அழுத்தினான்.

"நானே டிரெஸ் செய்து கொள்கிறேன்," என்று காலை இழுக்க முயன்றாள் அவள்.

அவன் கைகள் அவள் காலைக் கெட்டியாகப் பிடித்தன.

"அசையாமல் இரு மிதுலா... பேண்டேஜ் மட்டும் போட்டு விடுகிறேன்."

வெள்ளைத் துணியை நேர்த்தியாக வெட்டி, அவன் தன் காலில் போடுவதை அவள் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

"ம்... இப்ப வலி எப்படி இருக்கு?"

"வலியா... இட்ஸ் கான். போயே போச்சு. போயிந்தே."

அவன் அவள் சொன்னதைக் கேட்டுச் சிரித்தான்.

"சரி, வா மிதுலா, போகலாம். நீ வெறும் காலோடு நடக்க வேண்டாம். உன்னுடைய ஸ்லிப்பரைப் போட்டுக்கோ."

"தேங்க்ஸ். ஸாரி. என்னாலே உங்களுக்குச் சிரமம்."

"கமான்... டோண்ட் பி ஃபஸ்ஸி. நடக்கும் பொழுது வலிக்கிறதா?"

"லேசாகத்தான். ரொம்ப வலி இல்லை."

"எதற்கும் டி.டி. போட்டு விட வேண்டும். செப்டிக் ஆகாமல் இருக்கும்."

"ம்... டோண்ட் பி ஃபஸ்ஸி."

அவன் மீண்டும் சிரித்தான். சிரிக்கும்பொழுது அவன் முக இறுக்கம் தளர்ந்து அவன் ரொம்ப இயல்பாக இருப்பது போல் தோன்றியது அவளுக்கு.



ரெஸ்டாரண்ட் மேனேஜர் அவனைப் பார்த்தவுடன் எழுந்து நின்று வரவேற்றார்.

"வாங்க ஸார். மேடம், வாங்க. இந்த டேபிள்தான்."

அவர் காட்டிய இடத்தில் அமர்ந்தனர் இருவரும். அங்கிருந்து கடற்கரை கோடாகத் தெரிந்தது.

இருவருக்கும் வேண்டிய உணவு வகைகளின் ஆர்டரைக் குறித்துக்கொண்டு அங்கிருந்து அகன்றார் அவர்.

அடுத்த ஒரு மணி நேரம் சாப்பிட்டபடியே பேசிக் கொண்டு இருந்தனர்.

'தி ரியல் பேஸ்' பத்திரிகை பற்றி, அப்புறம் இப்பொழுது விற்பனையாகும் 'பெஸ்ட் ஸெல்லர்ஸ்' பற்றி, அவர்கள் புத்தகத்தில் அப்படி என்ன வித்தியாசமாக இருக்கிறது. ஏன் அவர்கள் புத்தகத்தை மட்டும் மக்கள் விரும்பிப் படிக்கிறார்கள் என்று விவாதித்தார்கள்.

கடைசியில், பத்திரிகையில் வரும் விளம்பரங்களைப் பற்றிப் பேசினார்கள்.

"விளம்பரத்தால் அப்படி என்ன பெரிய வேல்யூ என்று தெரியவில்லை."

"ம்... இந்தக் கோணத்தில் இருந்து யோசித்துப் பார். நாட் ஆஸ் தி எடிட்டர் ஆஃப் 'தி ரியல் ஃபேஸ்'.

"எந்தக் கோணத்தில்.... எனக்குப் புரியவில்லை."

"விளம்பரங்கள் இருப்பதால் தான் நமக்கு ரெவின்யூ. விளம்பரங்களே இல்லாவிட்டால் பத்திரிகையின் விலையை நாம் அதிகரிக்க வேண்டி வரும்.

பாவம் கஸ்டமர்ஸ் தான் அதைத் தாங்க வேண்டும் அந்தக் காரணத்திற்காகவாவது நான் விளம்பரங்களை ஆதரிப்பேன்."

"ம்... அது சரிதான். நாளிதழ், டி.வி. என எல்ல வற்றிலும் விளம்பரம் இருப்பது... ஒரு வகையில் நல்லதிற்குத்தான்!" என்று ஆமோதித்தாள் மிதுலா.

டெஸர்ட் ஸெர்வ் செய்யும்பொழுது விளக்குகளை எல்லாம் அணைத்துவிட்டனர். ஒவ்வொரு டேபிள் மேல் ஒ மெழுகுவத்தி எரிந்து கொண்டிருந்தது.

நிலவு ஒளி, மெல்லிய இசை, கடற்கரைக் காற் இவை எல்லாம் சட்டென ஒரு இனிமையான சூழலை அங்கே ஏற்படுத்தியது.

# 4

என்னில்
எப்படி
அன்பு
சுரந்தது?
கல்
பாறை
போல்
இருந்தது
என்
மனம்
....
எனக்கே
தெரியாமல்



ஒரு பூவாக
நீ
பூத்தாய்
என்
மனதில்!
என்னில்
எப்படி
அன்பு
சுரந்தது?

"**மி**து... திஸ் ப்ளேஸ் இஸ் வெரி ஸ்வீட் உன்னைப் போல!" என்றான் கண்களில் காதல் பொங்க சச்சித்.

அவன் கண்களைச் சந்திக்கத் துணிவின்றித் தலை குனிந்தாள் அவள். அவன் தன்னை 'மிது' என்று அழைத்தது அவள் மனதில் புதிய உணர்வைத் தோற்றுவித்தது.

"போகலாமா... லேட் ஆச்சு!" என்றாள் மெதுவாக.

"ம்... போகத்தான் வேண்டுமா?"

"நீங்கள் வேண்டுமானால் இருங்கள். நான் கிளம்புகிறேன்," என்று எழுந்திருக்க முயன்றவளின் கையைப் பற்றி உட்கார வைத்தான் அவன்.

"என்னோடுதான் நீ வந்தாய். அதனால் என்னோடு தான் போக வேண்டும்."

"அந்த மாதிரி எந்த ரூலும் இல்லை."

"சரி... வா... போகலாம்," என்றவனின் குரலில் கோபம் தொனித்தது.

கார் ஓட்டும்பொழுதுகூட அவன் கோபம் தண வில்லை என்பது அவன் ஓட்டும் விதத்திலேயே அவளுக் தெரிந்தது.

"ப்ளீஸ் கொஞ்சம் மெதுவாப் போங்க."

"எனக்குத் தெரியும், எப்படிக் காரை ஓட்ட வேண்டு என்று. உனக்குப் பயமாக இருந்தால் கண்ணை மூ கொள்."

இவனிடம் இனிப் பேசக்கூடாது. பேசுவதால் எந் பயனும் இல்லை என்று அவளுக்குப் புரிந்தது. வீ வந்தவுடன் இறங்கத் தயாரானாள் அவள்.

"தேங்க்ஸ்! தி டின்னர் வாஸ் குட்."

"ம்... இட்ஸ் ஓ.கே... தண்ணீர் வேண்டும் குடிக்க

"ஓ... வாங்க. உள்ளே!" என்று கதவைத் திறந்தா

லைட்டைப் போட்டுவிட்டு ஃபிரிட்ஜை நோக் நடந்தாள்.

"ம்... இந்தாங்க. தேங்க்ஸ் அகெய்ன் ஃபார் டின்ன

"தேங்க்ஸ் இப்படிச் சொல்லக் கூடாது."

"அப்படியா? அப்ப எப்படிச் சொல்லணும்?"

அவன் சட்டென அவள் கையைப் பற்றி இழுத்தா திடீரென அவன் அப்படிச் செய்ததால் தடுமாறி அவன் மே சாய்ந்தாள் மிதுலா.

அவன் மூச்சுக் காற்று அவள் முகத்தில் படர்ந்த அவளை இழுத்து அணைத்தான் அவன்.

"லீவ் மி... சே!" என்று திமிறினாள் அவள்.



"மிது... யூ லைக் இட். எனக்குத் தெரிகிறது."

அவள் அவனைப் பிடித்துத் தள்ளினாள்.

"டின்னர் கொடுத்ததற்கு நீங்கள் என்னிடம் இருந்து இதை எதிர்பார்க்கிறீர்களா... சே... சே..."

"உன்னுடையது நாக்குதானா? இல்லை, கத்தியா? உன் மாதிரி ஒரு பெண்ணை நான் பார்த்தது கிடையாது!" என்றான் கோபமாக சச்சித்.

"உங்கள் நோக்கம் கேவலமானது. இதே மாதிரி நீங்கள் இன்னொரு முறை நடந்து கொண்டீர்கள் என்றால் நான் என் வேலையை ராஜினாமா செய்ய வேண்டி வரும்."

அவன் ஏதும் சொல்லாமல் வேகமாக வெளியேறினான். அவன் கார் சத்தம் அவளுக்குக் கேட்டது. அவளிடமிருந்து ஒரு பெருமூச்சுப் பிறந்தது.

சச்சித் சட்டென இப்படிச் செய்தது அவளுக்கு அதிர்ச்சியை அளித்தது. அவன் எப்பவுமே இப்படித்தானா? பெண்கள் விஷயத்தில்!

இவன் மறுபடியும் என்னிடம் இந்த மாதிரி நடந்து கொள்ள முயல்வானா? என்ன செய்வது? வேறு வேலைக்கு முயற்சி செய்து பார்க்கலாமா?

ஆனால் இதே மாதிரி நல்ல சம்பளம் கிடைக்குமா என்று தெரியவில்லை. சே... இவனால் தான் இந்த அநாவசிய மனக் குழப்பம் எனக்கு.

தம்பியின் படிப்பு இருக்கிறது. அதனால் நான் அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்கக் கூடாது. பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

சச்சித் இனி அப்படி நடந்துகொள்ளமாட்டான் என்று தான் தோன்றுகிறது. நான் கேட்டவுடன் அவனுக்குக் கோபம் வந்துவிட்டது.

அதனால்தான் உடனே வெளியேறிவிட்டான். ம்... ம்... அவன் வெளிநாட்டில் படித்ததால் இதெல்லாம் அவனுக்குச் சகஜமாக இருந்திருக்கலாம்.

அதனால் என்னிடம் அதே மாதிரி நடந்து கொள்ள முயன்று இருக்கலாம். நான் அப்படிப்பட்ட பெண் இல்லை என்று தெரிந்ததால் இனி அவன் அப்படி நடந்து கொள்ளமாட்டான் என்று நம்ப வேண்டும். நம்பித்தான் ஆக வேண்டும் என்று சொல்லிக்கொண்டாள் அவள்.

அன்று இரவு குழப்பமான மனநிலையோடு படுத்தாள் மிதுலா. அதனால் தூக்கம் ரொம்ப நேரம் கழித்துத்தான் அவளை ஆட்கொண்டது.

அடுத்த நாள் காலையில் எழுந்திருக்கும்பொழுதே தலை வலித்தது அவளுக்கு. அன்று அலுவலகம் போக வேண்டுமா என்று மனம் சோர்வாக இருந்தது.

தன்னைச் சமாளித்துக் கொண்டு எழுந்தவள். அலுவலகம் செல்லத் தயாரானாள். இன்று சச்சித்தைப் பார்த்தால் நேற்று நடந்ததை மறந்துவிட்டு வழக்கம் போல் இருக்க முயற்சி செய்ய வேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள்.

ஆஃபீஸில் தன் அறையினுள் வந்து அமர்ந்த பின்புகூட அவள் தலைவலியின் தீவிரம் குறையவில்லை. தொலைபேசி சிணுங்க, கைத்தாங்கியை எடுத்தாள் அவள்.



"ஹலோ... மிதுலா... குட்மார்னிங். என் அறைக்கு வா!" என்று சொல்லிவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல் இணைப்பைத் துண்டித்தான் மறுமுனையில் இருந்த சச்சித்.

அவளிடம் இருந்து பெருமூச்சுப் பிறந்தது. தண்ணீர் ஒரு வாய் குடித்துவிட்டு அவன் அறை நோக்கி நடந்தாள் மிதுலா.

"குட் மார்னிங் மிதுலா. ஹவ் ஆர் யூ?"

"குட் மார்னிங். சொல்லுங்க ஸார்."

"ம்... என்னை சார் என்று கூப்பிடாதே. நீ என்னவோ ஸ்கூல் கேர்ள் மாதிரி, நான் ரிடையராகப் போற பிரின்சிபால் மாதிரி இருக்கு.

ஸோ கட் ஆஃப் தட்."

"ம்... ஓ.கே. சொல்லுங்க."

"நீ பத்திரிகையின் எடிட்டராகப் பணியாற்றப் போவதால், உன்னுடைய பொறுப்புக்களைப் பார்க்க ஒருவர் தேவை."

அஸிஸ்டெண்ட் எடிட்டர் பதவிக்கு ஒரு ஆள் தேர்வு செய்ய வேண்டும்.

உன் மனதில் யாராவது இருக்கிறார்களா? இருந்தால் அவர்களை இந்தப் பதவிக்கு எடுக்கலாம்."

"ம்... ஹெலன் இந்தப் பதவிக்கு நல்ல தேர்வாக இருப்பாள் என்று எனக்குத் தோன்றுகிறது. அவள் கொஞ்ச நாள் முன்பாகவே இதைப் பற்றி என்னிடம் பேசினாள்.

அவள் இருக்கும் செகரட்டரி லைன் அவளுக்கு போ அடிக்கிறது போல. பத்திரிகையில் கட்டுரைகள், கதைக அவற்றை ஃப்ரூப் ரீட் செய்வது, படிப்பவர்கள் மனதில் ஒ தாக்கத்தை ஏற்படுத்தும்படி கட்டுரைகளை, கதைகளை மாற்றி வடிவமைப்பது... இதில் எல்லாம் அவளுக்கு ஆர்வ அதிகம்.

அதனால் அவள் இந்த 'அஸிஸ்டெண்ட் எடிட்ட பதவிக்குச் சரியான ஆளாக இருப்பாள் என்று நா நினைக்கிறேன்.

ஆங்கிலோ - இந்தியப் பள்ளியில் படித்தத அவளுடைய ஆங்கிலம் ரொம்ப அருமையாக இருக்கிறது

"ம்... நல்ல ஐடியாதான். உனக்கு ஓ.கே. என்றா நான் ஹெலனுக்குக் கண்ணை மூடிக்கொண்டு இந் புதுப் பதவியைக் கொடுத்துவிடுவேன்."

அவன் சொன்னதைக் கேட்டு அவள் முகம் சிவந்த நான் என்ன கேட்டாலும் தரத் தயார் என்பது போ பேசுகிறானே என நினைத்துத் தனக்குள் சிரித் கொண்டாள்.

"எங்கள் இருவருக்கும் நல்ல அலைவரிசை இ கிறது. அதனால் வேலை விஷயத்தில் முடிவுகள் எடு உபயோகமாக இருக்கும்."

"யெஸ். இப்பொழுது ஹெலனுக்குப் பதில் பி.ஏ.வ வேறு யாராவது தேட வேண்டும்."

"ஹெலன் இஸ் வெரிகுட் இன் வொர்க். அவ மாதிரி ஒரு பெண் கிடைப்பது கஷ்டம்."

"கரெக்ட். பட் வேறு வழி இல்லை. அப்புறம் இந்தப் பத்திரிகைகளைப் பார்," என்று அவளிடம் நீட்டினான்.

அதை வாங்கிப் பார்க்கத் தொடங்கினாள் அவள். "நம்ம பத்திரிகையில் இந்த மாதிரி மாற்றங்கள் செய்ய முடியுமா என்று யோசித்துக் கொண்டு இருந்தேன்."

"ம்... பார்க்க அழகாக இருக்கிறது. கலர் காம்பினேஷன்ஸ்... ரொம்ப அருமையாக இருக்கிறது."

நான் என் இடத்தில் போய்ப் படித்துவிட்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன்," என்று எழுந்திருக்க முயன்றாள்.

"ம்... இங்கேயே படி மிதுலா. இதில் எந்தப் பகுதிகள் நன்றாக இருக்கிறது என்று நான் சொல்கிறேன்," என்றவன் அவள் அருகே வந்து நின்று கொண்டான்.

அவன் குனிந்து பக்கங்களைப் புரட்டிச் சுட்டிக் காட்டியபடி இருந்தான். நாற்காலியைத் தள்ளிப் போடலாமா என யோசித்த மிதுலா அந்த எண்ணத்தைக் கைவிட்டாள்.

அவனுடைய டேபிளில் இருந்த தொலைபேசி சிணுங்கியது. டேபிள் மேல் சாய்ந்தபடியே ரிசீவரை எடுத்துப் பேசத் தொடங்கினான்.

தன் முன்னே டேபிளில் சாய்ந்தபடி அவன் பேசுவது அவளுக்கு ஏதோ ஒரு உணர்வைத் தோற்றுவித்தது.

நாற்காலியைத் தள்ளிப்போட வேண்டும் என்றால் அவனை இடித்து விடுவோமோ என்ற பயம் எழுந்தது. மெது வாக அவன் மேல் படாமல் எழுந்தவள் பத்திரிகைகளை எடுத்துக் கொண்டு அங்கிருந்து போக முயன்றாள்.

ஆனால் அவன் சட்டென அவள் மணிக்கட்டைப் பற்றினான். 'போகாதே' என்பதுபோல் தலை அசைத்தான், தொலைபேசியில் பேசியபடியே.

அவள் அவன் பிடியிலிருந்து மணிக்கட்டை விடுவிக்க முயன்றாள். ஆனால் அவன் பிடியில் வலிமை மிகுந்து இருந்தது.

வேறு வழியின்றிப் புத்தகங்களை டேபிளில் வைத்து, அதைப் படித்தபடி இருந்தாள் அவள்.

அவன் தன் கையைப் பற்றி இருப்பதைப் புறக்கணிக்க முயன்றாள் அவள். அவனுடைய கட்டைவிரல் அவள் மணிக்கட்டின் மென்மையைச் சோதிப்பது போல் தடவிப் பார்க்க, அவளுக்கு எரிச்சல் வந்தது.

அவன் ரிசீவரை வைத்துவிட்டு ஏதும் நடக்காதது போல் அவள் கையை விடுவித்தான்.

"எப்படி இருக்கிறது இந்தப் பத்திரிகைகளின் தரம், இந்தக் கட்டுரையைப் படித்தாயா?" என்று சுட்டிக்காட்டினான்.

அந்தக் கட்டுரையில் பெண்களிடம் அவர்கள் வாழும் முறையில் ஏற்பட்டு இருந்த மாற்றங்களைப் பற்றி விலாவாரியாகப் பேசப்பட்டு இருந்தது.

பெண்கள் திருமணம் ஆகாமல் குழந்தைக்குத் தாயாவது, டீன் ஏஜ் ப்ரெக்னன்ஸி, லிவ்விங் டு கெதர் என்பதைப் பற்றி எல்லாம் அதில் எழுதியிருப்பதைப் பார்த்து முகம் சிவந்தாள் அவள்.

"இது வெளிநாட்டுப் பத்திரிகை. அங்கே இருப்பவர்களுக்கு இது சரி வரும்.

ஆனால் நமக்குச் சரி வராது!" என்றாள் கோபமாக.

"உன்னோட கண்ணோட்டம் ரொம்பத் தப்பு மிதுலா. இந்த மாதிரி ஒரு கலாச்சாரம் இப்ப இந்தியாவிலும் தலைகாட்டத் தொடங்கியுள்ளது.

புள்ளி விவரங்களோடு என்னால் அதை நிரூபிக்க முடியும்."

"இந்த மாதிரி கட்டுரை நம்ம 'மேகசினில்' போட வேண்டுமா? காட்! நோ."

"இதையே போடப் போவது இல்லை. இதைப் போல ஒன்றை நம்முடய சூழலுக்குத் தகுந்த மாதிரி தயாரிக்க வேண்டும்."

"இது தேவையா என்று நான் யோசிக்கிறேன்."

"ரங்கோலி, சமையல் டிப்ஸ், அழகுக் குறிப்புகள் இதெல்லாம் ரொம்ப பழைய ஸ்டைல்."

இந்த மாதிரி 'உஷார் கட்டுரைகளும்' நம் பத்திரிகைக்குத் தேவை."

"இதற்கு வரவேற்பு எப்படி இருக்கும் என்று தெரியவில்லை."

"சிலருக்குப் பிடிக்கலாம்... பலருக்குப் பிடிக்காமல் போகலாம்."

"வழக்கமாக நம் பத்திரிகையில் இந்த மாதிரி விஷயங்கள் எல்லாம் இடம் பெற்றது இல்லை. புதுமை என்ற பெயரில் நாம் இதைப் புகுத்துவது வருடக் கணக்காக நம் பத்திரிகையைப் படிப்பவர்களுக்குப் பிடிக்காமல் போகலாம்."

"ம்... ஒரு வகையில் நீ சொல்வது சரிதான். சிலருக்குப் பிடிக்காமல் போகலாம். ஆனால் புதிதாக இப்படி போடுவது சிலருக்குப் பிடிக்கலாம்.

நம் பத்திரிகையைப் புதிதாகச் சிலர் இதற்காகவே வாங்கத் தொடங்கலாம். இதை நாம் ஏன் முயற்சி செய்து பார்க்கக் கூடாது?"

அவனிடம் இனி இதைப் பற்றிப் பேசிப் பயன் இல்லை என்று அவளுக்குப் புரிந்தது. அவன் தான் 'நினைத்ததை நடத்தி முடிப்பவன்' என்று அவளுக்குப் புரிந்தது.

"ஓ.கே. முயற்சித்துப் பார்க்கலாம்," என்றாள்.

"நீ முழு மனதோடு இதைச் சொல்லவில்லை என்று எனக்குப் புரிகிறது. வரும் இதழில் இதைப் போட்டுப் பார்க்கலாம்.

வாசகர்களின் விமர்சனங்கள் எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்கலாம்."

"சரி...."

"என்னுடைய ஸ்டைல் உனக்குப் பிடித்திருக்கிறதா...?

"வாட்..."

"ஹலோ... நான் வேலை பார்க்கிற ஸ்டைலை சொன்னேன் மேடம்!" என்றான் சிரித்தபடி சச்சித்.

அவள் இதழ்களில் லேசான புன்முறுவல் படர்ந்தது. "உங்களை மீறி இனி இங்கே புல் கூட முளைக்காது போல."

"ம்... உனக்குத் தெரியாமல் இருக்கலாம். மரமே வளர்ந்து இருக்கும்."



அவள் அதைக் கேட்டுச் சிரித்தாள்.

"மழைதான் வரப் போகுது."

"ஏன்...?"

"நீ சிரிக்கிறாயே. எப்பவும் கோபமாகப் பேசுவாய். அதனால்தான் சொன்னேன்."

"சரி. நான் என் இடத்திற்குப் போகிறேன். எனக்கு முடிக்க வேண்டிய வேலைகள் உள்ளன."

"ஓ.கே... கோ அஹெட்."

அவன் ரூமில் இருந்து வெளியே வந்தவளின் மனதில் ஏனோ ஒரு நிம்மதி படர்ந்தது.

"என்ன மிதுலா... காலையில ரொம்ப வேலையா? யூ லுக் டல்!" என்றாள் ஹெலன்.

"ஓ... அதெல்லாம் இல்லை. அப்புறம் உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்."

"என்ன மிதுலா...?"

"உன் பெயரை பாஸிடம் நான் ரெகமண்ட் செய்திருக்கிறேன். இது துணை எடிட்டர் பதவிக்கு.

உனக்கு இது சம்மதம்தானே..."

"வாவ்... நல்ல வாய்ப்பு ஆச்சே. தேங்க்ஸ் மிதுலா."

"ம்... உனக்குக் கண்டிப்பாக இது கிடைக்கும் என்று நினைக்கிறேன்."

"இந்த பி.ஏ. ரோல் ரொம்ப போர் அடிக்குது. செய்த வேலைகளையே திரும்பத் திரும்பச் செய்துகொண்டு...

மீட்டிங், லஞ்ச் ஆர்டர், அப்பாயிண்ட்மென்ட்களைப் பார்ப்பது என்று அதே வேலையை செய்து செய்து ரொம்ப சலிப்பாக இருக்கிறது.

இந்தப் புது வேலை நன்றாக இருக்கும். ஐ லைக் இட். எனக்குக் கிடைத்தால் ஐ வில் பி ஹாப்பி."

"ஹோப் ஃபார் இட்."

அடுத்த இரண்டு மணி நேரம் கணினியில் மூழ்கினாள் மிதுலா. அவளின் கைபேசி சிணுங்கியது.

"ஹலோ... அம்மா. எப்படி இருக்கீங்க? நானே உங்களுக்கு ஃபோன் செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன்."

"எப்படி இருக்க நீ மிது? என்ன, வேலை ரொம்ப ஜாஸ்தியா? நீ ஃபோனே செய்யலையே..."

"அப்படி எல்லாம் இல்லை அம்மா. இப்ப எனக்கு இதே கம்பெனியில் புதிய பொறுப்புகள் கொடுத்திருக்காங்க.

அதனால கொஞ்சம் பிஸியாகி விட்டேன். அதோடு புதிய வேலைகள் என்பதால் கற்றுக் கொண்டு செய்ய வேண்டியிருந்தது.

அப்புறம் அருண் எப்படியிருக்கான் அம்மா? நன்றாகப் படித்துக் கொண்டு இருப்பான் என்று நினைக்கிறேன்."

"ஓ... கூடுதல் பொறுப்பா மிது? பரவாயில்லை நல்ல விஷயம்தான். ஆனால் வேலை வேலை என்று அதிலேயே மூழ்கி விடாதே.



உடம்பையும் கவனித்துக்கொள். வேளைக்கு வேளை சாப்பிடு. நன்றாக ஓய்வெடு. வாரா வாரம் எண்ணெய் தேய்த்துக் குளி."

"சரிம்மா... நீங்களும் மருந்தெல்லாம் தவறாமல் எடுத்துக் கொள்ளுங்கள். நான் அப்புறம் உங்களுக்கு ஃபோன் செய்கிறேன்," என்று சொல்லியபடியே இணைப்பைத் துண்டித்தாள் அவள்.

அம்மாவிடம் பேசியதால் வீட்டு நினைப்பு அவளுக்கு எழுந்தது. அம்மாவிற்காகவும், தம்பிக்காகவும் தான் இந்த வேலையை விடக்கூடாது எனத் தீர்மானித்தாள் அவள்.

வெளியே மழை பெய்து கொண்டு இருந்தது. கண்ணாடி ஜன்னல் வழியாகத் தெரிந்தது அவளுக்கு. அவளிடம் இருந்து பெருமூச்சுப் பிறந்தது.

# 5

வளர்பிறை
தேய்பிறை
எல்லாமே
ஒன்றாகத்
தெரிகின்றன!
இன்பங்கள்
துன்பங்கள்
எல்லாமே
ஒன்றாகத்
தெரிகின்றன
.....

எப்படி
இந்த
மாற்றம்?
என்னை
எனக்கே
தெரியாமல்
நீ
மாற்றி
விட்டாய்!
ஆனால் ஏன்
மறந்து
விட்டாய்?
மறைத்தும்
விட்டாய்!

**மி**துலாவிற்கு வாரத்தின் விடுமுறையின் பொழு நேரம் சரியாக இருக்கும். அடுத்த வாரத்திற்குத் தேவையான உடைகளை இஸ்திரி செய்து வைப்பாள்.

வீட்டை ஒட்டடை அடித்துப் பொருட்களின் மீது படிந் இருக்கும் தூசு எல்லாம் துடைத்து வீட்டைச் சுத்தமாக பராமரிப்பாள்.

மாதம் ஒருமுறை திருச்சிக்கு சென்று அம்மாவையு தம்பியையும் பார்ப்பது அவள் வழக்கம். அம்மாவின் செலவுக்குத் தேவையான பணத்தையும் அவள் அப்பொழு கொடுத்து விட்டு வருவாள்.

ஊருக்குப் போய் இரண்டு வாரங்கள்தான் ஆகிற ஆனால் ஏனோ இந்த வாரம் போக வேண்டும் என்று ஒ துடிப்பு அவளுள் தோன்றியது.



சட்டென 'ஹோம் சிக்னெஸ்' தன்னைத் தொற்றிக் கொண்டதை நினைத்து ஆச்சரியப்பட்டாள் அவள். திருச்சியை விட்டுச் சென்னை வந்து ஐந்து வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது.

சென்னைக்கு வந்த புதிதில் 'ஹோம் சிக்'கானது அவள் நினைவுக்கு வந்தது. நாளாக நாளாகப் பழகிவிட்டது அவளுக்குச் சென்னை.

ஆனால் இப்பொழுது மீண்டும் வீட்டு நினைப்பு வந்ததற்கு என்ன காரணம் என்று யோசித்தாள். சச்சித்தின் அணுகு முறைதான் என்று அவள் மனம் சொன்னது.

அவன் வந்ததிலிருந்து ஏற்பட்ட மாற்றங்கள் எல்லாமே அவளின் நினைவுக்கு வந்தன. மனம் மீண்டும் அம்மாவையும், தம்பியையும் பார்க்க வேண்டும் என்று ஏங்கியது.

காலையில் எழுந்திருக்கும் பொழுதே இது என்ன நினைப்பு எனத் தனக்குள்ளே கேட்டபடி படுக்கையிலிருந்து எழுந்தாள்.

காலையில் குளித்துவிட்டுக் கோயம்பேடு பேருந்து நிலையத்திற்குச் சென்று திருச்சி போவது என்று முடிவு செய்தாள் அவள்.

சட்டென உடலில் ஒரு புத்துணர்வு பரவுவது போல் தோன்றியது அவளுக்கு. உடலும் மனமும் எப்படி இணைந்து செயல்படுகிறது என்று அதிசயப்பட்டாள் மிதுலா.

கோயம்பேடு நிலையத்தில் கூட்டம் காலை எட்டு மணி அளவிலும் இருந்தது. எப்பவும் 'மலைக்கோட்டை டிரெயினில்' பயணம் செய்வாள் மிதுலா.

ஒரு மாதத்திற்கு முன்பாகவே கணினி மூலம் டிக்கெட்டைப் பதிவு செய்து கொள்வாள். அதனால் பேருந்துப் பக்கம் வருவதற்கு வாய்ப்பே இல்லாமல் இருந்தது.

ஒரு பேருந்து புறப்படும் தருவாயில் இருந்தது. திருச் வரை செல்கிறது என்பதை உறுதி செய்து கொண்டவள் அதில் ஏறினாள்.

"திருச்சிக்கு டிக்கெட் கொடுங்க."

"மேடம். முதல்ல நீங்க அந்த ஸீட்டில் உட்காருங் நான் அப்புறம் டிக்கெட் கொடுக்கறேன்."

கண்டக்டர் சுட்டிக்காட்டிய இடத்தில் அமர்ந்தாள் அவள் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். எப்படியும் மதியம் இரண் மணிகிட்ட ஆகிவிடும், வீடு போய் சேர்வதற்கு." என் நினைத்துக் கொண்டாள்.

அம்மாவிற்கும், தம்பிக்கும் தன்னுடைய வருகை ஆச்சரியமாக இருக்கும். தெரிவிக்காமல் செல்வதா அவர்கள் என்னை எதிர்பார்க்க மாட்டார்கள்.'

'இட் வுட் பி எ பிளஸெண்ட் சர்ப்ரைஸ்!' என் நினைத்துக் கொண்டாள். வெளியே தெரிந்த காட்சிகள் மனதைப் பதித்தாள் அவள்.

தன்னை மீறிக் கண் அயர்ந்தாள். அவள்.

"மேடம்! திருச்சி வந்திடுச்சு!" என்று குரல் கேட்க, கண் விழித்தாள் அவள்.

"ஓ... தேங்க்ஸ்!" என்றபடியே பையைத் தோள் மாட்டிக் கொண்டாள்.



அவள் வீடு பஸ் ஸ்டாண்டில் இருந்து ஐந்து நிமிடங்கள் நடை. லக்கேஜ் ஏதும் இல்லாததால் எப்பவும் நடந்தே சென்று விடுவாள் அவள்.

அம்மாவையும், தம்பியையும் பார்க்கப் போகிறோம் என்ற நினைப்பே அவளுக்கு உற்சாகமாக இருந்தது.

வீட்டின் வாசலை அடைந்தவள் கதவைத் தட்டினாள். கதவைத் திறந்த ஈஸ்வரியின் முகத்தில் சந்தோஷ ரேகைகள் அப்பட்டமாகத் தெரிந்தன.

"வா... மிது... என்ன அதிசயம்!"

குரல் கேட்டு அறையிலிருந்து வெளியே வந்தான் அருண்.

"அக்கா... வாட் எ சர்ப்ரைஸ்!" என்றான் அருண்.

"ம்... உங்களை எல்லாம் பார்க்கணும்னு தோணுச்சு. அதான் சட்டுன்னு கிளம்பி வந்திட்டேன்.

அதோடு ஐ ஹாவ் எ குட் நியூஸ்."

"என்னது... சொல்லு," என்றனர் கோரஸாக இருவரும்.

"ம்... அம்மா... உன்கிட்டே சொன்னதுதான். எங்க பத்திரிகையின் எடிட்டராக எனக்கு ப்ரமோஷன் கிடைத்து இருக்கிறது.

கூடுதல் பொறுப்புகள், கூடுதல் சம்பளம் அதுதான் குட் நியூஸ்."

தம்பியும், அம்மாவும் அவளைப் பாராட்டினார்கள்.

"எனக்குத் தெரியும் அக்கா. யூ ஆர் வெரி ஸ்மார்ட். உனக்குச் சீக்கிரமே பதவி உயர்வு கிடைக்கும் என்று எனக்குத் தெரியும்."

கங்கிராட்ஸ் அக்கா. உன்னை நினைத்தால் எனக்கு பெருமையாக இருக்கிறது."

"சரி... வாங்க, ரெண்டு பேரும் சாப்பிட. நான் ஒரு பாயசம் மட்டும் வேகமாகத் தயார் செஞ்சிடறேன்," என்று சொல்லியபடியே, சமையல் அறையினுள் சென்றாள் ஈஸ்வரி.

"படிப்பெல்லாம் எப்படி இருக்கு அருண்?"

"ரொம்ப நல்லா இருக்கு, அக்கா. நான் எப்படியும் நல்ல ரேங்க் எடுப்பேன் அப்படின்னு நம்பிக்கை இருக்கு."

"தட்ஸ் குட். நீ கோல்ட் மெடல் வாங்குவாய் என்று எனக்குத் தோன்றுகிறது."

"கண்டிப்பா அக்கா. நான் முயற்சி செய்யறேன். இதுவரை எங்க பல்கலைக் கழகத்தில் நான்தான் முதலிடத்தில் இருக்கிறேன்.

அப்புறம் இந்த வருடம்தான் கடைசி வருடம் படிப்பதற்கு. அதனால் கடைசி செமஸ்டர் ஆறு மாதங்கள் நாங்க எல்லோரும் ஏதாவது தொழிற்சாலை சென்று தொழிலைக் கற்றுக் கொள்ள வேண்டும்.'

நான் இரண்டு நல்ல தொழிற்சாலைக்கு விண்ணப்பித்து இருந்தேன். சென்னையில் ஒன்று உள்ளது. இன்னொரு தொழிற்சாலை பெங்களூரில் உள்ளது.

நான் சென்னையில் இருக்கும் தொழிற்சாலையிலேயே பயிற்சி எடுத்துக் கொள்ளலாம் என நினைக்கிறேன்."



"அப்படியே செய்டா. பேசாமல் நீ என்னோடேயே தங்கிக் கொள்.

நான் நீ போய் வர கார் ஏற்பாடு செய்கிறேன். அதனால் எந்தப் பிரச்சினையும் இருக்காதுடா."

"அதெல்லாம் எதுக்கு அக்கா. வீண் செலவு. நான்... நான் பஸ்ஸிலோ, டிரெயினிலோ போய் விடுவேன்."

"ஏய் அருண். யூ ஆர் மை லிட்டில் டியர் ப்ரதர். உனக்குச் செலவு செய்யாமல் வேறு யாருக்குச் செலவு செய்யப் போகிறேன்!" என்று அவன் மூக்கைச் செல்லமாகத் திருகினாள் அவள்.

"மிது... உன் செல்லத் தம்பியை அப்புறம் கொஞ்சலாம். முதல்ல இரண்டு பேரும் சாப்பிட வாங்க..." என்றாள் ஈஸ்வரி.

நல்ல பசி மிதுலாவிற்கு. அம்மாவின் கை மணமே தனி. அதனால் வேகமாகச் சாப்பிட்டாள். பசிக்கு எலுமிச்சை ரசமும், கத்தரிக்காய்க் கூட்டும் திவ்யமாக இருந்தது.

"அம்மா... எந்த ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் சாப்பாடும் உன்னோட சமையல் முன்னால் தோத்துப் போயிடும்..."

"மிது... போதும் என்னை ஐஸ் வைத்தது. மெதுவா சாப்பிடு."

சாப்பிடும்பொழுது தம்பியைப் பற்றிய யோசனை அவளை அறியாமல் அவள் மனதில் படர்ந்தது.

அவளுக்கும் அருணுக்கும் ஆறு வயது வித்தியாசம். பிறக்கும்பொழுதே அருணிற்கு இடது காலில் சக்தி குறைவாக இருந்தது.

சிறு வயதிலிருந்தே அவன் விந்தி விந்தித்தான் நடப்பான். எவ்வளவோ மருந்து சாப்பிட்டாகிவிட்டது. பாவம். ஆனால் தம்பியின் காலில் மாற்றம் ஏதும் தெரியவில்லை.

கடைசியாகப் பார்த்த பெரிய ஸ்பெஷலிஸ்ட் ஒருவர் தம்பியின் காலில் எந்த மாறுதலும் இருக்காது என்று சொன்னபொழுது பதறினாள் மிதுலா.

ஆனால் அருண் மனதைத் தளரவிடவில்லை. படிப்பில் நன்றாகக் கவனம் செலுத்தினான். சிறு வயது முதற்கொண்டு படிப்பில் முதலாவதாக வரும் தம்பியைப் பார்த்துப் பார்த்துப் பெருமையில் பூரித்தாள் மிதுலா.

தம்பி பொறியியல் கல்லூரியில் சேர்ந்து 'மெக்கானிகல்' இன்ஜினியரிங்கை விருப்பப் பாடமாகத் தேர்ந்தெடுத்த பின்பு பணத் தேவை அதிகமானது.

ஆனால் தம்பி பள்ளி மற்றும், கல்லூரி மாணவர்களுக்குத் தேவையான பாடத்திற்கு டியூஷன் சொல்லித் தரத் தொடங்கியதால் அதில் வரும் பணம் செலவுக்கு உபயோகமாக இருந்தது.

தம்பி படித்து முடித்துவிட்டால் கொஞ்சம் ஆசுவாசப் படுத்திக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டாள் அவள்.

"அருண்! நீயும் நாளைக்கு என்னோடு கிளம்பி வந்துவிடு சென்னைக்கு.

இன்னும் ஆறு மாசம் நீ அங்கேயே இருக்கலாம். நீ இருப்பதால் நான் அட்லீஸ்ட் காலையில நல்லா சமையல் செய்ய வேண்டி வரும்.



இல்லாட்டி. நான் சும்மா பிரெட், சாண்ட்விச் வெச்சு மேனேஜ் செய்வேன்."

"அக்கா! ரொம்ப தேங்க்ஸ். நான் சம்பாதிக்கத் தொடங்கியதும் உன்னை ராணி மாதிரிப் பார்த்துப்பேன்.

அப்பா இறந்த பிறகு நீதான் என்னையும், அம்மாவையும் தாங்குகிறாய்.

உனக்கு ஒரு வாழ்க்கை வேண்டும் அக்கா. அதற்கு நான் தடையாக இருக்கிறேனோ என்று எனக்குத் தோன்று கிறது அப்பப்ப..." என்றான் குரல் நடுங்க அருண்.

"ஏய் அருண், என்ன இது. யூ ஆர் மை லிட்டில் டார்லிங். இந்த மாதிரி எல்லாம் பேசாதே.

உன்னையும் அம்மாவையும் பார்த்துக் கொள்வதில் தான் என் வாழ்க்கை முழுமையாக இருக்கிறது. அதைக் கெடுத்துவிடாதே!" என்றாள் அன்பும் கண்டிப்பும் நிறைந்த குரலில்.

"ஸாரி அக்கா. உன் புது வேலை எப்படி இருக்கு?"

"நல்லா இருக்குடா. ஆனால் இப்ப பாஸும் புதுசு."

"ஓ... மேடம் மாதவி இல்லையா...?"

"அது ஒரு பெரிய கதைடா... அவர்களை வற்புறுத்தி ராஜினாமா செய்யும்படி சொல்லிட்டார் புது பாஸ்."

"ஓ... காட்! ஏன் அப்படி?"

"தெரியலை. அவர் பத்திரிகையில் நிறைய மாற்றங்களை விரும்புகிறார்.

அதற்கு மேடம் தடையாக இருக்கலாம் என் நினைத்திருக்கலாம்."

"ம்... பாவம் மேடம். உன் புது பாஸிற்கு எவ்வ வயது இருக்கும்? இஸ் ஹீ மேரீட்?"

தம்பி கேட்டதை நினைத்து முகம் சிவந்தாள் அவ

"ஏய் என்ன? சி.பி.ஐ. மாதிரி கேக்கற?"

"இல்லை அக்கா. உனக்கு அவரால எந்த ஆபத் வரக்கூடாது. அதனாலதான் கேட்டேன்."

"கமான் அருண். அவருக்கு முப்பது வயதிற்கு மே இருக்கும். மற்றப்படி அவரோட பெர்ஸனல் லைஃப் பற் தெரியாது.

ஆனால் அமெரிக்காவில் படித்திருக்கிறா அதனாலேயே நிறையப் புதிய எண்ணங்கள் அவருக் மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்."

"அக்கா. அவரால் உனக்கு ஏதும் பிரச்சினை வ தானே?

ப்ளீஸ் என்னிடம் தயங்காமல் சொல்."

"ஏய், என்ன நீ பெரிய மனுஷனாட்டம் பேசற. ந டு வொரி மை டியர் பாய். நீ ஒழுங்காப் படி. சரியா?"

"சரி... அக்கா. நீங்க ரெஸ்ட் எடுங்க. நான் திங்ஸ் எல்லாம் பேக் செஞ்சு வெச்சிடறேன்.

நானும் உங்களோட வந்திடறேன். நாளைக்

"தட்ஸ் குட் நீ டிரெயினிங் எடுத்துக்கப்போற கம் எங்க இருக்கு?"



"திண்டியில இருக்கு அக்கா. அங்கே இருக்கற ஏற்றுமதி 'சோனில்' தான் இருக்கு இந்தக் கம்பெனி."

"சரி... நான் உன்னைக் காலையில் வேலைக்குப் போவதற்கு முன்பு ட்ராப் செய்துவிட்டுப் போகிறேன்.

சாயங்காலம் நீ திரும்பி வீடு வருவதற்கு கால் டேக்ஸி, இல்லை ஏதாவது டிராவல்ஸில் பேசி ஏற்பாடு செய்து கொள்ளலாம்."

"அக்கா... எதுக்கு அக்கா உனக்குக் கஷ்டம்?"

"கமான் டியர் பாய். எனக்கு ஒரு கஷ்டமும் இல்லை. நீ உனக்குத் தேவையானதை எல்லாம் எடுத்து வைத்துக் கொள்."

"சரி... அக்கா," என்று அங்கிருந்து அகன்றான் அருண்.

தம்பி தன்னோடு வந்து இருக்கப் போகிறான். அவனைப் பத்திரமாக, நன்றாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள் அவள்.

தன்னுடைய 'ஃபிளாட்டில்' தன்னுடைய அறையைத் தம்பிக்குக் கொடுத்துவிட்டுத் தான் ஹாலில் படுத்துத் தூங்கலாம் என முடிவு செய்தாள் அவள்.

தம்பிக்குத் தரையில் படுப்பது கஷ்டம். அதனால் அந்த அறையிலுள்ள கட்டிலையே தம்பி உபயோகப் படுத்துவதுதான் நல்லது என்று நினைத்துக்கொண்டாள் அவள்.

சென்னைக்குப் போனவுடன் தம்பிக்குத் தேவையானவற்றை எல்லாம் செய்ய வேண்டும் என்று எண்ணியபடியே, தூங்கினாள் அவள்.

ஞாயிற்றுக் கிழமை ஊரிலிருந்து உற்சாகமா கிளம்பினாள் மிதுலா. "காரணம் தம்பி தன்னோடு வருவ தான்," என்று தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள்.

"பார்த்து மிது. சென்னைக்கு போய்விட்டு ஃபோ செய்," என்றார் ஈஸ்வரி.

"அம்மா. நீ பத்திரமா இரு. டோண்ட் ஒர்ரி..." என்ற புன்முறுவலோடு மிதுலா.

பேருந்தில் ஏற்கெனவே முன்பதிவு செய் இருந்ததால் பதட்டமின்றி பஸ் ஸ்டாண்ட் நோக் ஆட்டோவில் பயணித்தார்கள்.

"அந்தக் கம்பெனி உனக்குக் கொடுத்த லெட் எல்லாம் வெச்சிருக்கதானே அருண்."

"எல்லாம் இருக்கு அக்கா. நேத்தே எல்லாத்தை எடுத்து வெச்சிட்டேன்."

தம்பியோடு வருவதால் சொகுசுப் பேருந்தில் செய்திருந்தாள் அவள். குறித்த நேரத்தில் பஸ் கிளம்பி

திருச்சியில் இருந்து கிளம்பும்பொழுது எப்பவும் ம 'போகிறோமே, அடுத்து எப்பொழுது வருவோம்?' எ ஏங்கும்.

ஆனால் இந்த முறை மனம் சந்தோஷ இருக்கிறது. காரணம் தம்பி என நினைத்துக் கொண் அவள்.

சென்னைக்கு வந்த மிதுலாவிற்கு வேலை நி இருந்தது. தன் அறையை ஒதுங்க வைத்தவள் தம்பி பொருட்களை எல்லாம் அதில் வைத்தாள்.



பின்பு இரவுச் சமையலுக்குத் தேவையானதைத் தயார் செய்தாள். அடுத்த ஒரு வாரத்திற்குத் தேவையான காய்கறிகள் எல்லாம் வாங்கி வந்து ஃப்ரிட்ஜில் வைத்தாள்.

ஸ்கூட்டியில் பெட்ரோல் போட்டுத் தயார் நிலையில் வைத்தாள். தம்பி கிண்டியில் இருந்து திரும்பி வர ட்ராவல்ஸ் ஒன்றில் பேசி கார் ஏற்பாடு செய்தாள்.

திங்கட்கிழமை காலை டிபனும், சமையலும் செய்து முடித்தாள். சுவர்க் கடிகாரம் மணி எட்டு என்று உறுதி செய்தது.

தனக்கும் தம்பிக்கும் லன்ச் பேக் செய்துவிட்டுக் குளித்துவிட்டு வந்தாள்.

"அருண், இந்தா... டிபன். இட்லி, சாம்பார். மதியம் லஞ்சிற்கு லெமன் ரைஸ் அண்ட் கீரைக் கூட்டு.

இன்னும் ஒரு பத்து நிமிஷம் கழிச்சுக் கிளம்பலாமா?"

"சரி அக்கா... கிளம்பலாம்..."

வீட்டைப் பூட்டிவிட்டு ஒரு டூப்ளிகேட் சாவியைத் தம்பியிடம் நீட்டினாள் அவள்.

"சாவி பத்திரம் அருண்."

ஸ்கூட்டியில் தம்பி அமர்ந்த பின்பு ஜாக்கிரதையாக மெதுவாக ஓட்டினாள் ஸ்கூட்டியை.

தம்பியைக் கம்பெனியில் விட்டுவிட்டு, தம்பியின் மேல் அதிகாரியிடம் தம்பியைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டுத் தன் ஆஃபீஸ் நோக்கி ஸ்கூட்டியைச் செலுத்தினாள்.

ஸ்கூட்டியைப் பார்க் செய்துவிட்டு ஓட்டமும் நடையுமாகச் சென்றாள் அவள். கைக்கடிகாரம் மணி பத்து என்று உறுதி செய்தது.

எப்பவும் ஒன்பதரைக்குள் ஆஃபீஸிற்குள் சென்று விடுவாள் அவள். இன்று லேட்டாகி விட்டதே என்று பதட்டமாக விரைந்தாள் மிதுலா.

# 6

நீ
எனக்கு
எழுதிய
கடிதம்...
அதை
நான்
மீண்டும்
படித்துப்
பார்க்கிறேன்
.....
கடிதத்தில்
தெரிகிறது
உன்
முகம்
.....
உன்
பார்வையைச்
சந்திக்க
மறையாமல்



என்
கண்களில்
இருந்து
கண்ணீர்
வழிகிறது.....

லிப்ட்டை உபயோகித்து மேல்தளம் வந்து தன் அறைக்குள் மிதுலா நுழையும்பொழுது மணி பத்தைக் கடந்துவிட்டது.

தன் டேபிள் அருகே நின்றபடி சச்சித் அங்கிருந்த ஃபைலில் இருந்த ஏதோ ஒன்றைப் படித்துக் கொண் டிருப்பதைப் பார்த்தவளுக்குப் பதட்டம் அதிகரித்தது.

சே! இவன் எதற்காக என் ரூமில் காத்திருக்கிறானோ தெரியவில்லையே. அதுவும் எவ்வளவு நேரமாக இருக் கிறானோ?

எப்பவும் சீக்கிரமாக வந்துவிடுவேன். இன்றைக்கு லேட்டாகிவிட்டது என்ற குற்ற உணர்வோடு தன் ரூம் நோக்கி நடந்தாள்.

"ஐ யாம் ஸாரி ஃபார் கம்மிங் லேட். நீங்க எனக்காக வெயிட் செஞ்சுகிட்டு இருக்கீங்களா?"

"ஓ... இட்ஸ் ஓ.கே. மிதுலா. யூ ஆர் நாட் எ ஜுனியர் ஒன் ஹியர். நீ ஏதோ எமெர்ஜென்ஸி என்பதால்தான் லேட்டாக வருகிறாய்.

அதோடு நீ லஞ்ச் பத்து நிமிஷத்தில் சாப்பிட்டுவிட்டு மீண்டும் வேலையில் மூழ்கி விடுவாய் என்று எனக்குத் தெரியும்.

அதனால் நீ லேட்டாக வருவதை நான் தவறா
எடுத்துக் கொள்ள மாட்டேன்."

"ஓ... தேங்க்ஸ்!" என்றாள் நிம்மதிப் பெருமூச்சோ
அவள்.

"அப்புறம் இது என்ன ஆர்டிக்கிள்?" என்று அவளி
ஒரு பேப்பரை நீட்டினான் அவன்.

"இது... இது எப்படி உங்களுக்குக் கிடைத்தது?" என்
பதறினாள்.

"உன் டேபிள் டிராயரில் இருந்து எடுத்தேன். இ
எழுதியது யார்?"

"அது... அது என்னோட ப்ரைவேட் ஆர்டிகிள். நா
தான் எழுதினேன்."

"ஓ... அப்படியா... நான் அதைப் பார்த்து இருக்
கூடாது என்று நினைக்கிறாயா?"

"இ...இல்லை... நான் அப்படிச் சொல்லவில்லை"

"இது நம் பத்திரிகைக்காக எழுதினாயா? இ
பெண்கள் தலைமைப் பொறுப்புகளை ஏற்றுக் கொ
வதின் நன்மைகளையும், தீமைகளையும் பற்றி அழ
விவரிக்கிறது."

"இது நம் பத்திரிகைக்காக எழுதவில்லை."

"அப்ப எதுக்கு எழுதின? சும்மாவா?"

"இ... இல்லை... ஃப்ரீலேன்ஸிங்கிற்காக நான் இ
எழுதினேன்."

"பட்... இது நம் பத்திரிகைக்குச் செய்யும் துரோகம் இல்லையா?"

"இ... இல்லை. நான் அப்படி நினைக்கவில்லை. என் பெயரில் நான் எழுதவில்லை."

"சரி... இது துரோகம் இல்லை. நம் பத்திரிகையில் இருப்பவர்கள் அதே பெயரில்தான் வேறு பத்திரிகைகளுக்கு எழுதக் கூடாது.

ம்... நீ ஏன் மற்ற பத்திரிகைகளுக்கு எழுதுகிறாய்?"

"ஐ நீட் மணி. அதற்குத்தான்."

"சரி... அந்தப் பணத்தைவிடக் கூடுதலாகக் கொடுத்தால் நீ நம் பத்திரிகைக்கு இதைப் போல் எழுதித் தருவாயா?"

"ம்... எழுதலாம். ஆனால் நம் பத்திரிகைக்கு இது சரி வருமா? ஐ மீன் இது மேனேஜ்மெண்ட் சம்பந்தப்பட்டது."

"நீ இதுவரை இந்த மாதிரி எத்தனை கட்டுரைகள் எழுதியிருக்கிறாய்?"

"நிறைய எழுதியுள்ளேன். குறைந்தது ஐம்பதாவது இருக்கும்."

"அதற்கு வரவேற்பு எப்படி இருந்தது?"

"ஃபீட் பேக் நன்றாக இருந்தது. அதனால் தான் நான் மேலும் மேலும் எழுதினேன்."

"ம்... தட்ஸ் குட் அப்ப இனி நீ நம் பத்திரிகைக்கு இந்த மாதிரி கட்டுரை ஒவ்வொரு இதழிலும் தவறாமல் வெளியிட வேண்டும்.

அப்புறம் நீ வெளியிட்டதை எல்லாம் நான் பார்க்க வேண்டும். எந்தெந்தப் பத்திரிகைக்கு எல்லாம் வெளியிட்டு இருக்கிறாய் என்ற விவரமும் எனக்கு வேண்டும்."

"சரி... நான் தருகிறேன்."

"எவ்வளவு நேரம் ஆகும்?"

"இன்னும் கால் மணி நேரத்தில் தயார் செய்து விடுகிறேன்."

"இந்த மாதிரி கட்டுரைகள் நம் பத்திரிகையில் வர வேண்டும். எனக்குத் தெரியும் நீ கொஞ்சம் கொஞ்சமாக மாற்றங்களைப் பத்திரிகையில் புகுத்திக் கொண்டு இருக்கிறாய்.

பட் விற்பனையில் எந்த மாற்றமும் இல்லை. அதே மாதிரிதான் இருக்கிறது..."

"ஆனால் நாம் இப்பொழுதுதானே மாற்றங்களை அறிமுகப்படுத்தி இருக்கிறோம்."

"இட்ஸ் ஓ.கே. சில நேரம் அதிரடி மாற்றங்களை நிறையச் செய்ய வேண்டி இருக்கும்.

நீ அதில் கவனம் செலுத்த வேண்டும். தட்ஸ் வாட் ஐ வாண்ட் நவ்."

"ஓ.கே...."

"அப்புறம் விளம்பரத்தைப் பற்றிப் பேச ஒருவர் வருகிறார். நீயும் அந்த மீட்டிங்கில் இருக்க வேண்டும்."

"சரி... எத்தனை மணிக்கு?"

"இன்று மதியம் இரண்டு மணிக்கு."

"ஓ.கே..." என்றாள் பல்லைக் கடித்தபடி மிதுலா.

அவன் சென்ற பின்பு அவளிடம் இருந்து பெருமூச்சுப் பிறந்தது.

நான் மற்ற பத்திரிகைகளுக்கு எழுதுவது அவனுக்குப் பிடிக்கவில்லை என்று நினைக்கிறேன். அதனால்தான் இப்படிக் கத்துகிறான் போல.

பத்திரிகையின் 'பாலிஸி' எல்லாம் எனக்குத் தெரியும். நான் எந்தத் தவறும் செய்யவில்லை. அதனால் நான் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியம் இல்லை.

மன்னிப்புக் கேட்டால் நான் தவறு செய்தது போல் உறுதியாகிவிடும் என்று நினைத்தபடியே அவன் கேட்ட விவரங்கள் எல்லாம் சேகரிக்கத் தொடங்கினாள்.

அந்த விவரங்களை எல்லாம் சச்சித்திற்கு ஈமெயிலாக அனுப்பினாள் மிதுலா. பின்பு தம்பிக்கு ஃபோன் செய்து அவனுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டாள்.

அடுத்த இரண்டு மணி நேரம் கணினியில் பத்திரிகையின் லே-அவுட் சரியாக இருக்கிறதா என்று செக் செய்து கொண்டிருந்தாள் அவள்.

கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஒன்றாகி விட்டதா? அதுதான் வயிற்றில் மணி அடிக்கிறது என நினைத்தபடியே லன்ச் ஹாலிற்குள் சென்றாள்.

லன்ச் சாப்பிட்ட பின்பு சச்சித் ரூமிற்குச் செல்ல வேண்டும். அந்த மீட்டிங்கில் பங்கேற்க வேண்டும் என்று நினைத்தபடியே சாப்பிடத் தொடங்கினாள்.

இரண்டு மணிக்குச் சரியாக சச்சித்தின் அறைக்குள் சென்றாள் அவள்.

அந்த மீட்டிங்கில் பங்கேற்க வந்திருந்தவர் ஒரு விளம்பரக் கம்பெனியின் தலைவர்.

சச்சித்தும் அவரும் மாறி மாறிப் பேசியபடி இருந்தனர். அந்த மீட்டிங் காரசாரமான விவாதமாக மாறியது.

தான் சொல்லும் கருத்துகளை சச்சித் வலியுறுத்திப் பேசியது அவளுக்குப் புதிது இல்லை. ஆனால் அந்தத் தலைவருக்கு அது புதிது.

சில நேரம் அவர் சச்சித்தின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறுவதைப் பார்க்க அவளுக்குப் பாவமாக இருந்தது.

அவளுக்குக் கொஞ்சம் பதட்டமாகவும் இருந்தது. புதிய எடிட்டரான அவளின் பங்கு இந்த மீட்டிங்கில் என்னவாகயிருக்கும் என்று யோசித்தபடியே இருந்தாள் அவள்.

"புது எடிட்டரைக் கூட ஒரு பேட்டி எடுக்கலாம் சச்சித். அது உங்களுக்கு ஓ.கே.தானே..."

"ம்... நீங்க சொல்றது நல்ல ஐடியாதான்."

"பேட்டி எதில வரும்?"

"எல்லா முக்கியத் தொலைக்காட்சி சேனல்களிலும் வரும்படி செய்யலாம்."

அதைக் கேட்டுப் பதறினாள் மிதுலா. மீடியா, பேட்டி இதெல்லாம் அவள் தள்ளி வைத்து இருக்கும் ஒன்று.



கடைசியாகப் பத்திரிகை வெற்றிகரமாகச் செயல்பட என்னென்ன விளம்பர யுக்திகள் செய்ய வேண்டும் என்று கலந்தாலோசித்தனர் இருவரும்.

அதன் பின்பு அந்தக் கம்பெனியின் தலைவர் அங்கிருந்து சென்று விட்டார். ஒரு நிம்மதிப் பெருமூச்சு அவளிடம் இருந்து பிறந்தது.

"இந்தப் பத்திரிகைக்கு நாம 'தி நியூ ஃபேஸ்' அப்படின்னு மாத்திப் பெயர் வைக்கலாமா?"

"இது நல்ல ஐடியா. ஐ லைக் இட்..."

"யூ ஆர் வெல்கம்..."

"ம்... மிதுலா. எனக்கு இந்த மாற்றங்கள் செய்வதற்கு உன் முழுமையான ஒத்துழைப்பு வேண்டும்."

"அது எப்பவுமே உண்டு. எனக்கு வேலை பற்றித் தெரியும் என்று நீங்கள் என்னிடம் சொன்னதாக ஞாபகம்."

"ம்... நீ செய்வதை எப்பவும் புகழ வேண்டும் என்று நீ எதிர்பார்க்கிறாயா...?"

அவன் சொன்னதைக் கேட்டு அவள் முகம் அவமானத்தால் சிவந்தது.

ஏதும் சொல்லாமல் அவனை எரித்துவிடுவது போல் பார்த்தாள். அவன் கண்களும் அவள் விழிகளும் சந்தித்தன.

அங்கிருந்து எழுந்தவள் தன் அறைக்குச் செல்லத் தொடங்கினாள்.

"மிதுலா! ஒரு நிமிஷம்..."

"என்ன...?" என்று திரும்பினாள்.

"இந்தா. இதில் பத்தாயிரம் பணம் உள்ளது!" என்று அவளிடம் ஒரு கவரை நீட்டினான்.

"இது எதற்கு...?"

"மாதவி மேடமிற்கு ஏதாவது பரிசு வாங்க வேண்டு... நீயே வாங்கிவிடு..."

"பட்... என்ன வாங்குவது...?"

"நீயே அதை முடிவு செய்யலாம்..."

"ஒரு வாட்ச் வாங்கலாமா..."

"அவர்களுக்கு வாட்ச் பிடிக்கும் என்றால் அதை வாங்கி விடு..."

"அவர்களுக்கு வேலைதான் பிடிக்கும். வேலை மட்டுமே பிடிக்கும்.

அதை உங்களால் வாங்கித் தர முடியுமா...?"

"லுக். நாம் அதைப் பற்றிப் பேசத் தயாராக இல்லை. தி சப்ஜெக்ட் இஸ் க்ளோஸ்ட்..."

"யூ திங்க் மணி வில் சால்வ் எவ்ரி திங். அப்படி தானே? இது மேடமிற்குப் புதிய வேலையைக் கொடுக்கு...

இந்தப் பணத்தில் ஒரு பரிசு வாங்கிக் கொடுத்தா... உங்கள் வேலை முடிந்து விட்டது. அப்படித்தானே?

அவர்கள் வயதிற்கு இனி வேலை கிடைப்பது கஷ்... அதைப் பற்றி நினைத்து இருக்கிறீர்களா?



மேடம் இந்த வேலையை உயிர் போல் கருதி இருந்தார்கள். அவர்கள் திருமணம்கூடச் செய்து கொள்ள வில்லை. அது தெரியுமா?" என்று படபடத்தாள்.

"ஓ... ஸ்டாப் இட். அவர்களுக்கு ஒரு விதவைத் தாய் இருக்கிறார்கள். அப்புறம் ஒரு கால் ஊனமான தம்பி இருக்கிறான்.

அவர்கள் சாப்பாட்டில்தான் மண்ணைப் போட்டு விட்டேன் என்று சொல்வாய் போல.

விட்டால் நீ பாட்டுக்கு ஏதேதோ பேசுகிறாய். வாட் ஆர் யூ திங்க்கிங்."

அவன் சொன்னதைக் கேட்டுத் திகைத்தாள் அவள். விதவைத் தாயும், ஊனமான தம்பியும் எனக்கு இருக்கிறார்கள் என்று கத்த வேண்டும் போல் இருந்தது அவளுக்கு.

அவள் மௌனமாக இருப்பதை அவன் கவனித்தான்.

"லுக் மிதுலா. நான் நடத்துவது பிஸினெஸ். நான் மேடமிற்கு நிறைய வாய்ப்புகள் கொடுத்துவிட்டேன்.

கடைசியாக அவர்களே ரிடையர் ஆவதாகச் சொல்லி விட்டார்கள். இது... பிஸினெஸ்.

நான் ஒன்றும் தர்ம ஸ்தாபனம் வைத்து நடத்த வில்லை."

"ஓ... இட்ஸ் ட்ரூ!" என்றாள் கிண்டலாக.

"உன்னை..." என்று அவளைக் கோபமாகக் கத்துவ தற்குள் அவள் அவன் அறையை விட்டு வெளியேறி விட்டாள்.

தன் அறைக்குள் வந்தவளுக்குக் கோபம் அடங்கவில்லை.

பணம் இருக்கும் திமிரால் அவன் என்ன வேண்டுமானாலும் செய்யலாம், பேசலாம் என நினைத்துக் கொண்டு இருக்கிறான்.

அது தவறு என்று புரிய வைக்க வேண்டும் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் அவள்.

சாயங்காலம் வீடு திரும்பும்பொழுது அருண் வீட்டில் இருப்பதைப் பார்த்தவுடன் அவள் மனம் நிம்மதி ஆனது.

"அருண், ஹவ் ஆர் யூ? முதல் நாள் எப்படி இருந்தது...?"

"நல்லாயிருந்தது அக்கா. அப்புறம் உனக்கு விக்ரம் என்று யாராவது நினைவிருக்கா...?"

"ம்... விக்ரம். என் காலேஜ் சீனியர். படிப்பு என்றால் வேப்பங்காய் அவனுக்கு.

பாதியிலேயே படிப்பை விட்டுவிட்டானே. அவனா நீ சொல்ற விக்ரம்?"

"அவனேதான். அவன் இப்ப என்ன செய்து கொண்டு இருக்கிறான், சொல்..."

"தெரியலைடா... நீயே சொல்..."

"அவன் சொந்தமாகத் தொழில் வைத்து நடத்துகிறான் அக்கா..."

"அவனா... ஆச்சரியமா இருக்கே..."



"ஏன் அக்கா...?"

"அவன் ரொம்ப ஷை டைப்டா. சட்டுன்னு யாரிடமும் பேச மாட்டான்."

"அவனும் இந்த கம்பெனிக்கு டிரெயினிங்கிற்காக வந்து இருக்கிறான்."

"பட் அவன் பிஸினெஸ் செய்வதாகச் சொன்னியே அருண்... குழப்புறியே என்னை..."

"அவன் நிறையக் கார்களை வாடகைக்கு விடுகிறான் அக்கா. அதில் நல்ல வருமானமாம்...

ஆனால் டிகிரி முடிக்க வேண்டும் என்ற ஆசை போல அவனுக்கு.

அதனாலதான் இந்தப் பயிற்சிக்கு வந்திருக்கிறான்."

"பட்... அவனுக்கு எப்படி என்னைப் பத்தி தெரிந்ததுடா...?"

"நாங்க ரெண்டு பேரும் லன்ச் டையத்தில் பேசிக் கொண்டு இருந்தோம். அவன் படித்த காலேஜைச் சொன்னான்.

அப்பொழுதுதான் நான் அவனிடம் உன்னைப் பற்றி கேஷுவலாகச் சொன்னேன்.

உடனே அவனுக்கு ஞாபகம் வந்துவிட்டது.

உன்னைப் பற்றி என்ன சொன்னான் தெரியுமா...?"

"என்ன சொன்னான்...?"

"ஜூனியர் கேர்ல்ஸில் நீதான் ரொம்ப அழகா பெண்ணாம்...

போத் ப்ரெட்டி அண்ட் பிரெயினி கேர்ல் நீயாம்..." என்றான் அருண்.

அவள் அதைக் கேட்டுச் சிரித்தாள்.

"ஏய். அவன் மக்கு... அவன் பேச்சைப் போய்..." என்றாள் சிரித்தபடி.

"அக்கா. அவன் அப்ப மக்கா இருந்திருக்கலாம். இப் இல்லை அப்படி.

அவன் நாளைக்கு என்னை இங்கே வந்து காரில் பி அப் செய்ய வருகிறானாம். நாங்கள் கொஞ்சம் புத்தகங்க வாங்க வேண்டும்..."

"ஓ... அவனிடம் கார் இருக்கிறதா...?"

"அக்கா... அவன் சொகுசுக் கார் வைத்திருக்கிறா பென்ஸ் கார்.

நீ அவனைப் பழைய விக்ரமாக நினைக்காதே..."

"சரிடா... இனிமேல் புதிய விக்ரமாகப் பார்க்கிறேன்" என்றாள் கிண்டலாக.

இருவரும் சாப்பிட்டு முடித்த பின்பு தூங்கச் சென்றன தூங்கும்பொழுது காலையில் சச்சித்தோடு போட்ட சண்ட அவள் நினைவுக்கு வந்தது.

பாவம் மேடம் என்று நினைத்தாள் அவள்.

ஆனால் அவள் மனச்சாட்சி எதிர்க் குரல் எழுப்பியது



மேடமை சச்சித் வேலையிலிருந்து துரத்தவில்லை. அவர்களாகப் போகும் முடிவை எடுத்தார்கள்.

சச்சித் அவர்களுக்கு நல்ல தொகையை ஓய்வுப் பணமாகக் கொடுக்கப் போவதை மேடமே சொன்னார்கள். அதோடு அவர்களுக்குப் பரிசுத் தொகை பத்தாயிரம் வேறு.

அதனால் அவனைக் குறை சொல்வது தப்பு என்று அவள் மனச்சாட்சி குரல் எழுப்பியது.

அவன் நினைப்பை வலுக் காட்டாயமாக மனதில் இருந்து அழித்தாள் அவள்.

விக்ரம் தம்பியோடு கம்பெனியில் டிரெயினிங் எடுப்பது நல்லதிற்குத்தான். அருணை அவன் பார்த்துக் கொள்வான் என்று நினைத்தபடியே தூங்கத் தொடங்கினாள் அவள்.

## 7

என்னைக்
கவிஞன்
ஆக்கியது
வானமும்
நிலவும்
கதிரவனும்
மலரும்
மண்ணும்
வானவில்லும்
இல்லை
.....

உன்
வளையோசை
உன்
கொலுசு ஒலி
உன்
புன்னகை
உன்
செல்லச்
சிணுங்கல்
.....
இவைதான்
என்னைக்
கவிஞனாக்கியது
பெண்ணே!

**அ**டுத்த நாள் சாயங்காலம் மிதுலா வீட்டி
வரும்பொழுது மணி ஏழுக்கு மேல் ஆகிவிட்டது. பூட்டை
திறக்கும்பொழுது ஏன் அருண் வரவில்லை என்ற கே
அவள் மனதைக் குடைந்தது.

நேற்று இதற்கு முன்னாலேயே வந்துவிட்டா
இன்னிக்கு என்ன ஆச்சு? ஏதாவது டிராஃபிக் ஜாமா
யோசித்தபடியே இருந்தாள் அவள்.

குளித்துவிட்டு வந்தவள் அருணுக்கு ஃபோன் செ
பார்த்தாள். 'ஸ்விட்சுட் ஆஃப்' என்ற குரல் கேட்டவுடன் அ
மனம் பதறியது.

காலிங் பெல் சத்தம் கேட்க, வேகமாகக் கத



அங்கே அருண் நின்று கொண்டு இருந்தான். அவன் அருகே ஒல்லியாக, உயரமாகக் குறுந்தாடியுடன் புதியவன் ஒருவன் நின்று கொண்டு இருந்தான்.

"ஹாய் மிதுலா. நான்தான் விக்ரம். அடையாளம் தெரியலையா...?" என்றான் லேசான புன்முறுவலோடு புதியவன்.

"ஹாய் விக்ரம். வா உள்ளே. நீ ரொம்ப மெலிஞ்சு போயிருக்க. அதான் சட்டுன்னு அடையாளம் தெரியலை.

வா... உள்ளே வா. நேற்றுதான் அருண் உன்னைப் பற்றிச் சொல்லிக்கொண்டு இருந்தான்."

"ஆமாம் மிதுலா. நானும் உன் தம்பியும் இப்ப ஒரே இடத்திலதான் ட்ரெயினிங் எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

அப்பறம் ஹவ் ஆர் யூ? ஹவ் இஸ் யுவர் வொர்க்?"

"ஐயாம் குட். 'தி ரியல் ஃபேஸ்' பத்திரிகையில் எடிட்டராக இருக்கிறேன்."

"வாவ். தட்ஸ் குட். உனக்கு எப்பவுமே எழுதுவதில் ஆர்வம் அதிகமாச்சே.

காலேஜ் மேகசினில் நீ நிறைய எழுதியிருக்காயே. கதை, கவிதை, கட்டுரை என்று..."

"ஓ... உனக்கு அதெல்லாம் ஞாபகம் இருக்குதா...?"

"ம்... அதெப்படி மறக்க முடியும்? உன் போன்ற ஒரு அழகான பெண் என்ன எழுதினாலும் அது கவிதைதான்."

அதைக் கேட்டு அவள் சிரித்தாள்.

"விக்ரம் நீ ரொம்ப மாறிட்ட. காலேஜ் டேஸ்ல பேசவே மாட்டே நீ. இப்ப இவ்வளவு பேச்சுப் பேசற..."

"நான் பிஸினெஸ் செய்யறதால கூட பேச்சு டெவலப் ஆகியிருக்கலாம்.

அப்பா தமிழ்நாடு முழுவதும் சுற்றி அலைந்து, போ அடித்து ரிடையர்மெண்ட் வாங்கிக் கொண்டார்.

அவருக்குத் துணையாக நானும் வீட்டில் இருப்பது அவருக்கும் பிடிக்கவில்லை. எனக்கும் பிடிக்கவில்லை.

அதனால் தான் நான் பிஸினெஸில் ஈடுபட ஆரம்பித்தேன். முதலில் ரொம்ப சின்ன அளவில்தான் துவங்கினேன்.

பட்! இப்ப என்னிடம் நூறு பேர் முழு நேரமாக பணி புரிகிறார்கள். ஐம்பது பேர் பார்ட் டைமில் வேலை பார்க்கிறார்கள். கார்களை வாடகைக்கு விடறதுதான் என் பிஸினெஸ்."

"நைஸ் விக்ரம். சந்தோஷமா இருக்கு. உன்னை இந்த நிலைமையில பார்க்கறதுக்கு.

சரி. டின்னர் என்ன செய்யட்டும் சொல். உனக்கு பிடித்த ஃபுட் என்ன...?"

"எனக்குப் பிடித்ததை உன்னால் சமைக்க முடியாது."

"டோண்ட் சேலன்ஜ் மீ. சொல்லு பார்க்கலாம். நான் செய்யறேன்."

"ம்... சிக்கன் சிக்ஸ்டி ஃபைவ், அப்புறம்..." என்று அவன் முடிக்கும் முன்பு குறுக்கிட்டாள் அவள்.



"கமான் விக்ரம். நான் சுத்த சைவம். இதெல்லாம் நோ சான்ஸ்.

என்னாலே முடியாது. உன்னை நான் கேட்டே இருக்கக் கூடாது."

அவன் அதைக் கேட்டுச் சிரித்தான்.

"நான் அதான் சொன்னேன். 'உன்னால் எனக்குப் பிடித்ததை எல்லாம் சமைக்க முடியாது என்று."

"ம்... யூ ஆர் ரைட்.. சரி, சப்பாத்தி, உருளைக் கிழங்கு ஓ.கே.வா?"

"உனக்கு எது ஈஸியோ அதைச் செய். பாவம், நீ வேலைக்குப் போய்விட்டுக் களைத்துப் போய் வந்திருப்பாய்."

"தேங்க்ஸ் விக்ரம். நீங்க ரெண்டு பேரும் பேசிட்டு இருங்க. நான் குக்கர் வெச்சிட்டு வந்திடறேன்." என்று சொல்லிவிட்டு கிச்சனுள் நுழைந்தாள் அவள்.

அவள் கைபேசி சிணுங்கியது.

"விக்ரம், என் ஃபோன் டிஸ்பிளேயில் யார் பெயர் தெரியுது...?"

"ம்... 'சச்சித்' அப்படின்னு இருக்கு."

"அதை அட்டெண்ட் செய் விக்ரம். நான் இன்னும் பத்து நிமிஷத்தில திருப்பிக் கூப்பிடறேன்னு சொல்."

"ஓ.கே..."

"ஹலோ நான் மிதுலா ஃப்ரெண்ட் விக்ரம் பேசறேன். கிச்சனில் ஷீ இஸ் பிஸி.

இன்னும் பத்து நிமிஷத்தில உங்களைத் திருப்பிக் கூப்பிடறேன்னு சொன்னாங்க," என்று இணைப்பைத் துண்டித்தான்.

"விக்ரம்... என்ன சொன்னார் சச்சித்?"

"ஹலோ மட்டுமே சொன்னார். அதற்குள் நான் நீ சொன்னதை அவரிடம் சொல்லிவிட்டு கட் செய்துவிட்டேன்.

ஹிஸ் வாய்ஸ் வெரி டிமாண்டிங். வேலையிலும் அப்படித்தானா...?"

"ஆமாம்... யூ ஆர் ரைட்."

சப்பாத்தி மாவைப் பிசைந்து வைத்துவிட்டு, உருளைக் கிழங்கை குக்கரில் வேக வைத்தாள். இப்ப எதற்கு சச்சித் அழைத்தான்?

ஏதாவது எமர்ஜென்சியா என யோசித்தபடியே சப்பாத்தி இட்டு முடித்தாள். அவனிடம் பேசிவிடலாம் என முடிவு செய்தாள்.

"ஹலோ, நான் மிதுலா பேசறேன்."

"ம்... ரொம்ப பிஸி போல..."

"ஆமாம்... என் ஃப்ரெண்ட் வந்திருக்கிறான். ஹி இஸ் மை காலேஜ்மேட்.

சொல்லுங்க. என்ன விஷயமா கூப்பிட்டீங்க...?"

"நாளைக்கு நீ சீக்கிரம் ஆஃபீஸிற்கு வர வேண்டும். ஒரு முக்கியமான வேலை இருக்கு.

வர முடியும்தானே. இல்லை, உன் ஃபிரெண்டோடு பிஸியாக வேறு ஏதாவது வேலை இருக்குமா...?"



"நாளை எத்தனை மணிக்கு வர வேண்டும்...?"

"ம்... காலை ஏழு மணிக்கு..."

"சரி. நான் ஏழு மணிக்கு அங்கு இருப்பேன்!" என்று சொல்லிவிட்டு சிவப்பு பட்டனை அமுத்தினாள்.

அவன் 'ப்ரெண்ட்' என்பதில் வேண்டும் என்றே அழுத்தம் கொடுத்தது அவள் நினைவுக்கு வந்தது. கோபத்தால் அவள் முகம் சிவந்தது.

"என்ன அக்கா சட்டுன்னு டல்லாயிட்ட. எனி ப்ராப்ளம்?"

"இல்லை அருண். அதெல்லாம் ஒன்றும் இல்லை. நாளைக்கு நான் சீக்கிரமா ஆஃபீஸ் போக வேண்டும்.

உன்னை எப்படி டிராப் செய்வது என்று யோசிக்கிறேன்."

"மிதுலா... நான் வந்து அருணைப் பிக் அப் செய்கிறேன்..."

"தேங்க்ஸ் விக்ரம்... நாளைக்கு ஒருநாள் மட்டும் நீங்க அருணை ட்ராப் செஞ்சிடுங்க."

"நாளைக்கு மட்டும் இல்லை மிதுலா. டெய்லி நானே அருணை பிக்அப் அண்ட் ட்ராப் செய்யறேன்."

"ஓ... நோ. அதெல்லாம் வேண்டாம். எதுக்கு சிரமம்...?"

"ஓ... கமான் மிதுலா. இதில என்ன சிரமம்? நான் இந்த வழியாகத் தான் போகணும்.

அதனால எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. எனக்கும் பேசறதுக்கு ஒரு ஆள் கிடைச்ச மாதிரி இருக்கும்..."

"ஓ.கே... விக்ரம். தேங்க்ஸ் எ லாட். அப்ப உனக்கு நான் இதுக்கு உண்டான பணத்தைக் கொடுத்திடுவேன்.

அப்பதான் நான் இதுக்கு ஒத்துப்பேன்."

"நோ மிதுலா... பணம் வேண்டாம். அதற்குப் பதில் எனக்கு லன்ச் பேக் செய்து தர முடியுமா?

நேற்று அருண் லன்ச் கொஞ்சம் சாப்பிட்டேன். வெரி டேஸ்டி. லெமன் ரைஸ் அண்ட் கீரைக் கூட்டு.

அருணிற்குக் கொடுக்கற அளவே பேக் செய்து கொடுத்தால் போதும் ப்ளீஸ்."

அதைக் கேட்டு அவள் சிரித்தாள்.

"அடப் பாவமே... நீ சாப்பாட்டிற்கு இவ்வளவு காய்ந்து போயிருக்கியா விக்ரம்...

நோ ப்ராப்ளம். நான் உனக்கும் டெய்லி ஒரு பேக் தருகிறேன்."

"அக்கா... பசிக்குது. சாப்பிடலாமா...?"

"வாடா... சப்பாத்தி, உருளைக்கிழங்கு ரெடி. விக்ரம், கம்... சூடா சாப்பிட்டால் நல்லா இருக்கும்."

மூவரும் பேசிச் சிரித்தபடியே சாப்பிட்டனர்.

"தேங்க்ஸ் மிதுலா... சப்பாத்தி ரொம்ப டேஸ்டாக இருந்தது. நீ பேசாமல் ஒரு ஹோட்டல் ஆரம்பிக்கலாம்."

"ஓ... நீ பிஸினெஸில் நல்லபடியாக இருப்பதால் எல்லோரையும் பிஸினெஸ் செய்யத் தூண்டுகிறாயா...?



ஐ மே பி எ ஃபிளாப் இன் தட். பிஸினெஸிற்கு நிறையத் திறமை வேண்டும்."

"ரிஸ்க் எடுக்கற மனப்பக்குவம், ஹார்ட் ஒர்க் இது மட்டும் போதும் பிஸினெஸிற்கு.

டேக் யுவர் டைம் மிதுலா. சரி. நான் கிளம்பறேன். அருண், பை. நாளைக்கு வந்து உன்னை பிக் அப் செய்யறேன். தயாரா இரு."

"பை விக்ரம். நான் ரெடியா இருப்பேன்."

அவன் சென்ற பிறகு கிச்சனை க்ளீன் செய்து பாலைக் காய்ச்சி ஃப்ரிட்ஜில் வைத்தாள்.

அடுத்த நாளிற்குத் தேவையான காய்கறிகளை நறுக்கி வைத்தாள். என்ன முக்கிய வேலையாக இருக்கும் என நினைத்தபடியே படுக்கையைத் தயார் செய்தாள்.

காலை ஐந்து மணியளவில் கைபேசியில் அவள் வைத்த 'அலாரம்' 'பீப்பீப்' என்ற ஓசை எழுப்பியது.

சோம்பலாகப் படுக்கையிலிருந்து எழுந்தாள் மிதுலா. இன்னும் கொஞ்ச நேரம் தூங்க வேண்டும் என்று உடல் கெஞ்சியது.

அதைப் புறக்கணித்துவிட்டுக் குளியல் அறை நோக்கி நடந்தாள். பல் துலக்கிவிட்டு, குளித்துவிட்டு வந்த பின்பு தெம்பாக இருந்தது.

கடகடவெனச் சமையலை முடித்தாள். அருணிற்கும், விக்ரமிற்கும் லன்ச் பேக் செய்துவிட்டு, தனக்கும் ஒரு பேக் எடுத்து வைத்துக் கொண்டாள்.

காலிங்பெல் சத்தம் கேட்டது. பேப்பராக இருக்கும் என நினைத்தபடியே கதவைத் திறந்தாள்.

"ஹாய் விக்ரம்... குட்மார்னிங். வா உள்ள. அருண் குளிக்கிறான்.

நான் இன்னிக்கு சீக்கிரமா கிளம்பணும்."

"தெரியுமே... நேத்து உன் பாஸ் உன்னிடம் பேசு பொழுது நான் இருந்தேனே.

வா, உன்னை ஆபீஸில் கொண்டு போய் விடுகிறேன். அப்புறம் நான் அருணை அழைத்துக் கொண் கம்பெனிக்குப் போகிறேன்."

"உனக்கு எதுக்கு சிரமம் விக்ரம்..."

"வா... வா... கார் தானே உன்னை சுமக்கப் போகிறது"

குளித்துவிட்டுத் தலை துவட்டியபடியே வெளியே வந்தான் அருண்.

"அக்கா... விக்ரம் சொல்றது கரெக்ட். இப்பவே மணி ஆறே கால் ஆயிடுச்சு.

நீ இனி ஸ்கூட்டியில், பெட்ரோல் போட்டு விட்டுப் போக லேட்டாகும்.

அப்புறம் உன் 'பாஸிடம்' பாட்டு வாங்கப் போகிறாய். நீயே டிஸைட் செய்து கொள்..."

"சரி விக்ரம். நான் உன்னுடனேயே வந்து விடுகிறேன். ஒரு ஐந்து நிமிஷம் டைம் கொடு." என்றபடி தன் அறைக்குள் சென்றாள் மிதுலா.



கொண்டையைக் கழற்றிவிட்டுத் தலைமுடியை 'ஃப்ரீ ஹேராக' விரித்து விட்டாள். மேலே ஒரு பட்டர்பிளை க்ளிப்பைப் பொருத்தினாள்.

லேசாக பவுடர் பூசிக்கொண்டாள். பின் கைப்பையில் தேவையானவை எல்லாம் இருக்கிறதா என்று சரி பார்த்துக் கொண்டாள்.

"விக்ரம், போகலாமா...?"

"கம் மிதுலா. ஐயாம் ரெடி."

"அருண், பத்திரமாக இரு. இன்னும் கொஞ்ச நேரத்தில் விக்ரம் வந்திடுவார். இட்லி, சட்னி இருக்கு. ரெண்டு பேரும் சாப்பிட்டுவிட்டு கம்பெனிக்குக் கிளம்புங்க."

"மிதுலா. நான் உன்னை லன்ச் கேட்டால் கூடவே போனசாக பிரேக் ஃபாஸ்ட்டும் இலவசமா..."

"யெஸ். ஒன்று சாப்பிட்டால் ஒன்று ஃப்ரீ. வாங்க போகலாம்."

இருவரும் சிரித்தபடியே வெளியே வந்தனர். ரோட்டை அடைத்துக்கொண்டு நின்ற பென்ஸ் காரைப் பார்த்தாள் மிதுலா.

அதன் அருகில் தயங்கி நின்றாள்.

"கமான் மிதுலா... ஏறு உள்ளே." என்று கதவைத் திறந்து விட்டான் விக்ரம்.

டிரைவர் சீட் அருகே இருந்த சீட்டில் உட்கார்ந்து கொண்டாள் அவள். காரின் ஏ.சி. இதமாக இருந்தது.

"என்ன மிதுலா கொயட்டா இருக்க...?"

"ம்... நத்திங். ஏன் இன்னிக்கு பாஸ் சீக்கிரம் வர சொன்னார்ன்னு யோசிச்சுகிட்டு இருக்கேன்."

"ம்... இன்னும் கொஞ்ச நேரத்தில் தெரியப் போகுது. உனக்குப் பயம்மா என்ன உன் பாஸிடம்."

"பயம் எல்லாம் இல்லை. சச்சித் கொஞ்சம் கண்டிப்பானவன். தான் சொன்னதை அப்படியே செயல் படுத்த வேண்டும் என்று நினைப்பான்."

"ஓ... வெரி டாமினேட்டிங்."

"யெஸ். விக்ரம் நீ இங்கேயே நிறுத்திக் கொள் உள்ளே போக வேண்டும் என்றால் 'பாஸ்' போட வேண்டும்."

"ஓ... அப்படியா? சரி... நான் இந்த ஓரமாக நிறுத்தி கொள்கிறேன்."

"தேங்க்ஸ் விக்ரம்!" என்றபடியே காரிலிருந்து இறங்கினாள் அவள்.

கேட் அருகே ஹெலன் அப்பொழுதுதான் வந்து கொண்டு இருந்தாள்.

"ஹாய் மிதுலா... குட்மார்னிங். யார் அது மிஸ்டர் ஹேண்ட்ஸம்..."

"ஏய்... ஹி இஸ் மை ஃப்ரெண்ட்."

"இவ்வளவு நாள் இந்த மாதிரி ஒரு ஃபிரெண்ட் இருக்கறதை நீ சொல்லவே இல்லையே..."

"கமான் ஹெலன். நானே விக்ரமை இப்பத்தான் ரொம்ப வருஷம் கழிச்சுச் சந்திக்கிறேன்."



"ஓ... பெரிய பணக்காரர் போல. காரைப் பார்த்தாலே தெரிகிறது."

"ம்... யெஸ். பிஸினெஸ் செய்கிறார் விக்ரம். எனக்குச் சீக்கிரமாக வர வேண்டும் என்பதால் என்னை டிராப் செய்ய வந்தார்."

"ம்... நேற்று நீ லேட் போல. எப்பவும் சீக்கிரமாக வந்து விடுவாய்."

"யெஸ். என் நேரம் சரியில்லை. அதான் நேற்று லேட். பாஸ் கரெக்டா என் ரூமில் எனக்காக வெயிட் செய்து கொண்டு இருந்தார்."

"உன்னைத் திட்டினாரா என்ன...?"

"இல்லை... இல்லை. ஹி வாஸ் நைஸ். எனக்கே ஆச்சரியமாகத்தான் இருந்தது."

"உனக்கு ஞாபகம் இருக்கிறதா மிதுலா. புது பாஸ் எப்படி இருப்பாரோ என்று நாம எப்படிப் பயந்துகொண்டு இருந்தோம்..."

"ம்... யெஸ்," என்றாள் சிரித்தபடியே மிதுலா.

"ஆனால் பரவாயில்லை. இவர் ரொம்ப மோசம் எல்லாம் இல்லை."

"உடனே முடிவெடுக்க முடியாது ஹெலன். பொறுத்திருந்து பார்ப்போம்.

இன்னிக்கு லேட் ஆகுமா? நான் சீக்கிரமாகப் போக வேண்டும்."

"ஏன்... எனிதிங் ரிலேட்டட் டு தட் ஹேண்ட்ஸ பெர்ஸன்."

"யாரைச் சொல்கிறாய் நீ?"

"உன்னைக் காரில் டிராப் செய்தாரே, அவரைத்தா சொல்கிறேன்."

மிதுலா பதில் சொல்ல வாயைத் திறந்தாள்.

"மிதுலா... நான் உன்னுடன் பேச வேண்டும்," என் பின்னால் இருந்து சச்சித் குரல். திடுக்கிட்டுத் திரும்பினா அவள்.

"பை மிதுலா!" என்று சொல்லிவிட்டு, ஹெல அங்கிருந்து வேகமாக நகர்ந்தாள்.

"வா என் ரூமிற்கு உடனே..."

"சரி..." என்றவள் தன் அறையில் கைப்பை வைத்துவிட்டு அவன் அறை நோக்கிச் சென்றாள்.

"இன்னும் ஏழு மணி ஆகவில்லை. ஏழு ஆக ஐந் நிமிடங்கள் உள்ளன," என்றாள் அவனைப் பார்த்து.

லேப்டாப்பில் இருந்து பார்வையை அவள் மேச் பதித்தான் அவன்.

"ஸோ ஏழு மணி வரை என்ன செய்யலாம்? நான் ஏழு மணிக்கு பிஸினெஸ் விஷயம் பேசுகிறேன்," என்றான்.

அவன் கண்களில் தெரிந்த கோபம் அவளுக்ச் எரிச்சலை மூட்டியது.

"நான் அப்படிச் சொல்லவில்லை. நானும் ஹெலனும் ஆஃபீஸ் டயத்தை வேஸ்ட் செய்வது போல் நீங்கள் பேசினீர்கள்.



அதற்காகத்தான் நான் மணி ஏழாகவில்லை என்றேன்."

"நான் அந்த அர்த்தத்தில் அப்படிச் சொல்லவில்லை.

"வேறு எப்படி எடுத்துக் கொள்வது நான்? ஒரு வேளை நான் லேட்டாக வருகிறேனா என்று செக் செய்ய வந்தீர்களோ என்னவோ. இல்லை என்ன பேசுகிறோம் என்று கேட்க வந்தீர்களா...?"

"ஸ்டாப் இட். இது என் கம்பெனி. நான் எல்லா இடத்திற்கும் வர உரிமை உண்டு எனக்கு.

அதோடு நீயும் ஹெலனும் ரொம்ப ப்ரைவேட்டாக ஏதோ ரகசியம் பேசிக் கொண்டு ஒன்றும் இல்லை.

உன் பிரெண்ட் விக்ரம் பற்றி நீ அவளுடன் பேசிக் கொண்டு இருந்தாய். ரொம்ப சுவாரசியமாகப் பேசிக் கொண்டு இருந்தாய்.

நேற்று விக்ரம்தானே உன் வீட்டில் இருந்தான். அவன் உன்னுடனேயே இருக்கிறானா? ஐ மீன் ஒரே வீட்டில்..." என்று முடிப்பதற்குள் சீறினாள் அவள்.

"ஷட் அப்!" என்று சொன்னவளின் முகம் சிவந்தது கோபத்தால். அவனை அடிக்கத் துடித்த கையை அடக் கினாள் அவள்.

"நான் எதுவும் தப்பாகக் கேட்கவில்லை, மை டியர் கேர்ல்."

"டோண்ட் கால் மி லைக் தட்."

"ஏன் மிது? யூ கேன் பி மை கேர்ல். அன்றே நா
உன்னிடம் அதைச் சொல்லாமல் சொன்னேன். ஒ
பென்ஸ் கார் இருந்தால்தான் அது சாத்தியமா?"

அவளுக்குக் கோபத்தால் உடல் நடுங்கியது.

"ஐ டோண்ட் வாண்ட் டு பி யுவர் கேர்ல்."

"பட் ஐ ஹேவ் ஹோப்ஸ். ஒரு நாள் இது நிஜமாகு

"உங்கள் மனதை நீங்கள் மாற்றிக் கொள்ளுங்க

"ம்... நீ உன் மனதை மாற்றிக் கொள்." என்றவ
சட்டென அவள் முகத்தைக் கையில் ஏந்தினான்.

அவள் எழுந்திருக்க முடியாமல் அவன் அம
நாற்காலி கை மேல் உட்கார்ந்து இருந்தான்.

அவள் அவனைத் தள்ள முயன்றாள். ஆனா
அவன் உதடுகள் அவள் உதட்டைக் கோபமாகக் கவ்வி

தன் பலத்தை எல்லாம் திரட்டி அவனை விலக்கினா
அவள்.

தன் உதட்டை நாக்கால் ஈரப்படுத்திய பொழு
மிதுலாவிற்குப் புரிந்தது. உதட்டில் ரத்தம் கசிகிறது என்

சச்சித்தின் பார்வை அவள் உதடு மேல் பதிந்த
"ஐயாம் ஸாரி. நீ என்னை ரொம்ப கோபப்படுத்துகிறாய்.
மட்டும்தான் இப்படி என்னைச் செய்கிறாய். வேறு எந்த
பெண்ணும் என்னிடம் இப்படி எல்லாம் பேசியது கிடையாது

"நீங்கள் என்ன வேண்டுமானாலும் பேசுவீர்கள்
அதைக் கேட்டுக்கொண்டு நான் சும்மா இருக்க வேண்டு
என்று எதிர்பார்க்கிறீர்களா? ஐ ஹாவ் செல்ப் ரெஸ்பெக்ட்



என்று சொல்லிவிட்டு அவன் அறையிலிருந்து வேகமாக வெளியேறினாள்.

அவன் அறையை விட்டு வெளியே வந்த பின்பு கூட அவள் கோபம் அடங்கவில்லை. சச்சித் கேட்டதே அவள் காதில் ஒலித்துக் கொண்டு இருந்தது.

சே... என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறான் இவன் என்னைப் பற்றி? எவ்வளவு கேவலமான எண்ணம் இவனுக்கு... என்று நினைக்க நினைக்க அவளுக்குக் கண்கள் கலங்கின.

## 8

ஒரு
அந்தி
மாலை
நேரம்
தென்றல்
செல்லமாக
என்னைத்
தீண்டியது
..........
உன்
மூச்சுக்
காற்று
எனக்கு
ஞாபகம்
வந்தது
..........

பூக்களைப்
பார்த்த
பொழுது
உன்
புன்னகை
என்
மனதில்
விரிந்தது...
நினைவுகள் மட்டுமே...
என் வசம்...

"இன்று மாதவி மேடமிற்குப் பிரிவு உபசார ... அருண். அதனால் நான் வீடு திரும்ப நேரமாகும் எ... நினைக்கிறேன்."

"ஓ... அப்படியா அக்கா. நான் வேண்டுமான... உனக்கு டின்னர் தயார் செய்து வைக்கவா?"

"அருண், நீ டின்னர் செய்தால் யார் அ... சாப்பிடுவது?" என்றான் விக்ரம்.

அதைக் கேட்டு மிதுலா சிரித்தாள். விக்ரம் எவ்... இயல்பாகப் பழகுகிறான் என்று அவள் மனதில் ... நினைப்பு ஓடியது.

ஏனோ சச்சித்தின் நினைப்பு அவள் மனதில் அவ... அறியாமல் படர்ந்தது. அவன் சொன்ன வார்த்தைகள... தன்னால் மறக்கவே முடியாது போல என்று நினைத்து ... பெருமூச்சுப் பிறந்தது அவளிடம் இருந்து.

ஆஃபீஸில் அன்று அவளுக்கு வேலை ஒன்றன் பி... ஒன்றாகத் தயாராகக் காத்துக் கொண்டு இருந்தது. ஆஃ...



ரீடிங், லே-அவுட் செக்கிங், அட்வர்டைஸ்மெண்ட் சரியான பக்கத்தில் வந்திருக்கிறதா என்று எல்லாவற்றையும் சரி பார்த்தாள் அவள்.

"மிதுலா... வா, கீழே மெயின் ஹாலுக்குப் போகலாம். இன்னிக்கு மேடமோட லாஸ்ட் ஒர்க்கிங் டே. மறந்திட்டியா?" என்றாள் ஹெலன்.

"ஓ... கமான் ஹெலன். எப்படி மறக்க முடியும்? வேலை கரெக்டா இருந்தது. இந்த மெயில் ஒன்று மட்டும் பாக்கி. இதை அனுப்பிவிட்டு வருகிறேன்."

ஈமெயிலை அனுப்பிவிட்டு ஹெலனுடன் மெயின் ஹால் நோக்கி நடந்தாள் அவள். பத்திரிகை ஆஃபீஸில் இருந்த எல்லாரும் அங்கு இருந்தனர்.

மாதவி மேடம் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து இருப்பதைப் பார்க்க மிதுலாவிற்கு என்னவோ செய்தது.

சச்சித் ஒரு ஐந்து நிமிடங்கள் மேடமின் பத்திரிகை உலகத்தைப் பற்றிப் பேசினான். மாதவி மேடம் செய்த எல்லா முக்கிய வேலைகளையும் அழகாகப் பட்டியலிட்டான்.

அவன் பேசி முடித்த பின்பு ஹாலில் இருந்த அனைவரும் கைதட்டினர். மேடமிற்கு வாங்கி வைத்திருந்த பரிசுப் பெட்டியை அவன் மேடமிற்கு வழங்கினான்.

மேடம் ஒரு சில வார்த்தைகள் பேசினார்கள். அவர்களின் கண்கள் கலங்குவதை மிதுலா கவனித்தாள்.

ஏனோ அவளின் குற்ற உணர்வு அதிகரித்தது. எல்லாருக்கும் கேக், ஸமோஸா, கோக் வழங்கப்பட்டது. பசித்தாலும் சாப்பிடப் பிடிக்காமல் மேடமுடன் பேசியபடி நின்று கொண்டு இருந்தாள் அவள்.

"மிதுலா, என் அறையில் சில பெர்சனல் திங் இருக்கு. எடுக்கப் போகிறேன். நீயும் வருகிறாயா? இனி ஆ உன் அறை!" என்றாள் புன்முறுவலோடு மாதவி.

"கண்டிப்பா வரேன் மேடம்!" என்று அவளைப் பி தொடர்ந்தாள் மிதுலா.

அந்த அறையின் கப்போர்டில் இருந்து சி போட்டோக்களை எடுத்துக் கைப்பையில் வைத்து கொண்டாள் மாதவி.

"ஐ வில் மிஸ் யூ மேடம்!" என்றாள் மெல்லிய குரலி

"ஓ... கமான் மிதுலா. எல்லா வேலையும் நீயே தனியாக அழகாகச் செய்கிறாயே."

"ம்... ஐ வில் மிஸ் யூ பெர்ஸனலி."

"ஓ... வீட்டிற்கு வா மிதுலா. நான் இந்த வார சிங்கப்பூர் போகிறேன். என் அக்கா பெண் அங்கே இருக்கிறாள். ரொம்ப நாளாக என்னை அழைத்து கொண்டு இருக்கிறாள். ஒரு மாதம் இருந்து விட்டுத் திரும்பி வந்து விடுவேன்."

"நீங்கள் வந்த பின்பு எனக்கு ஃபோன் செய்யுங்கள் மேடம். நான் உங்கள் வீட்டுக்கு வருகிறேன்." என்றாள் மெல்லிய குரலில் மிதுலா.

"கண்டிப்பாக. அப்புறம் நீதான் இந்தப் பரிசை எனக்குத் தேர்வு செய்தாய் போல. சச்சித் சொன்னான். தேங்க்ஸ் ஃபார் இட் மிதுலா. வாட்ச் ரொம்ப அழகாக இருக்கிறது."



"யூ ஆர் வெல்கம் மேடம்."

மாதவி தன்னுடைய லேப்டாப்பை எடுக்கப் போனாள்.

"மேடம், நான் இதை உங்கள் காரில் கொண்டு வந்து வைக்கவா?"

"ஓ... ஷ்யூர். இந்தப் பை வேறு இருக்கிறதே... எப்படி எல்லாவற்றையும் எடுத்துப் போவது என்று யோசித்துக் கொண்டு இருந்தேன்."

மேடமின் லேப்டாப்பைக் காரில் பத்திரமாக வைத்தாள் அவள்.

"ஆல் தி பெஸ்ட் மிதுலா!" என்று தோளில் ஆதரவாகத் தட்டிக் கொடுத்தாள் மாதவி.

"தேங்க்ஸ் மேடம்."

மாதவியின் கார் போகும்வரை பார்த்தபடியே நின்றாள் அவள். ஏனோ ஒரு சோர்வு அவள் மனதில் புகை போல் படர்ந்தது.

தன் அறைக்குச் சென்றவள், டேபிளில் தலை சாய்த்துப் படுத்தாள். பின்பு தன்னைச் சமாளித்துக் கொண்டு கணினியை அணைத்தாள்.

தன் கப்போர்டில் இருந்த பொருட்கள், பின்பு டேபிளில் இருந்த பொருட்கள் எல்லாவற்றையும் ஒரு கவரில் போட்டாள்.

அந்தக் கவரை எடுத்துக் கொண்டு தன் புது ரூம் நோக்கிச் சென்றாள். ஆஃபீஸில் எல்லோரும் கிளம்பிப் போய் விட்டதால் விளக்குகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக எரிந்து கொண்டு இருந்தன.

புதிய ரூமில் தன்னுடைய பொருட்களை எல்லாம் அடுக்கி வைத்தாள் மிதுலா.

மீண்டும் தன் பழைய இடத்திற்குச் சென்றாள் மிதுலா. கண்ணாடி வழியாகக் கீழே சாலையை பார்த்தாள். நிறைய வாகனங்கள் சென்று கொண்டு இருந்தது அவள் கண்ணில் பட்டது.

எவ்வளவு பரபரப்பான வாழ்க்கை என்று நினைத்தபடியே திரும்பியவள், நடந்து வந்து கொண்டிருந்த சச்சித் மேல் மோதப் போனாள்.

"காட்... நான் பயந்து போய் விட்டேன் ஒரு நிமிஷம்" என்றாள் பதட்டமாக.

"ஸாரி... மாதவி மேடமின் அறையில் லைட் எரிந்து கொண்டிருந்தது. அவர்கள் உன்னுடன் பேசிக்கொண்டு இருக்கிறார்களா என்று பார்க்க வந்தேன்."

"இ... இல்லை. அவர்கள் போய் விட்டார்கள். நான்தான் என்னுடைய பொருட்கள் எல்லாவற்றையும் அவர்கள் அறையில் அடுக்கி வைத்தேன்."

"தட்ஸ் நைஸ். ஏதாவது உதவி வேண்டுமா?" என்றான் லேசான புன்முறுவலோடு.

அவன் சிரிக்கும்பொழுது மின்னிய பற்கள் அவளில் ஏதோ ஒரு உணர்வை ஏற்படுத்தியது.

"இல்லை... வேண்டாம்."

"தட்ஸ் குட். மாதவி மேடம் எங்காவது அழுது கொண்டு இருக்கிறார்களோ என்று பார்க்க வந்தேன்."



"அவர்கள் அதை வீட்டில் செய்து கொண்டு இருக்கலாம்."

"மே பீ..."

"அது உங்களைப் பாதிக்கவே இல்லையா?"

"ம்... பாதிக்கிறது என்று சொன்னால் நீ நம்புவாயா?"

"மாட்டேன்... நான் நம்ப மாட்டேன்."

"நீ டயத்தை வேஸ்ட் செய்யாமல் உன் பொருட்களை அங்கே புது அறைக்கு உடனே எடுத்துச் சென்று விட்டாயே... உன்னைப் பாதித்ததா என்ன மேடமின் ஓய்வு?"

அவள் முகம் அவமானத்தால் சிவந்தது.

"நாளைக்குக் காலையில் எடுத்து வைத்தால் டைம் வேஸ்டாகும் என்றுதான் நான் இப்பொழுதே எடுத்து வைக்கிறேன்." என்று படபடத்தாள்.

"ஓகே... ஐ ட்ரஸ்ட் யூ" என்றான் அவன்.

"சரி, குட் நைட். நான் வீட்டிற்குக் கிளம்புகிறேன்."

"நீ சாப்பிட்டாயா டின்னர்?"

"இல்லை... வீட்டிற்குப் போய்த்தான் சாப்பிட வேண்டும்."

"ஓ... என்னோடு டின்னர் சாப்பிட வருகிறாயா?"

அவள் ஏதும் சொல்லாமல் மௌனமாக இருந்தாள்.

"என்ன மிதுலா, ரொம்ப யோசிக்கிறாய்? வீட்டில் யாராவது உனக்காக டின்னருக்கு வெயிட் செய்றாங் களா?"

"என்ன பேசறீங்க? புரியவில்லை..."

"விக்ரம் உனக்காக வெயிட் செய்யறானோ அப்படின்னு நினைச்சேன்."

அவளுள் கோபம் புகை போல் பரவியது. அவள் முகம் சிவந்தது.

"விக்ரம் ஸண்டேதான் வருவார் டின்னருக்கு!" என்றாள் அவன் கண்களைப் பார்த்தபடி.

அவன் முகம் இறுகியதை அவள் கவனித்தாள்.

"ஓகே... அப்ப இன்னிக்கு என்னோட வா. இட்ஸ் ஒன்லி எ டின்னர். எனக்குத் தனியாகச் சாப்பிட போர் அடிக்குது. அதுதான். அதர்வைஸ் ஐ டோண்ட் ஹாவ் எனி அதர் இண்டெண்ட்."

"சரி, நான் வருகிறேன்."

அவன் கார் ஓட்டும்பொழுது ஸ்டியரிங்கைப் பிடித்து இருந்த அவன் வலிமையான விரல்களைப் பார்த்தாள் அவள்.

ஏன் தன் மனம் இப்படித் தடுமாறுகிறது எனத் தன்னையே கடிந்து கொண்டாள் அவள். மேடம் கம்பெனியை விட்டுப் போவதால் ஏற்பட்ட மன அழுத்தமாக இருக்கும் என்று தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டாள் அவள்.

அவன் அழைத்துச் சென்ற ஹோட்டலில் கூட்டம் அவ்வளவாக இல்லை.



மரங்களுக்கு இடையே டேபிள் போட்டு இருந்தனர். நிலவு வெளிச்சத்திற்குப் போட்டியாக அங்கங்கே விளக்குகள் எரிந்து கொண்டு இருந்தன.

செயற்கை நீர் ஊற்று, மெல்லிய இசை, பூக்களின் வாசம் இவை எல்லாமே மனதிற்கு இதத்தை அளித்தன.

"இங்கே உட்காரலாமா மிதுலா?"

"ம்... சரி..."

"நீ இங்கே இதற்கு முன்பு வந்திருக்கிறாயா?"

"இல்லை... வந்ததில்லை."

"இந்தா மெனு கார்ட். என்ன சாப்பிடப் போகிறாய்?"

கார்டைப் பார்த்தாள் மிதுலா. தென் இந்திய உணவு வகைகள், வட இந்திய உணவு வகைகள், சைனீஸ் நூடுல்ஸ் எனப் பல இருந்தன மெனு கார்டில்.

அதற்குள் சச்சித்தின் கைபேசி சிணுங்கியது.

"ம்... சொல்லு. இங்கேதான் இருக்கிறாயா? இங்கே என்றால் எங்கே? சென்னையிலா? சரி, சரி. அமெரிக்கா டூர் எப்படி இருந்தது? குட் யூ என்ஜாயிட் இட் மை டியர். ஐ டூ மிஸ் யூ!" என்று சொல்லிவிட்டு ஃபோனில் ஒரு முத்தத்தைப் பதித்தான்.

அவனை விழி அகலப் பார்த்தபடி இருந்தாள் மிதுலா. அவள் மனதில் ஏனோ ஒரு பொறாமை உணர்வு படர்ந்தது.

ஃபோனில் பேசியது யாராக இருக்கும்? நிச்சயமாகப் பெண்தான். அதனால்தான் இப்படிக் கொஞ்சுகிறான். சே...

ஃபோனில் முத்தம் வேறு... என்று மனம் குமைந்தாள் அவள்.

"என்ன மிதுலா... என்ன சாப்பிடப் போறே?"

"ஸாரி... என்ன கேட்டீங்க?"

"காட்... என்ன ஆச்சு உனக்கு? பகலிலேயே கனவா? என்ன சாப்பிடப் போறே?"

"எனக்குப் பசி இல்லை."

"பரவாயில்லை. சும்மா கொஞ்சம் சாப்பிடு. இல்லாவிட்டால் எனக்கு வயிறு வலிக்கும்."

"எதையாவது சொல்லுங்க."

"அப்ப பிரியாணி சொல்லவா?"

"மேக் இட் வெஜ் ப்ளீஸ்."

"அப்புறம் ஸ்வீட் ஏதாவது...?"

"எனக்கு ஸ்வீட் சாப்பிடும் மூட் இல்லை."

"ஓகே. உன்னை நான் வற்புறுத்தவில்லை," என்றவன் அலட்சியமாகத் தோளைக் குலுக்கினான்.

மறுபடியும் அவன் கைபேசி சிணுங்கியது. அவள் முகம் ஜிவ்வெனச் சிவந்தது.

"யெஸ் டியர், சொல்லு. இப்பதானே ஃபோன் செஞ்சே என்ன. சீக்கிரம் வரணுமா? எனக்காக வெயிட் செய்யறியா? முதலிலேயே தெரிஞ்சு இருந்தால் நான் அங்கேயே வந்திருப்பேன். இப்ப நான் இங்கே சாப்பிட ஆரம்பித்து விட்டேன். தனியா இல்லை. என் ஆஃபீஸ் ஸ்டாப் ஒரு



பெண்ணோடு வந்திருக்கேன். என்னது. சுவாரசியமா கம்பெனியா? குட் ஜோக். ஷீ இஸ் நாட் மை டைப் என்றபடியே ஃபோனின் சிவப்புப் பட்டனை அழுத்தினா அவன்.

மிதுலாவின் முகம் முழுவதும் கோபம் பரவியது அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

அவன் அவளைக் கண்டு கொள்ளாமல் சாப்பிடு திலேயே குறியாக இருந்தான். டின்னர் முடியும் வ அவர்கள் பேசவில்லை.

ஆனால் அவனின் பாராமுகம் அவளுக்கு ஏமாற்றத்தை அளித்தது.

## 9

இது
இரவா
பகலா
..........
இது
வெயிலா
மழையா
..........
இது
இருளா
ஒளியா
..........

இது
கருமையா
வெண்மையா
..........
இது
தென்றலா
புயலா
..........
எல்லாமே
உன்னாலே!
வேறுபாடு
இன்றி
ஒரே
மாதிரித்
தோன்றுகிறது!

**டி**ன்னர் முடிந்த பின்பு கூட அவன் பேசியதே அவ காதுகளில் ஒலித்துக் கொண்டு இருந்தது.

"தேங்க்ஸ் ஃபார் தி டின்னர். இட் வாஸ் நைஸ்."

"ம்... தேங்க்ஸ் ஃபார் தி கம்பெனி. இட் வாஸ் நை மிதுலா. நான் உன்னை உன் வீட்டில் கொண் விடுகிறேன்."

"வேண்டாம். யாரோ வேறு உங்களுக்காகக் காத்து கொண்டு இருக்கிறார்கள். நீங்கள் கிளம்புங்கள். நா போய்க் கொள்கிறேன்."

"இட்ஸ் ஓகே. என் வாழ்க்கையே அவள்தா எனக்காக எப்பவுமே காத்துக் கொண்டு இருப்பாள்."



மிதுலாவின் முகத்தில் கோப ரேகைகள் அப்பட்டமாகத் தெரிந்தன. யார் அந்தப் பெண் என்ற கேள்வி மட்டும் அவள் மனதைக் குடைந்து கொண்டே இருந்தது.

அதற்குள் அவள் வீடு வந்துவிட்டது. இறங்குவதற்கு வசதியாக காரைத் தெருவின் ஓரமாக நிறுத்தினான் அவன்.

"தேங்க்ஸ். குட் நைட்..." என்று சொல்லிவிட்டு இறங்குவதற்காகக் கார் குமிழைத் திறக்க முயன்றாள்.

"நான் லாக் செஞ்சிருக்கேன். உன்னால் திறக்க முடியாது.

நன்றாகக் 'கண்ணாமூச்சி' விளையாட்டு விளையாடுகிறாய் நீ மிதுலா..."

"வாட்... என்ன உளறல் இது..."

"ம். ரெஸ்டாரண்டில் எத்தனை தடவை என்னை உன் அழகிய விழிகள் படம் எடுப்பது போல் பார்த்தது...

என் ஸ்டைல், சார்ம் எல்லாமே உனக்குப் பிடிச்சிருக்கு படம் புரியாத மாதிரி நடிக்கற!" என்றவன் அவள் கையைப் பற்றினான்.

"இ... இல்லை. அப்படி எல்லாம் இல்லை. நான்... நான் ஐ வாஸ் ட்ரையிங் டு பி எ பிளஸெண்ட் கம்பெனி.

ஏதாவது பேசிச் சண்டையில் முடிகிறது. அதனால் தான்... நான்..." என்று ஏதோ உளறினாள் அவள்.

"ஓ... பிளஸெண்ட் கம்பெனியா... தென் ஷோ ஸம் நவ்!" என்றவன் அவளைத் தன்புறம் இழுத்தான்.

அவன் உதடுகள் அவள் நெற்றி, கண், கன்னம் என எல்லாவிடத்திலும் பதிந்தன. அவன் கைகள் அவளை அணைத்தன.

“நோ...” என்று கத்த முயன்றாள் மிதுலா. ஆனால் அவள் குரல் அவளுக்கே கேட்கவில்லை.

“ஐ நோ மிதுலா... யூ வாண்ட் திஸ். இதற்காகத் தானே ரெஸ்டாரெண்டில் என்னை அப்படிப் பார்த்தாய்..” என்றான் அவள் கூந்தலில் முகம் புதைத்தபடி சச்சித்.

“நோ... ஐ டோண்ட் வாண்ட் திஸ். ஐ டோண்ட் வாண்ட் யூ!” என்று அவன் பிடியிலிருந்து தன்னை விடுவிக்க முயன்றாள் அவள்.

“என்னோடு நீ என்ன விளையாட்டு விளையாடுகிறாய் மிது? நான் சும்மா உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டு இருந்தேன்.

உன் கவனம் முழுவதும் என் மீதுதான் இருந்தது. உன் சாப்பாட்டில் இல்லை. உன் கண்களால் நீ என்னை சாப்பிட்டுக் கொண்டு இருந்தாய்.

உன் மனதில் இருப்பதை உன் கண்கள் காட்டிக் கொடுத்து விடுகின்றன. அதனால் பொய் சொல்லாதே. யூ வாண்ட் மீ...”

“நோ... உங்களுக்கு என் மேல் கோபம். அதனால் தான் வாய்க்கு வந்தபடி கண்டபடி பேசுகிறீர்கள்!” என்று சீறினாள்.

“யெஸ். எனக்குக் கோபம்தான் உன்மேல். நீ ரிலேஷன்ஷிப்பை பிஸினெஸ் லைக்காக வைத்திருக்க வேண்டும் என்று சொன்னது நீ.



நான் இன்று அதன்படிதான் நடந்தேன். ஆனால் நீ என்னை உன் பக்கம் இழுக்கிறாய். யூ வாண்ட் சம்திங் மோர் தேன் தி பிஸினெஸ் ரிலேஷன்ஷிப்.”

“ஸ்டாப் இட்!” என்றவளின் கண்கள் கலங்கின. குரல் உடைந்தது.

“ஹெல் வித் யூ, மிது. இது உண்மை. உனக்கு இது புரிய வேண்டும்.”

“கார் கதவைத் திறங்கள் ப்ளீஸ்!” என்றாள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தபடி.

“என்னைப் பார் மிது!” என்றவன், அவள் முகத்தை மென்மையாக ஏந்தினான்.

இமைகள் படபடக்க அவள் அவன் கண்களைப் பார்த்தாள். “உன் துடிக்கும் உதடுகளை, படபடக்கும் கண்களை எல்லாமே என் வசம் ஆக்க வேண்டும் என்று என் மனம் துடிக்கிறது...

உன் மூச்சுக் காற்று முழுவதும் என்னுள்ளே வேண்டும்... உனக்கு அழுவதற்கு முடியாதபடி... இதெல்லாம் உனக்குப் புரியவில்லையா மிது...” என்றான் மென்மையாக அவள் காதோரம்.

“ப்ளீஸ் என்னை விடுங்கள்!” என்று கெஞ்சினாள் அவள்.

அவள் உடல் நடுங்குவதை அவன் உணர்ந்தான். அவள் கண்களில் இருந்து வழிந்து கொண்டிருந்த கண்ணீரைப் பார்த்தான் சச்சித்.

அவளை விடுவித்தான் அவன். அவளிடமிருந்து பெருமூச்சுக் கிளம்பியது.

"கெட் அவுட். இனிமேல் அவர் ரிலேஷன்ஷிப் வி... பி ஸ்ட்ரிக்ட்லி பிஸினெஸ்!" என்றபடி காரின் கதவு திறந்தான் சச்சித்.

வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு போல் வேகமா அங்கிருந்து வெளியேறினாள் அவள். அவளின் இத துடிப்பு பந்தயக் குதிரை போல் துடித்தது.

தன் மேல் சேற்றை வாரி இறைத்தது போல் இருந் அவளுக்கு. சச்சித் சொன்ன வார்த்தைகள் ஒவ்வொன் அவள் மனதைத் தைத்தது.

அவன் சொன்னது உண்மையா? நான் அவன் அண்மைக்காக ஏங்கினேனா? என் கண்கள் அவனிற்கு விருப்பத்தைத் தெரிவித்ததா?

சே... என்ன ஒரு அவமானம் இது. அவன் என்னை பற்றி எவ்வளவு கேவலமாக நினைத்து இருப்பான் என் நினைத்து நினைத்து அவள் மனம் குமுறினாள்.

அடுத்த நாள் மிதுலா சச்சித்தைச் சந்திக்கவில்லை தொடர்ந்து வந்த நாட்கள் எல்லாம் அவள் அவ சந்திக்கும் வாய்ப்பே இல்லை.

பெரும்பாலான முடிவுகளை அவளே எடு விடுவாள். எங்கெங்கே அவனின் அப்ரூவல் வேண்டு அதற்கெல்லாம் அவள் விரிவாக ஈமெயில் அனு



அவனிடம் இருந்து பதிலும் ஈமெயிலின் வழியாக வந்துவிடும். அதனால் அவள் நிம்மதியாக இருந்தாள்.

பத்திரிகையின் மாற்றங்களைத் தெரிவிக்கும்வண்ணம் ஒரு 'ஸ்பெஷல் எடிஷன்' தயார் செய்வதாக முடிவானது.

அந்த வேலையில் மும்முரமாக இருந்தாள் அவள். 'விளம்பர கேம்பெயின்' வேறு நடக்க வேண்டும். பத்திரிகையின் புதிய டிஸைன், லே-அவுட், மாற்றங்கள் எல்லாவற்றையும் அந்தப் பிரச்சாரம் கவர் செய்யும்.

அந்த கேம்பெயின் பற்றிய ப்ரபோஸலில் மூழ்கி இருந்தாள் மிதுலா.

"இந்தக் கட்டுரையைப் படிச்சிட்டு... டெல் மி ஹவ் இஸ் இட்" என்று ஒரு ஃபைலை அவளிடம் நீட்டினாள் ஹெலன்.

"என்ன ஹெலன் இது...?"

"படிங்க... இதில் சிலவற்றை நம் பத்திரிகையில் பப்ளிஷ் செய்யலாம்.

மாதவி மேடம் இருந்தால் கண்டிப்பாகப் பிரசுரிக்க ஒத்துக்கொள்ள மாட்டார்கள். பட் ஐ தாட் ஐ கேன் கிவ் எ ட்ரை வித் யூ," என்றாள் புன்முறுவலோடு ஹெலன்.

"என்ன டைட்டில் இது?" என்றபடியே ஃபைலைப் பிரித்தாள் மிதுலா.

"பெண்களும் காதல் உணர்வுகளும்" என்று தலைப்பிட்டு இருந்த அந்தக் கட்டுரை மூன்று பக்கத்திற்கு மேல் இருந்தது.

"என்ன ஹெலன், தலைப்பே ஒரு மாதிரி இருக்கு"

"ம்... படித்துப் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள். ஐ திங்க் இட்ஸ் எ குட் ஒன்..."

அந்தக் கட்டுரையை மேலேழுந்தவாரியாகப் படி தாள் மிதுலா. அந்தக் கட்டுரை பெண்களின் உணர்வு துல்லியமாகப் பிரதிபலித்தது.

அவர்களின் எதிர்பார்ப்பு என்ன, ஆனால் மனதி ஒன்றை நினைத்துக் கொண்டு, உதட்டளவில் ஒன் பேசுவது ஏன், அவர்களின் பொஸஸிவ் ஃபீலிங், கோப எரிச்சல் என ஒவ்வொன்றையும் பிட்டுப் பிட்டு வைத்த அந்தக் கட்டுரை.

ஆராய்ச்சியின் மூலம் நிறைய கேஸ் - ஸ்டடிகளை அந்தக் கட்டுரை விவரித்து இருந்தது. அதைத் தன் டேபிளின் ஓரமாக வைத்தாள் அவள்.

கணினியில் மூழ்கியிருந்தவளைக் கலைத்த ஷூவின் ஓசை.

சச்சித் தன்னை நோக்கி வருவதைக் கவனித்தாள் மிதுலா. அவள் இதயத் துடிப்பு அதிகரித்தது.

"ஹலோ மிதுலா..."

"ஹலோ... சொல்லுங்க."

"ம்... நான் ஒரு வாரம் வெளியூர் போகிறேன் என்னிடம் ஏதாவது அப்ரூவல் வாங்க வேண்டும் என்றா வாங்கிக் கொள்.

அப்புறம் வேறு ஏதாவது முக்கியமான முடிவு நா எடுக்க வேண்டும் என்றால் சொல்."



"இப்பொழுது அந்த மாதிரி எமர்ஜென்ஸி முடிவு ஏதும் இல்லை.

பத்திரிகைக்குத் தேவையானது எல்லாம் முடிவாகி விட்டது. இன்னும் ஸ்பெஷல் எடிஷன் மட்டுமே பாக்கி இருக்கிறது.

இன்னும் இரண்டு நாளில் அது முடிவாகிவிடும். அதனால் எனக்குத் தெரிந்தவரை ஏதும் இல்லை..."

"உன்னுடைய புதிய பொறுப்புகள், புதிய வேலை எல்லாம் நன்றாக நடக்க வேண்டும் என்று நினைத்தது நான் தான். உன் சுதந்திரத்தில் தலையிடாமல் இருந்தேன்.

நான் ஒவ்வொரு விஷயத்திலும் மூக்கை நுழைத்துக் கொண்டு இருந்தால் உன்னால் நன்றாக வேலை பார்க்க முடியாது.

என்னுடைய வொர்க்கிங் ஸ்டைல் என்ன தெரியுமா? என்னுடைய எடிட்டர்ஸ் எல்லாருக்கும் சரியான திசையில் செல்வதற்கான பாதையைக் காட்டுவேன்.

பின்பு அவர்கள் வழியிலேயே விட்டுவிடுவேன். தே வில் எக்ஸ்ப்ளோர் அண்ட் கெட் தி பெஸ்ட் வே."

"ஓ... அவர்கள் உங்கள் பாதையைப் பின்பற்று வார்களா...? இல்லை அவர்கள் பாதையையா...?"

"லெட் அஸ் ஸே ஐ ஸெட் தி டைரக்ஷன் அண்ட் தே ஃபைண்ட் தி வே."

"ம்... ஒரு நாயை அதன் போக்கில் குரைக்க விடாமல் நீங்கள் அதை உங்கள் விருப்பப்படி குரைக்கச் செய் கிறீர்கள்.

அது மாதிரிதான் இருக்கு நீங்கள் பின்பற்று முறை..."

"ஐ வில் நாட் கால் யூ எ டாக். யூ ஆர் ஒ அட்ராக்டிவ் அண்ட் டேன்ஜரஸ் கேர்ல்!" என்றான் சத்ய

அவள் அவன் முகத்தைப் பார்த்தாள். அவ கண்களில் தீ ஜ்வாலை தெரிந்தது.

"வொய் ஆர் யூ ஆங்ரி வித் மி?" என்றாள் மிகு நேரடியாக.

"ஐயாம் நாட்..."

"எனக்குத் தெரிகிறது உங்கள் கோபம். நா பத்திரிகையை நல்ல முறையில்தான் நடத்துகிறேன்.

என் வேலையில் எந்தத் தவறும் உங்களா கண்டுபிடிக்க முடியாது..."

"தட்ஸ் ட்ரூ. நான் மறுக்கவில்லை. நீதான் என் மே கோபமாக இருக்கிறாய் என்று நான் நினைத்தேன்."

"நானா?..."

"யெஸ். ஐ வாஸ் அண்டர் தி இம்ப்ரெஷன் தட் வேர் ஆங்ரி வித் மீ.

நான் இரண்டு வாரங்களாக உன்னோடு பேசவில் உன்னைப் பார்க்கவில்லை.

அதனால் உனக்குக் கோபம் என்று நினைத்தேன்

"நான் நீங்கள் இல்லாததைக் கவனிக்கவே இல்லை என்று அலட்சியமாகத் தோளைக் குலுக்கினாள் அவ



"நான் வந்ததிலிருந்து நீ கோபமாக இருக்கிறாய். நான் உன் அறைக்குள் வந்த முதல் நிமிடத்தில் இருந்து என்னால் அதை உணர முடிந்தது.

நான் உன்னை இரண்டு வாரங்களாகக் கண்டு கொள்ளவில்லை. அதனால் உனக்குக் கோபமோ என்று நினைத்தேன்."

"வெல் திங்க் அகெய்ன்!" என்றாள் கிண்டலாக. கோபத்தால் அவள் முகம் சிவந்து இருந்தது.

"புரியவில்லை..."

"ம்... இப்படியும் இருக்கலாமே. இரண்டு வாரமாக நீங்கள் என் அறைக்கு வரவில்லை. என் வேலையில் எந்தக் குறுக்கீடும் இல்லாமல் நான் முழுச் சுதந்திரத்தோடு பணியாற்றிக் கொண்டு இருந்தேன்.

நீங்கள் காலையில் என் அறைக்குள் வந்தவுடன் ஒரு வேளை என் சுதந்திரம் பறிபோனது போல் நான் உணர்ந்து இருக்கலாம்.

அதனால் கூட நான் கோபமாக இருந்திருக்கலாம். இப்படி யோசித்துப் பாருங்கள்."

அவன் முகத்தைப் பார்த்தாள் அவள். கோபத்தால் அவன் முகம் இறுகியிருந்தது.

"எனக்குத் தெரியாது. நான் உன் சுதந்திரத்திற்கு இடையூறாக இருந்தேன் என்று.

நெவர் மைண்ட். நான் திரும்பி வரும்வரை நீ உன் சுதந்திரத்தைக் கொண்டாடலாம்."

"ஓ.கே... ஹாவ் எ குட் டைம்!" என்றவள் தன் அருகே இருந்த ஃபைலை எடுத்துப் படிக்கத் தொடங்கினாள்.

அவன் போய்விடுவான் என்று நினைத்தாள் அவள். ஆனால் அவனும் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான்.

அவள் படித்துக் கொண்டு இருந்ததை அவனும் படிக்கத் தொடங்கினான்.

"இது நீ எழுதியதா மிதுலா...?"

"காட்! நோ. ஈமெயில் வழியாக வந்தது இது..."

"ஓ... ஹவ் குட் இட் இஸ்..."

"தெரியவில்லை. நான் இன்னும் முழுசாகப் படிக்கவில்லை.

இட் மே பி வேஸ்ட் ஆஃப் டைம் டு ரீட் திஸ் ஃபுல்லி"

"இது நல்லா இருக்காது என்று நினைக்கிறாயா...?"

"யெஸ்..."

"நீ இந்த மாதிரி சட்டென்று ஒரு பக்கமாக முடிவு எடுப்பாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை."

"ம்... மே பி இது நன்றாக இருக்கலாம். பட் நம் பத்திரிகைக்கு ஒத்து வராது..."

"ஏன்... அப்படி..."

இவனிடம் இதைப் பற்றிப் பேச வேண்டியதாகிவிட்டதே என்று அவள் முகம் சிவந்தது.



"இது... ரொம்ப வெளிப்படையா இருக்கு. நான் படிக்கவில்லை. ஹெலன் படித்துவிட்டுச் சொன்னாள்."

"ஸோ வாட்... ரொம்ப மோசமாகச் சில பத்திரிகைகள் சிலவற்றை வெளியிடும்.

இது அப்படியா இருக்கு...?"

"சே... அப்படி இல்லை இது. பட் நம் பத்திரிகை ஸ்டைல் இல்லை இது."

"நாம் நம் பத்திரிகையின் ஸ்டைலை மாற்றிக்கொண்டு இருக்கிறோம்."

"பட் திஸ் இஸ் டூ மச்."

"பத்திரிகை நன்றாக விற்கும். இந்த மாதிரிக் கட்டுரைகள் இருந்தால்..."

"அது மட்டும்தான் உங்களுக்கு முக்கியம். அப்படித் தானே?"

"ஐ ஸீ. வி ஆர் பேக் டு இட் அகெய்ன்."

"பேக் டு வாட்?"

"உனக்குத் தெரியும், நான் எதைப் பற்றிப் பேசுகிறேன் என்று. உனக்கு என்னைப் பற்றி நன்றாகத் தெரியும்.

நீயே அதை என்னிடம் சொல்லி இருக்கிறாய். என்னுடைய வேலை பத்திரிகைகளைத் தயாரித்து விற்பது.

உன்னுடைய வேலை பத்திரிகையை எடிட் செய்வது. இந்தக் கட்டுரையை வெளியிட்டால் நம் பத்திரிகை மாறி வருகிறது என்று வாசகர்களுக்குப் புரியும்.

இந்தக் கட்டுரையை நீ ஸ்பெஷல் எடிஷனில் போடலாம். அதுதான் என்னுடைய கருத்து."

"பட்... இந்த மாதிரி கட்டுரைகள் நம் பத்திரிகையின் பெயரைக் கெடுக்கும்."

"நீ போன நூற்றாண்டில் பிறந்தாயா என்ன? இந்தக் கட்டுரை பெண்களின் உணர்வுகளை அழகாகச் சொல்கிறது.

ஆண்களைக் கவர அவர்கள் என்னென்ன செய்தார்கள், செய்கிறார்கள் என்று சங்க காலம் முதல் இப்பொழுது வரை அலசி ஆராய்கிறது."

"நீங்கள் சும்மா கொஞ்சம் படித்துவிட்டுப் பேசுகிறீர்கள். மற்ற பக்கங்கள் எப்படி இருக்கும் என்று தெரியவில்லை."

"ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். அதோடு இது எழுதியவர்களின் கற்பனை அல்ல. ஆதாரங்கள் எல்லாமே அவர்கள் முதல் பக்கத்தில் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

அதனால் மற்ற பக்கங்களும் கண்டிப்பாக நன்றாக இருக்கும். அதனால் நாம் இதைப் பிரசுரிக்கலாம்!" என்றாள் அழுத்தமாக.

"இல்லை... நான்..." என்று அவள் முடிக்கும் முன்பு குறுக்கிட்டான் அவன்.

"என்ன காரணத்திற்காக வேண்டாம் என்கிறாய்?"

"நான்தான் சொன்னேனே... இட்ஸ் நாட் அவர் ஸ்டைல்..."



"உனக்கு எப்படித் தெரியும். நீயும் இதை முழுதாகப் படிக்கவில்லை.

நீயும் என்னைப் போல் கொஞ்சம்தானே படித்தாய்..."

"சரி. நான் படிக்கிறேன் முழுவதையும்..."

"ம்... படி. ஆனால் மனதைத் திறந்து வைத்துக் கொண்டு படி..."

"சரி... படித்த பின்பு முடிவு செய்யலாம்."

"எனக்குத் தெரியும் உன் முடிவு எப்படி இருக்கும் என்று..."

"என்ன தெரியும்...?"

"நீ இதைப் பிரசுரிக்க மாட்டாய்..."

"இது பெண்கள் பத்திரிகை... எனக்குத் தெரியும் அவர்களுக்கு என்ன பிடிக்கும் என்று..."

"பெண்கள் காதலிக்க மாட்டார்களா...? காதலிப்பவனின் மனம் குளிர அவனுக்குப் பிடித்ததைச் செய்ய மாட்டார்களா...?

உடை, சமையல், மியூசிக்... தென்..." என்று அவன் முடிக்கும் முன்பு குறுக்கிட்டாள் அவள்.

"நான் படித்துப் பார்க்கிறேன்... பின்பு முடிவு செய்யலாம்..."

"சரி... உன்னைப் போல் எல்லாப் பெண்களையும் நினைக்காதே மிதுலா...

அதனால் உன் சொந்தக் கருத்துகளை ஒதுக்கி வைத்து விட்டு, வேறு கோணத்தில் இருந்து இதைப் படித்துப் பார்.

அப்பவாவது உன் மனம் மாறுகிறதா என்று பார்க்கலாம். மே பி இட்ஸ் டைம் யூ லெர்ன் ஒன் ஆர் டூ ஃப்ரம் தட்!" என்று சொல்லிவிட்டு அவள் பதிலுக்குக் காத்திராமல் அங்கிருந்து வெளியேறினான் சச்சித்.

# 10

நீயும்
நானும்
பேசிச்
சிரித்து
மகிழ்ந்த
கடற்கரை
.....
மணல்
துகள்களில்
உன்
முகம்
.....
கடற்கரைக்
காற்றில்
உன்
முகம்



கடல்
அலைகளில்
உன்
முகம்
.....
கண்களை
மூடிக்
கொள்கிறேன்.
அங்கேயும்
உன் முகம்!

அடுத்த ஒரு வாரம் இறக்கை கட்டிக்கொண்டு பறந்தது மிதுலாவிற்கு. சச்சித் இல்லாததால் மனம் அலை பாயாமல் இருந்தது.

குழப்பம் ஏதும் இல்லாமல் வேலைகளைச் செய்தபடி இருந்தாள் அவள். தம்பி அருணிற்கு, விக்ரம் கம்பெனி கிடைத்தது, அவளுக்கு நிம்மதியாக இருந்தது.

அன்று வெள்ளிக் கிழமை என்பது அவளுக்குச் சட்டென நினைவுக்கு வந்தது. திங்கட்கிழமை சச்சித் வந்து விடுவான் என்ற நினைப்பே அவளுக்குப் பதட்டத்தை வரவழைத்தது.

அவள் கைபேசி சிணுங்கியவுடன் நிஜ உலகிற்கு வந்தாள் மிதுலா.

"ஹலோ... மிதுலா... ஹவ் ஆர் யூ?" என்றான் மறுமுனையில் தீபக்.

"ம்... ஐயாம் குட்... என்ன தீபக், ரொம்ப பிஸியா...?"

"ஓ... நோ சிங்கப்பூர் ட்ரிப் முடிந்த பின்பு, ஸ்ரீலங்கா பயணம். எல்லாம் முடிந்து இப்பொழுதுதான் சென்னைக்கு வந்தேன்.

சரி. உன்னிடம் பேசி ரொம்ப நாள் ஆகிவிட்டது. புதுப் பொறுப்புகள், வேலைகள் எப்படி இருக்கு...?"

"ம்... நல்லா இருக்கு தீபக். உன்னுடைய வெளிநாட்டு ட்ரிப் எப்படி இருந்தது...?"

"இட் வாஸ் நைஸ். சரி. நான் உன்னிடம் ஒன்று கேட்கத்தான் ஃபோன் செய்தேன்."

"என்ன தீபக், சொல்."

"இன்னிக்கு ஈவினிங் ஒரு மணிக்கு மேல நீ ஃப்ரீ தானே"

"ம்... யெஸ். எதுக்கு. சொல்லு..."

"தேர் இஸ் எ பார்ட்டி. ஸ்போர்ட்ஸ் ஆர்ட்டிகிள் நான் கவர் செய்வதால் எனக்கு இரண்டு பாஸ் கொடுத்திருக்காங்க.

உன்னை அழைத்துக் கொண்டு போகலாம் என்று இருந்தேன்."

"என்ன பார்ட்டி அது தீபக்...?"

"டென்னிஸ் ஸ்டார் மல்ஹோத்ரா தன் கல்யாணத்திற்காகக் கொடுக்கும் சிறப்பு பார்ட்டி இது.

கொஞ்சம் பேருக்குத்தான் அழைப்பு. ப்ளீஸ் மிதுலா. வா, போகலாம்."

வாரம் முழுக்க வேலை வேலை என்று உழைத்த தாலோ என்னவோ ஒரு மாறுதல் வேண்டும் என்று அவள் மனம் ஏங்கியது.



"சரி தீபக். வரேன். பட் ரொம்ப லேட்டாகுமா வர...?

"நோ... பத்து மணி வரைதான் பார்ட்டி. அதோடு பார்க் ஷெரட்டனில்தான் இந்த விழா. அதனால் சீக்கிரமே திரும்பி விடலாம்.

சிட்டி உள்ளே இருப்பதால் பயணம் செய்ய ரொம்ப நேரமாகாது. அதோடு பார்ட்டியில் 'ட்ரிங்க்ஸ்' சாப்பிடும் பழக்கம் எனக்கு இல்லை.

அது உனக்குத் தெரியும். அதனால் உன்னைப் பத்திரமாக நான் ட்ராப் செய்து விடுவேன். நீ கவலைப் படாமல் வா."

"ஓ... கமான் தீபக். ஐ நோ அபௌட் யூ...

அதோடு நீ சொன்ன 'ரகம்', 'ட்ரிங்க்ஸ் ரகம்' எல்லாம் நான் ஃபிரெண்டாக வைத்துக் கொள்வதில்லை."

"ம்... தட்ஸ் குட். மிதுலா. சரி. நீ ஆறு மணி அளவில் தயாராக இரு...

நான் உன்னை வீட்டில் வந்து அழைத்துச் செல்கிறேன்."

"ம்... நானே வந்துவிடுகிறேன் தீபக். நீ எத்தனை மணிக்கு அங்கே ஹோட்டலில் இருப்பாய்?"

"நான் ஏழு மணிக்குச் சரியாக அங்கே இருப்பேன்."

"ஓ.கே. நானும் அங்கே ஏழு மணிக்கு வந்து விடுகிறேன்."

"ஓ... தேங்க்ஸ் மிதுலா. ஸீ யூ தென்."

"பை தீபக்..."

திங்கட் கிழமை முதல் சச்சித்தை எதிர்கொள்ள வேண்டும். அதற்கு இந்தப் பார்ட்டி ஒரு 'பிரேக்'காக இருக்கும் என நினைத்துக் கொண்டாள் அவள்.

அருணிற்குப் படிக்க நிறைய இருக்கு. இல்லாவிட்டால் அவனையும் அவ்வப்பொழுது எங்காவது வெளியே அழைத்துச் செல்லலாம் என்று நினைத்தபடியே கணினியை அணைத்தாள்.

வீட்டிற்குச் சென்றவள் அருண் பிஸியாகப் படித்துக் கொண்டு இருப்பதைப் பார்த்துத் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

"அருண்! இன்னைக்கு ஒரு பங்ஷன் இருக்குடா. நான் அதுக்குப் போகணும்..."

"என்ன ஃபங்ஷன் அக்கா?"

"டென்னிஸ் ஸ்டார் மல்ஹோத்ரா அவர் திருமணம் நிச்சயமானதற்கு ஒரு பார்ட்டி கொடுக்கிறார்.

இன் பேக்ட் எனக்கு அழைப்பு இல்லை. என் ஃபிரெண்ட் தீபக்கிற்கு இரண்டு பாஸ் கிடைத்திருக்கு.

அவன்தான் என்னை இன்வைட் செய்தான். உனக்கு டின்னர் நான் ரெடி செய்துவிட்டுப் போகிறேன்."

"ஓ... மல்ஹோத்ராவின் பார்ட்டியா? அக்கா, ரொம்ப கிராண்டாக இருக்கும்.

நீயும் நல்லா ரிச்சா டிரெஸ் செய்துகொண்டு போ. அதோடு டின்னர் எனக்கு வேண்டாம்..."



"ஏன்டா... காத்தைக் குடிச்சிட்டு இருக்கப் போறியா...?"

"அக்கா... விக்ரமும் நானும் இன்னிக்கு வெளியே சாப்பிடலாம் என்று ப்ளான் செய்து இருக்கிறோம்."

"அப்ப சரி... ஜாக்கிரதையாகப் போய்விட்டு வா..."

"ம்... நீயும் பார்த்துப் போய்விட்டு வா அக்கா..."

தம்பி தன் மேல் அக்கறை எடுத்துக்கொண்டு காட்டும் பரிவும், பாசமும் அவளுக்குப் பிடித்தது.

குளித்துவிட்டு வந்தவள் என்ன உடை அணியலாம் என்று யோசித்தாள். ஒரு பச்சை நிறப் புடவையை நோக்கி அவள் கை நீண்டது.

புடவையை நேர்த்தியாக அணிந்து கொண்டாள் அவள். கூந்தலில் முல்லைச் சரத்தைச் சூடினாள். கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டவளுக்குத் தன் அலங்காரத்தில் திருப்தி ஏற்பட்டது.

"வாவ் அக்கா... ரொம்ப நல்லாயிருக்கு இந்தப் புடவை உனக்கு..."

"தேங்க்ஸ்டா..."

"எப்படி அக்கா போகப் போற?"

"ம்... தீபக் வரும்பொழுது என்னை டிராப் செய்வார். அதனாலே ஸ்கூட்டரை எடுத்துட்டுப் போக முடியாது.

ஆட்டோவில்தான் போகணும்."

"ஸாரி அக்கா. நான் நல்லா இருந்தா உன்னை நான் டிராப் செய்வேன்."

"ஏய் அருண்... என்ன நீ இப்படி எல்லாம் பேசு நான் உனக்கு ஆட்டோமெடிக் கார் வாங்கித் தருவேன்.

அப்ப நீதான் என்னை டிராப் செய்யணும். நான் ஜம்முன்னு உட்கார்ந்துகிட்டு வருவேன்..."

"ஓ... தேங்க்ஸ் அக்கா. என்ஜாய் வெல்."

"டேக் கேர் அருண்!" என்றவள் வீட்டை விட்டு வெளியேறினாள்.

பாவம் அருண் என்று தோன்றியது அவளுக்கு. அவன் வயது இளைஞர்களுக்குத் தோன்றும் ஆசை அவனுக்குத் தோன்றாதா...?

கிரிக்கெட் விளையாடுவது, ஜாலியாக ஃபாஸ்ட்டாக டு வீலரில் பயணிப்பது, நீச்சல் அடிப்பது என்று என்னென்னவோ இருக்கிறதே.

அருணிற்காகப் பணம் சேர்த்துக் கொண்டு இருக்கிறேன். இதுவரை அவன் பெயரில் நாலு லட்சம் இருக்கிறது. இதோ இனிச் சம்பளமும் உயரப் போகிறது.

அதனால் சேமிப்பையும் கூட்டலாம். சீக்கிரமாக அவனுக்கு கார் வாங்க வேண்டும் என்று தனக்குள்ளே பேசிக் கொண்டாள்.

"ஆட்டோவா மேடம்..."

"ஆமாம். அடையாறு கேட் ஹோட்டல் போகணும்."

"சரிங்க மேடம். எவ்வளவு தருவீங்க...?"

"நீங்க சொல்லுங்க..."



"நூறு ரூபாய் கொடுங்க..."

"நூறு அதிகம்ங்க..."

"ஜாஸ்தி இல்லை மேடம். பெட்ரோல் எல்லாம் விலை ஏறிடுச்சு. அதான் மேடம்..."

"எண்பது ரூபாதான். கட்டுப்படியாகும்னா வாங்க..."

"சரி மேடம். உட்காருங்க..."

அந்தி நேரக் காற்று அவள் முகத்தில் விளையாடியது. வாகன நெரிசல், இடையே வழிந்த பெட்ரோல் வாசனை, பரபரப்பாக அங்கும் இங்கும் நடந்து சென்று கொண்டிருந்த மக்கள் என்று வெளியே தெரிந்த உலகத்தைப் பார்த்த படியே ஆட்டோவில் உட்கார்ந்து இருந்தாள் அவள்.

"மேடம், ஹோட்டல் வந்திடுச்சு..."

"ஓ... வந்திடுச்சா... இந்தாங்க..." என்று ஓட்டுனரிடம் பணத்தை நீட்டினாள் அவள்.

வண்ண விளக்குகளால் ஹோட்டல் அழகாக அலங்கரிக்கப்பட்டு இருந்தது. மரங்களில் இருந்து எழுந்த காற்று ஜில்லென்று இதமாக இருந்தது.

பூக்களின் நறுமணம், செயற்கை நீர் ஊற்று என ரசிக்கும்படியாக இருந்தது அந்த இடம்.

வரவேற்பறை நல்ல நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டு இருந்தது. வரவேற்பறை 'லான்ஜில்' தீபக் இருப்பதைப் பார்த்தாள் அவள்.

"ஹாய் தீபக்..."

"ஹலோ மிதுலா. கரெக்டா டைமுக்கு வந்திட்டியே"

"ம்... ரொம்ப அழகா இருக்கு டெகரேஷன் எல்லாம்..."

"யெஸ். உள்ளே போகலாமா...?"

"ஓ... யெஸ்..."

"பை தி பை யூ லுக் வெரி நைஸ் இன் திஸ் டிரெஸ்..."

"தேங்க்ஸ் தீபக்..."

இருவரும் வரவேற்பறையை ஒட்டி இருந்த இன்னொரு ஹாலை நோக்கி நடந்தனர்.

அங்கே வெளியே இருந்த செக்யூரிட்டியிடம் 'பாஸ்'களைக் காட்டினான் தீபக்.

வரவேற்பு அறையைத் தோற்கடிக்கும் அழகோடு மிளிர்ந்தது அந்த அறை. சுவர்களை அலங்கரித்த ஓவியங்கள், மேற்கூரையை அலங்கரித்த சர விளக்குகள், மெல்லிய நறுமணம், வழிந்தோடிய இசை என்று எல்லாமே மனதை மயக்குவதாக இருந்தது.

"வா... மிதுலா... அங்கே போகலாம். காப்பி, தேநீர் அங்குதான் ஸெர்வ் செய்கிறார்கள்..."

கூட்டமாக இருந்த அந்த இடத்தைப் பார்த்தாள் அவள். யாரோ தன்னை உற்றுப் பார்ப்பது போல் தோன்ற சட்டெனத் திரும்பினாள் அவள்.

அவள் உள்ளுணர்வு பொய்யாகவில்லை. அங்கே அவள் சச்சித்தின் பார்வையை எதிர்கொண்டாள். அவன் கண்கள் அவளையும் தீபக்கையும் மாறி மாறிப் பார்ப்பதை அவள் கவனித்தாள்.



அவன் கடைசியாகச் சொன்னது அவள் காதில் ஒலித்தது. அந்தக் கட்டுரையைப் படித்துவிட்டு அவளை அவன் கேலியாக விமர்சித்தது அவள் நினைவுக்கு வந்தது.

அந்தக் கட்டுரையிலிருந்து ஒன்று, இரண்டு கற்றுக் கொள் நீ, என்பது போல் ஏதோ சொன்னானே. சே! இவன் என்னைப் பற்றி என்ன நினைத்துக்கொண்டு இருக்கிறான்?

நான் தீபக்குடன் வந்ததைப் பார்த்திருக்கிறான் இவன். இப்பொழுது சச்சித் முகத்தில் கோபம் தெரிகிறதே!

என்ன காரணம் அதற்கு? நான் தீபக்கைக் கவர நினைக்கிறேன் என்று சச்சித் நினைக்கிறானா? அந்தக் கட்டுரையைப் படித்துவிட்டு நான் அதன்படி நடப்பதாக அவன் நினைத்துக் கொள்வானா என்று ஏதேதோ நினைத்துக் குழம்பினாள் அவள்.

நான் ஏன் அவன் நினைப்பிற்கு மதிப்பு அளிக்க வேண்டும்? என்ன ஆச்சு எனக்கு என்று தன்னையே கடிந்து கொண்டாள் அவள்.

"என்ன மிதுலா... ஆர் யூ ஆல்ரைட்...?" என்று தீபக் அவள் தோளைத் தட்டியவுடன் அவள் நிஜ உலகிற்கு வந்தாள்.

"ம்... ஸாரி.. ஏதோ ஞாபகம்..."

"உன் பாஸ்கூட வந்திருக்கார், கவனிச்சியா...?"

"ம்... பார்த்தேன்..."

"பாஸ் பக்கத்தில் இருக்கும் அழகி யார் என்று தெரிகிறதா...?"

"நீனாதானே அது..."

"ம்... கரெக்டா கண்டுபிடிச்சிட்டியே..."

நீனாவை இமைக்காமல் பார்த்தபடி இருந்தாள் மிதுலா. அவள் வெண்ணெயில் செய்த ஓவியம் போல் அழகாக இருந்தாள்.

நிறத்தை எடுப்பாகக் காட்டும் ஒரு கறுப்புக் கவுனை அணிந்திருந்தாள் அவள். அவளுடைய உடல்வாகிற்கு அது ரொம்ப எடுப்பாக இருந்தது.

அவள் தலை முதல் கால் வரை அழகாக ஒப்பனை செய்திருந்தாள். பார்ப்பவர்களின் கண்களை உறுத்தாத வகையில் இருந்தது அவளின் ஒப்பனை.

சச்சித் அவளுடன் ஏதோ பேசிச் சிரிப்பதைப் பார்த்த பொழுது ஏனோ அவள் மனம் வலித்தது. ஒரு ஏமாற்றம் அவளை அறியாமல் அவள் மனதை ஆக்கிரமித்தது.

சே... இது என்ன உணர்வு என்று தன்னையே கடிந்து கொண்டாள் மிதுலா.

ஃபப்பே உணவு முறையில் சாப்பாடு இருந்தது. பசித்தது மிதுலாவிற்கு. ஆனால் ஏனோ சாப்பிடப் பிடிக்கவில்லை.

"மிதுலா... சாப்பிடப் போகலாம் வா..." என்று குரல் கேட்டவுடன் சுய நினைவுக்கு வந்தாள் அவள்.

சச்சித் அன்று ஃபோனில் பேசிய பெண் இவளா? இவளாகத்தான் இருக்கும். 'எனக்காக எப்பவுமே காத்திருப்பாள்' என்றானே...



இவளாகத்தான் இருக்கும். நீனாவின் கண்களில் சோகம் எட்டிப் பார்ப்பது போல தோன்றுகிறதே!

'அது என் பிரமையா? இல்லை நிஜமா?' என்று ஏதேதோ யோசித்தபடியே நின்று கொண்டிருந்தாள் லைனில் அவள்.

"ஹாய் மிதுலா. உன்னை இங்கே சந்திப்பேன் என்று எதிர்பார்க்கவில்லை!" என்று சச்சித் குரல் பின்னால் இருந்து கேட்க, திடுக்கிட்டுத் திரும்பினாள் அவள்.

"ஹலோ... ம்... என் ஃபிரெண்டோடு வந்தேன். தீபக்!" என்று தன் முன்னால் இருந்தவனின் தோளைத் தட்டி அழைத்தாள் மிதுலா.

"தீபக்! ஹி இஸ் மை பாஸ் சச்சித். தீபக் இஸ் மை ஃபிரெண்ட்."

ஹி இஸ் வெரிகுட் இன் ஸ்போர்ட்ஸ் கவரேஜ். அவர் இன்விடேஷனில் நான் வந்தேன்."

"நைஸ் டு மீட் யூ தீபக்..." என்றவனின் உதடுகளில் ஏனோ புன்னகை இல்லை.

"நீனா... ஹி இஸ் மை எடிட்டர் மிதுலா. ஹர் ஃபிரெண்ட் தீபக்!" என்று தன் கையைப் பிடித்துக் கொண்டிருந்தவளிடம் அறிமுகப்படுத்தினான் சச்சித்.

"ம்... நீனாவிற்கு அறிமுகம் தேவையில்லை!" என்று அவனே தொடர்ந்தான்.

"ஹலோ மிதுலா... யூ லுக் வெரி நைஸ் இன் திஸ் ஸாரி!" என்றாள் புன்முறுவலோடு நீனா.

"தேங்க்ஸ்... யூ லுக் க்யூட்... அதை நான் சொல்வதற்குள் நீங்கள் முந்திக் கொண்டு விட்டீர்கள்..."

அதைக் கேட்டு அவள் சிரித்தாள். சிரிக்கும்பொழுது அவள் ரொம்ப அழகாக இருப்பதைப் பார்த்துப் பிரமித்தாள் மிதுலா.

"சச்சித்தை எப்படிச் சமாளிக்கிறீர்கள்?" என்றாள் நீனா.

"புரியவில்லை..." என்று திணறினாள் மிதுலா.

"சச்சித்தோட பிடிவாதம், கோபம் எல்லாமே ரொம்ப பிரசித்தம்!" என்றாள் கண்களில் குறும்பு மின்ன.

இருவரும் சகஜமாகப் பேசியபடியே உணவு அருந்தினார்கள்.

## 11

நீ
மரம்
என்றால்
நான்
உன்னைத்
தாங்கும்
விழுது!
நீ
பூ
என்றால்
நான்
உன்னில்
மணம்!



நீ
வீணை
என்றால்
நான்
உன்னுள்
உறையும் நாதம்!

திங்கட் கிழமை மிதுலாவிற்கு ஆபீஸில் ஏனோ எதுவும் சரியாக இல்லை. பிரிண்டர் வேலை பார்க்க வில்லை. 'அழகுக் குறிப்பை'ச் சரிபார்க்கும் எடிட்டர் உடம்பு சரியில்லாததால் வர முடியாது என்று கடைசி நேரத்தில் தகவல் தெரிவித்தாள்.

அதனால் அந்த வேலையைச் சரிபார்க்கும் பொறுப்பும் அவள் மேல் விழுந்தது. ஒரு புகைப்படம் காணவில்லை.

அந்த எடிஷனுக்கு அந்தப் புகைப்படம் தேவை. ஒரு வழியாக அதைத் தேடிக் கண்டுபிடித்தாள் ஹெலன்.

சச்சித் அவள் அறையினுள் வந்தபொழுது மிதுலா ஸ்பெஷல் எடிஷனின் லேஅவுட்டோடு போராடிக் கொண்டு இருந்தாள்.

"ஹலோ மிதுலா!"

"ஹலோ... என்ன வேண்டும் உங்களுக்கு?"

அவள் குரலில் இருந்த சோர்வு ஏதோ சரியில்லை என்று சொல்லாமல் சொல்லியது அவனுக்கு.

"ம்... ஒரு வாரம் கழித்துத் திரும்பி வந்திருக்கிற பாஸுக்கு நல்ல வரவேற்பு!"

"ஓ... ஸாரி. இந்த லே அவுட் சரியாக வர மாட்டேங்கிறது.அதனால்தான்.... ஐயம் சாரி."

"இட்ஸ் ஓகே. நான் பார்க்கிறேன். சில நேரம் புதிதாகப் பார்க்கும் பொழுது விடைகள் சுலபமாகக் கிடைக்கும்!" என்று சொல்லிக்கொண்டே கணினியில் பார்வையைப் பதித்தான் சச்சித்.

சில நிமிடங்கள் அந்தப் பக்கத்தையே பார்த்துக் கொண்டு இருந்தான் சச்சித்.

"இப்படிச் செய்யலாமே..." என்றவன், அந்த ஃபோட்டோவை எடுத்து வலது பக்கம் தள்ளினான்.

பின்பு அங்கிருந்த துணுக்குகளைக் கீழே வரும்படி செய்தான்.

அந்த மாற்றங்கள் செய்தபின் எல்லாமே அந்தப் பக்கத்திலேயே அழகாக அடங்கியது.

"ஓ... தேங்க்ஸ் எ லாட். நான் ரொம்ப நேரமாக இதோடு போராடிக் கொண்டிருந்தேன்."

"இட்ஸ் ஓகே. சில நேரம் அப்படித்தான் ஆகும்!" என்றவன் அவள் நெற்றியில் இருந்த கற்றை முடியை ஒதுக்கினான்.

அவள் சட்டெனப் பயந்து போய்ப் பின் வாங்கினாள். அவன் கண்களில் கோபம் தெரிந்தது.

"எனக்கு ஒன்றும் தொட்டால் ஒட்டிக் கொள்ளும் நோய் எதுவும் இல்லை."



"உங்களுக்கு என்னைத் தொட எந்த உரிமையும் இல்லை."

"ம்... இதற்கு முன்பு நான் உன்னைத் தொட்ட பொழுது நீ கண்டு கொள்ளவில்லையே...!"

"வெல். ஐ மைண்ட் நவ். ஸோ ஸ்டே அவே!"

சொன்ன பின்புதான் அவளுக்குத் தான் ஒரு முட்டாள்தனமான செயலைச் செய்து விட்டோம் என்று புரிந்தது.

இந்த மாதிரி சவால் விடுவது போல் பேசியது கண்டிப்பாகச் சச்சித்திற்குப் பிடிக்காது.

சே... நான் இதை வேறு மாதிரி கையாண்டிருக்க வேண்டும் போல என்று மனம் குமைந்தாள் அவள்.

அவள் நாற்காலி அருகே வந்தான் சச்சித். அவள் எழுந்திருக்க முயன்றாள். அவன் கைகளை நாற்காலியின் இருபுறமும் வைத்தபடி அவளை நோக்கிக் குனிந்தான்.

"ஐ ஹாவ் நாட் ஸ்டார்ட்டட்டு டச் யூ மிதுலா" என்றவன் அவள் இதழ்களில் உதட்டைப் பதித்தான்.

ஆடாமல் அசையாமல் சிலை போல் இருந்தாள் மிதுலா. தன் உணர்வுகளை அவனுக்கு வெளிக்காட்டாமல் இறுகி இருந்தாள் அவள்.

சச்சித்தின் விழிகள் அவளைக் கோபத்துடன் ஏறிட்டன.

"ம்... யூ ஆர் எ ஹார்ட் கேர்ல் டு அண்டர்ஸ்டாண்ட்."

"டோண்ட் ட்ரை இட் அகெய்ன் டு அண்டர்ஸ்டாண்ட்"

"உனக்குப் பயமாக இருக்கிறதா... நான் உன்னைப் புரிந்து கொள்வேன் என்று!"

"எனக்கு எரிச்சலாக இருக்கிறது. நீங்கள் என்னைத் தொட்டால்..."

அவன் முகம் கோபத்தால் இறுகியது. கண்களின் பளபளப்பு கூடியது.

"ஏன் எரிச்சல் வருகிறது...?"

"ம்... யூ மீன் நத்திங் டு மீ. அதனால்தான்."

"ஓ... அப்ப அந்த பென்ஸ் காரில் வந்தவன்... அவன்... ஹி இஸ் ஸ்பெஷல் டு யூ... அப்படித்தானே..."

"அது என்னோட பெர்ஸனல் மேட்டர்..."

"ஓ... மல்ஹோத்ரா... ஃபங்ஷனிற்கு வந்திருந்தானே ஒருவன்... பெயர்கூட ம்... தீபக்... அவன்தான் உன் லிஸ்டில் ஸ்பெஷலா?

உன் பின்னாடியே பூனைக் குட்டி போல் அலைந்தானே. அவன்தான் உனக்கு ஸ்பெஷலா..." என்று உறுமினான் சச்சித்.

கோபத்தால் அவள் முகம் சிவந்தது.

"வில் யூ ஸ்டாப் இட்..." என்று சீறினாள் அவள்.

"ம்... அந்தக் கட்டுரையில் இருப்பதை எல்லாம் கடைப்பிடிக்க முயற்சி செய்கிறாய் போல.

நிறைய அனுபவங்களை ஏற்படுத்திக் கொள்கிறாய் போல காதலில். அப்படித்தானே?



நானும் என்னால் முடிந்த அளவு உனக்கு உதவி செய்யத் தயார். என்னுடைய அனுபவங்கள் உனக்குப் புதுமையா இருக்கும்.

யூ வில் லைக் இட் அண்ட் என்ஜாய் இட் மை கேர்ல்."

"தட் இஸ் தி லாஸ்ட் திங் ஐ வாண்ட்!" என்று சீறிவிட்டு அங்கிருந்து வேகமாக நகர்ந்தாள் மிதுலா.

கோபத்தால் அவள் உடல் நடுங்கிக் கொண்டு இருந்தது. அவள் மனம் வலித்தது. அவன் சொன்னதே அவள் காதில் ஒலித்துக்கொண்டு இருந்தது.

அன்று இரவு முழுவதும் தூங்க முடியாமல் தவித்தாள் மிதுலா... சே... ஏன் சச்சித் என்னைப் பற்றி இவ்வளவு கேவலமாக நினைக்கிறான் என்று தெரியவில்லை.

என்ன வார்த்தை எல்லாம் சொன்னான். காட்! தீபக் பற்றி பேசினான். பின்பு என்னையும் விக்ரமையும் இணைத்துப் பேசினான்.

நீனாவோடு இவன்தான் நெருங்கிப் பழகுகிறான். ஆனால் கடைசியில் என்னைப் பற்றி என்னவெல்லாம் சொன்னான் என்று குமைந்தாள் மிதுலா.

எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு வேலை பார்க்க முடியுமா? வேறு வழியில்லை. பார்த்துத்தான் ஆக வேண்டும்.

வேறு வேலைக்கு முயற்சிக்கலாம். ஆனால் இப்ப உள்ள சூழ்நிலையில் அது சிரமமாக இருக்கும். இந்த அளவு சம்பளம் கிடைக்குமா என்று தெரியவில்லை.

அருண் படிப்பை முடிக்கும் வரை பொறுத்துத்தான் போக வேண்டும். இன்னும் ஆறு மாதங்கள். அதற்கு பின்பு வேறு ஏதாவது முயற்சிக்கலாம் என்று முடிவு செய்தாள் அவள்.

அதற்கு அடுத்த இரண்டு நாட்கள் சச்சித்தைச் சந்திக்கும் வாய்ப்பு அவளுக்குக் கிடைக்கவில்லை. நல்ல காலம் போல எனக்கு என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் அவள்.

அவள் சந்தோஷம் அடுத்த நாள் நீடிக்கவில்லை. புதிய ஸ்பெஷல் எடிஷன் பற்றி விளம்பரங்கள், டி.வி., ரேடியோ எல்லாவற்றிலும் வந்தவண்ணம் இருந்தன.

"மிதுலா... இன்னிக்கு ஈவினிங் டி.வி.யில் 'தி ஃப்யூச்சர்' சேனலில் ஒரு 'சாட் ஷோ' இருக்கு.

அது லைவ் ப்ரோக்ராம்... ஸோ யூ கெட் ரெடி!" என்றான் தொலைபேசி மூலம் சச்சித்.

"வாட்... நானா...?"

"ம்... 'தி ஃபேஸ்' எடிட்டர் நீதானே. அப்ப நீதான் இதில் கலந்துக்கணும்."

"நான்... நான் நோ. என்னாலே முடியாது..."

"ஏன் முடியாது...?"

"எனக்கு நெர்வஸா இருக்கு. ரெகார்ட்டட்னாலாவது அட்ஜஸ்ட் செய்துக்கலாம். பட் திஸ் இஸ் லைவ்..."

"இன்னிக்கு ஈவ்னிங் ஏழு மணிக்குத்தான் இந்த நிகழ்ச்சி. ஸோ டைம் இருக்கு.



நீ மெண்டலி பிரிபேர் ஆகிக்கலாம்."

"ப்ளீஸ்... இது வேண்டாம்."

"லுக் மிதுலா... இந்த ப்ரோக்ராம் வரப் போகுது அப்படின்னு எல்லாப் பத்திரிகையிலேயும் விளம்பரம் கொடுத்தாச்சு. டி.வி.யிலும் இந்த நிகழ்ச்சிக்கு நம்ம பத்திரிகை பெயரில் ப்ளாக் செய்தாச்சு.

ஸோ நீ இந்த நிகழ்ச்சியில் கண்டிப்பா கலந்துக்கற. வேற வழி இல்லை..."

சச்சித்திடம் இதற்கு மேல் பேசிப் பிரயோஜனம் இல்லை என்று அவளுக்குப் புரிந்தது.

"சரி," என்றாள் பல்லைக் கடித்தபடி.

"தட்ஸ் குட். ஆறு மணிக்குச் சரியாக ரெடியாக இரு. நான் உன்னை உன் வீட்டுக்கு வந்து அழைத்துப் போகிறேன்."

"லுக். இந்த ப்ரோக்ராமிற்கு என்னைக் கேட்காமல் நீங்கள் ஒப்புக் கொண்டது தப்பு..."

"நாம் இதைப் பற்றிப் பேசியிருக்கோம். எல்லா ஊடகங்களிலும் விளம்பரம் செய்வது பற்றி நான் உன்னிடம் டிஸ்கஸ் செய்து இருக்கேன்."

"நீங்கள் பேசினீர்கள். நான் மறுக்கவில்லை. பட்..."

"மீண்டும் மீண்டும் இதைப் பற்றிப் பேசி நேரத்தை வீணடிப்பதில் எனக்கு விருப்பம் இல்லை.

நீ இந்த ப்ரோக்ராமில் கண்டிப்பாகக் கலந்து கொள்ள வேண்டும்..."

"பட்... இன்னிக்கு ஈவினிங் எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கு..."

"ம்... உன் பாய் ஃபிரெண்டோடு அவுட்டிங்கா? உன்னுடைய பாய் பிரண்ட்ஸிற்கு நான் இந்த லைவ் ஷோவிற்கு டிக்கெட் ஏற்பாடு செய்கிறேன்.

முதல் ரோவில் உட்கார்ந்தபடியே உன்னை ஆசை தீரப் பார்க்கலாம். இந்தப் பத்திரிகையின் எடிட்டர் நீ.

உன்னுடைய ஒத்துழைப்பு அவசியம். இந்தப் பத்திரிகை முன்னேறுவதற்கு ஐ நீட் யூவர் கோவாபரேஷன்.

ஸோ வி வில் ஜஸ்ட் ஸ்டாப் டாக்கிங் அபௌட் திஸ். ஸீ யூ அட் ஸிக்ஸ் இன் யுவர் ஹவுஸ்.

அப்புறம் நல்ல டிரெண்டியாக, மார்டர்னான உடை அணிந்து கொள். நீ நம்ம பத்திரிகையை ரெப்ரஸெண்ட் செய்கிறாய்..."

"ம்... நீங்க பேசாமல் ஒரு மாடலை இதற்கு என்கேஜ் செய்திருக்கலாம்..."

"தேவையில்லை... நீயே பார்க்க அப்படித்தான் இருக்கிறாய்!" என்று சொல்லிவிட்டு இணைப்பைத் துண்டித்தான் அவன்.

மிதுலாவிற்குக் கோபத்தால் முகம் சிவந்தது. சே... என்ன திமிர் இவனுக்கு. என்னைக் கேட்காமல் டி.வி. ப்ரோக்ராமிற்கு என்னைக் கமிட் செய்து இருக்கிறான்.

அது மட்டும் இல்லாமல் நான் என்ன உடை அணிய வேண்டும் என்று வேறு கட்டளையிடுகிறான். ஐ ஜஸ்ட் காண்ட் ஸ்டாண்ட் ஹிம் என்று மனம் குமைந்தாள்.



"மிதுலா... ஐயாம் ஹாப்பி... இன்னிக்கு டி.வி.யில லைவ் ஷோவில உன்னைப் பார்க்கலாம்." என்றாள் உற்சாகமாக ஹெலன்.

"ஹெலன்... ஐயாம் நாட் ஹாப்பி..."

"ஏன்? இந்த மாதிரி வாய்ப்பு எல்லோருக்கும் கிடையாது. இட் வில் பி நைஸ் மிதுலா..."

"எனக்கு ரொம்ப நெர்வஸாக இருக்கிறது. அதுவும் இது லைவ் நிகழ்ச்சி வேறு.

ஏதாவது சொதப்பிவிட்டால்... காட்! ஐ யாம் ஸ்கேர்ட்"

"மிதுலா, ஐயாம் ஷ்யூர் யூ வில் டூ இட் வெல்..."

"ம்... ஐ வில் ட்ரை."

அன்று முழுக்க வேலையில் கவனம் செலுத்த முடியாமல் தவித்தாள் மிதுலா. சாயங்காலம் நெருங்க நெருங்க அவள் மனம் படபடத்தது.

ஐந்து மணி அளவில் அவளை வீட்டுக்குக் கிளம்பிப் போகும்படி ஹெலன் வற்புறுத்தினாள்.

அருணிடம் மட்டும் விஷயத்தைத் தெரிவித்தாள் அவள்.

"அக்கா! வாவ்! ரொம்ப சந்தோஷமா இருக்கு. நம்ம வீட்டில டி.வி. வேற சரியில்லையே... ம்... அக்கா! நான் விக்ரம் வீட்டிற்குப் போய்ப் பார்க்கிறேன்."

"சரி அருண்... பத்திரம்..."

"ஓ... கமான் அக்கா. அதெல்லாம் நான் பார்த்துக் கொள்வேன். அப்புறம் அம்மாவிடம் நான் சொல்லி விடுகிறேன்.

திருச்சி முழுக்க உன் ப்ரோக்ராம் பற்றிய பேச்சுத்தான் இருக்கும் இன்றைக்கு..."

"ஏய், போதும்டா... கேலி செய்யாதே..."

"ஆல் தி பெஸ்ட் அக்கா..."

"தேங்க்ஸ் அருண்..."

வீட்டிற்குப் போனவுடன் அலுப்புத் தீரக் குளித்தாள் மிதுலா. அருணிடம் பேசிய பின்பு மனம் லேசானது போல் உணர்ந்தாள். அடுத்து என்ன உடை அணிவது என்று அவள் மனம் குழம்பியது.

ஒரு நீலநிற சல்வாரை எடுத்தாள் கப்போர்ட்டில் இருந்து. ரொம்ப க்ராண்டாக இல்லாமல் ரொம்ப சிம்பிளாகவும் இல்லாமல் இருந்தது அது.

அதையே அணிந்து கொள்வது என்று முடிவு செய்தாள் அவள். தலை முடியைப் போனி டெயிலில் அடக்கினாள். கண்ணாடியில் உருவத்தைப் பார்த்தாள்.

லேசான ஒப்பனை செய்து கொண்டாள். காலிங்பெல் சப்தம் கேட்டது. அவள் இதயத் துடிப்பு பந்தயக் குதிரை போல் வேகமாகத் துடித்தது.

கதவைத் திறந்தாள் மிதுலா.

"ஹாய்... ஆர் யூ ரெடி..." என்றான் சச்சித்.



"யெஸ்... போகலாம்..."

"இந்த டிரெஸ்ஸா அணிந்து கொண்டு வரப் போகிறாய். நோ வே..."

"ஏன்? இந்த டிரெஸ் நன்றாகத்தானே இருக்கிறது..."

"டிரெஸ் நன்றாக இருக்கிறது. பட் இந்த டி.வி. நிகழ்ச்சிக்குப் பொருத்தமாக இருக்காது இது.

யூ லுக் லைக் எ ஸ்கூல் கேர்ல். ஹூ இஸ் கோயிங் டு மீட் தி பிரின்ஸிபால். வேறு உடை அணிந்து கொண்டு வா..."

"இ... இல்லை... இதுவே போதும்..."

"சொன்னால் கேள் மிதுலா. டைம் ஆகுது. இன்பேக்ட் என்னோடு வரும்பொழுது அன்று அணிந்து இருந்தாயே ஒரு லாங் ஸ்கர்ட், அண்ட் டாப்ஸ். அதுவே நன்றாக இருந்தது."

"என்னால் அதெல்லாம் போட முடியாது. நானே கிளம்பிப் போய்க் கொள்கிறேன்.

நீங்க இங்கேயே இருங்க..." என்று சொல்லிவிட்டுக் கதவை நோக்கி வேகமாக நகர்ந்தாள் அவள்.

இரண்டு அடி நடந்திருப்பாள் அவள். அவன் தோளைப் பிடித்து அவன் முரட்டுத்தனமாகத் திருப்ப, அவள் திமிறிக் கொண்டு கதவை நோக்கி விரைந்தாள்.

சச்சித் அவளின் சுடிதாரைப் பற்றி இழுத்தான். அவன் முரட்டுத்தனமாகத் தோள் அருகே சுடிதாரைப் பற்றி இழுத்ததால் அது தோளிலிருந்து கழுத்துவரை கிழிந்தது.

மிதுலாவிற்கு அவமானத்தால் முகம் சுருங்கிப் போனது. "சே... யூ ஆர் எ பீஸ்ட்!" என்று சீறினாள் அவள்.

கோபத்தால் அவள் உடல் நடுங்கியது. சட்டென சச்சித்தின் கன்னத்தை அறைந்தது அவளின் கை. அவன் கண்கள் கோபத்தால் பளபளத்தன.

## 12

இருளும்
இல்லை
ஒளியும்
இல்லை
.....
மனதை
மயக்கும்
அந்தி
மாலைப்
பொழுது
.....
சாலையோரம்
உனக்காக
நான்
காத்துக்
கொண்டு
இருக்கிறேன்
சீக்கிரம் வா...



அவன் கண்கள் அவள் தோள்ப்பட்டை மேல் பதிந்தன. பின்பு அவளின் கிழிசலைத் தாண்டிக் கழுத்தில் அவன் பார்வை பாய்ந்தது.

"ம்... யூ லுக் வெரி அட்ராக்டிவ் நவ். பட் இப்ப நம்ம அந்த டி.வி. ஷோவிற்குப் போக வேண்டும்.

நேரமாகிவிட்டதால் உன்னை ஏதும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறேன் நான். சீக்கிரமாக உடையை மாற்றி விட்டுக் கிளம்பு."

"நான் எங்கும் வரவில்லை. ஐ டோண்ட் வாண்ட் டு கம்... ஐ ஹேட் யூ."

"என்னை மெதுவாக ஹேட் செய்யலாம். இப்ப கிளம்பு."

"நான் வரவில்லை..."

"டயத்தை வேஸ்ட் செய்யாதே. உன்னை எதிர்பார்த்து டி.வி. சேனலில் காத்திருப்பார்கள்.

அது மட்டும் இல்லை. உன் ஃபேமிலி, உன் பிரண்ட்ஸ் எல்லாரும் உன்னை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு இருப்பார்கள்.

நீ டி.வி.யில் வருவாய். உன்னைப் பார்க்கலாம் என்று காத்துக்கொண்டு இருப்பவர்கள் எல்லாரையும் ஏமாற்றப் போகிறாயா?

நம் பத்திரிகையில் பணிபுரிபவர்களே உன்னை டி.வி.யில் பார்க்க வெயிட் செய்கிறார்கள். டு யூ வாண்ட் டு லெட் தெம் டவுன்?"

அவள் மௌனமாக இருந்தாள். அவளிடம் இருந்து பெருமூச்சுப் பிறந்தது.

"சரி... நான் வருகிறேன்." என்று சொல்லிவிட்டு ஒரு நிமிடம் தயங்கியவள் பின் தொடர்ந்தாள்.

"நீங்கள் கொஞ்சம் வெளியே இருங்க..."

"ஏன்... ஏதாவது ஜன்னல் வழியாகத் தப்பித்துப் போகலாம் என்று நினைக்கிறாயா...?"

"இ... இல்லை. இந்த அறைக்குத் தாழ் இல்லை. அதனால்தான்..."

"ஓ.கே... ஃபைவ் மினிட்ஸ் டைம் உனக்கு. நான் அதற்கு மேல் பொறுக்க மாட்டேன்.

கதவை உடைத்துவிட்டு வந்து விடுவேன்..."

சச்சித் போனவுடன் மெயின் கதவைத் தாழிட்டாள். பின்பு அறைக்குள் சென்றவள், அந்த லாங் ஸ்கர்ட்டையும், டாப்ஸையும் அணிந்து கொண்டாள்.

காலிங்பெல் சப்தம் கேட்டது. சே... சரியான டிஜிட்டல் க்ளாக் என்று மனதிற்குள் அவனைத் திட்டியபடியே கதவைத் திறந்தாள்.

"ம்... நவ் இட்ஸ் நைஸ். இரு ஒரு நிமிஷம்." என்றவன் அவள் தலைமுடியில் இருந்த க்ளிப்பை அகற்றினான்.

"எ.. என்ன இது..." என்று அவன் கையைத் தள்ள முயன்றாள்.

"ம்... இந்த மாதிரி ஃப்ரீ ஹேர் ஸ்டைல்தான் நல்லாயிருக்கும் உனக்கு. இந்த ஷோவிற்கும் அதுதான் பொருத்தமாக இருக்கும்."



ஏதும் சொல்லாமல் அவனை முறைத்தாள் மிதுலா. அவன் அதை கண்டும் காணாமலும் காரைச் செலுத்தியபடி இருந்தான்.

"மிதுலா... யூ ஆர் ரெப்ரஸெண்டிங் அவர் மேகஸின். அதை ஞாபகம் வைத்துக் கொள்.

ஸோ! அதற்குத் தகுந்தாற் போல் பேசு. உன் சொந்தக் கருத்துகளை அங்கு எதையும் சொல்லாதே.

என்ன புரிந்ததா...?"

"எஸ். இது எனக்குத் தெரியும்..."

"தட்ஸ் குட். ஆல் தி பெஸ்ட் மிதுலா. பீ கூல். நீ நன்றாக பெர்பார்ம் செய்வாய் என்று நம்பிக்கை இருக்கிறது எனக்கு..."

அதற்குள் அவர்கள் இறங்கும் இடம் வந்தது. அதனால் பேச்சு தடைப்பட்டது. வரவேற்பறையில் ஹெலன் தயாராக இருந்தாள்.

"ஹாய் மிதுலா. யூ லுக் வெரி நைஸ். இந்த டிரெஸ் ரொம்ப நல்லாயிருக்கு..."

"தேங்க்ஸ் ஹெலன்..."

"மிதுலா... நீ எனக்குத்தான் தேங்க்ஸ் சொல்லணும்..." என்றான் புன்னகைத்தபடியே சச்சித்.

அவள் அவனை முறைத்தாள்.

"வாங்க ஸார்... வாங்க..." என்று வரவேற்பறையில் இருந்த ஒருவர் அவர்களை வரவேற்றார்.

அடுத்த கால் மணி நேரம் மிதுலாவிற்கு அங்கு இருந்த பெண். எந்தக் கேள்விக்கு எந்த பதில், எப்படிச் சொல்ல வேண்டும் என்று பொதுப்படையாகச் சொன்னாள்.

இன்னொரு பெண் அவளின் முகத்திற்கு ஒப்பனை செய்தாள்.

"மிதுலா... இந்த டிரெஸ்ஸிலும், மேக்கப்பிலும் பார்க்க நீ மாடல் மாதிரி இருக்கிறாய்..." என்றாள் ஹெலன்.

"ஹெலன், போதும் என்னைக் கிண்டல் செய்தது..." என்று சிணுங்கினாள் மிதுலா.

"மேடம் இன்னும் அஞ்சு நிமிஷத்தில ஆரம்பிக்கணும் ஷோவை. வாங்க..." என்றாள் ஷோ நடத்தும் பெண் புன்னகையோடு.

அவளைப் பின் தொடர்ந்தாள் மிதுலா. ஷோ ஆரம்பித்த முதல் மூன்று நிமிடங்கள் மட்டுமே மிதுலாவிற்குப் பதட்டமாக இருந்தது.

பின்பு பதட்டம் எல்லாம் நீங்கி ரிலாக்ஸ்டாகப் பதில் சொல்லத் தொடங்கினாள் அவள். பத்திரிகையில் புதிய ஸ்டைல் எப்படி உருவானது, வாசகர்களிடையே அதற்கு அவள் எதிர்பார்க்கும் வரவேற்பு, என்னென்ன புதிய பகுதிகள் உள்ளன என்று அழகாக விளக்கினாள்.

ஒரு மணி நேரம் வேகமாக ஓடியது. சாட் ஷோ முடிந்தது. மிதுலாவிடமிருந்து ஒரு பெருமூச்சுக் கிளம்பியது.

"மிதுலா... இட் வாஸ் நைஸ்!" என்று அவளை அணைத்துக் கொண்டாள் ஹெலன்.



"ம்... தேங்க்ஸ்..."

"வா... மிதுலா... போகலாம்," என்றான் சச்சித்.

"இ... இல்லை... நான் ஆட்டோவில் போய்க் கொள்வேன்."

"கமான்... ராத்திரியாயிடுச்சு. உன்னோட டிரெஸ் அலங்காரம் எல்லாம் ரொம்ப வித்தியாசமாக இருக்கு...

இந்த மாதிரி ஒரு அழகான பெண்ணைத் தனியா அனுப்பறது சரியில்லை..."

"ம்... ஹெலனும் தனியாகத்தான் இருக்கா..." என்றாள் சுள்ளென மிதுலா.

"இல்லை... நான்... என் ஃபிரெண்ட் ஒருத்தருக்கு வெயிட் செய்யறேன்..."

"ஓ... அப்படியா..."

"வா... மிதுலா..." என்றான் சச்சித்.

வேறு வழியின்றி அவனைப் பின் தொடர்ந்தாள் அவள்.

"தேங்க்ஸ் மிதுலா. இட் வாஸ் எ குட் ஷோ..."

"இட்ஸ் ஓ.கே. இது என் வேலை..."

அவள் கைபேசி அப்பொழுது சிணுங்கியது.

"சொல்லுங்க விக்ரம்."

"ஷோ... ரொம்ப நேச்சுரலா இருந்தது மிதுலா. நீ ரொம்ப நல்லாப் பேசின..."

"தேங்க்ஸ் விக்ரம்..."

"அப்புறம் அருண் இன்னிக்கு என்னோடவே தங்கிக்கட்டுமே இன்னிக்கு மட்டும்..."

"ம்... அப்ப நீங்க வீட்டுக்கு வரலையா...?"

"அருணிற்கும் ஒரு சேஞ்ஜா இருக்கட்டுமே... அதனால தான் சொல்றேன்..."

"ம்... சரி. பட் பத்திரம் விக்ரம். உனக்குத் தெரியும். இருந்தாலும் சொல்ல வேண்டியது என் கடமை..."

"புரிகிறது மிதுலா. குட் நைட்..."

"குட்நைட் விக்ரம்..."

அதற்குள் வீடு வந்துவிட இறங்கப் போனாள் அவள்.

"தேங்க்ஸ். குட் நைட்..."

"மிதுலா... இரு. நானும் வருகிறேன். இருட்டா இருக்கு" என்று அவளைப் பின் தொடர்ந்தவன் அவள் கதவைத் திறக்க உதவி செய்தான்.

கதவைத் திறந்து லைட்டிற்கான ஸ்விட்சைப் போட முயலும்பொழுதுதான் அவன் உள்ளே வந்ததைக் கவனித்தாள் அவள்.

"நான் உங்களை உள்ளே அழைக்கவில்லை..."

"ம்... ஐயாம் நாட் வெயிட்டிங் ஃபார் ஆன் இன்விடேஷன்..."

உனக்கும் எனக்கும் இடையே ஒரு கணக்கு தீர்க்கப் படாமல் இருக்கிறது..."



"என்னது. புரியவில்லை..."

"நீ என்னை அடித்தாய் அல்லவா... அதைத்தான் சொல்கிறேன். அதற்குப் பதிலுக்கு நான் ஏதாவது கொடுக்க வேண்டுமே...

ம்... என்ன கொடுக்கலாம்?" என்றவன் அவளைத் தன்புறம் இழுத்தான்.

"நீங்கள்தான் என்னை அடிக்கத் தூண்டியது. என் டிரெஸ்ஸை... நீங்கள்தான் கிழித்தீர்கள்..." என்று சீறினாள்.

"நான் புதிதாக ஒன்று உனக்கு வாங்கிக் கொடுத்து விடுகிறேன்..."

"விடுங்கள் என்னை. டோண்ட் டச் மி..."

"என்னோடு சண்டை போடப் போகிறாயா... உன் விக்ரம் வேறு இன்று இங்கே வரமாட்டான் போல. பாவம் நீ...

அவனுக்காக எவ்வளவு உருகுகிறாய். அவன் அதைப் புரிந்து கொள்ள மாட்டேங்கறானே... சே... சே.. பூ பேட்..."

"ஷட் அப்... லீவ் திஸ் ப்ளேஸ்..."

"என்னுடைய பதில்... நீ கை நீட்டி என்னை அடித்ததற்கு..." என்றவன் அவள் உதடுகளைத் தன் உதடுகளால் முற்றுகையிட்டான்...

அவள் ஏதும் செய்யாமல் இறுகிப் போய் இருந்தாள். தன் உடல் நடுங்குவதைக் கட்டுப்படுத்திக் கொண்டு இருந்தாள்.

"ஃபுல் மார்க்ஸ் ஃபார் யூவர் செல்ஃப் கண்ட்ரோல் மிதுலா. இன்னும் எவ்வளவு நாள் இப்படி இருப்பாய் என்று பார்க்கலாம்," என்றவன் அவளை விடுவித்தான்.

அவன் அங்கிருந்து வெளியேறியவுடன் கதவைத் தாழிட்டாள் அவள். சச்சித்தை நினைக்கும் பொழுது அவளை அறியாமல் பயம் ஒரு பந்தைப் போல் அடிவயிற்றில் இருந்து எழும்பியது.

என்னை மீறி எதுவும் நடக்காது. அவனால் என்னை ஏதும் செய்ய முடியாது.

நான் சிலைபோல் இருந்ததிலிருந்தே அவனுக்குத் தெரிந்து இருக்கும் என்னைப் பற்றி. அவனால் என் மேல் எந்த இம்பாக்ட்டும் இல்லை என்று அவனுக்குத் தெரிந்து இருக்கும்.

அதுவே அவனுக்குப் பெரிய அடி. அந்த அவமானம் தாங்க முடியாமல்தான் அவன் வேக வேகமாக இங்கு இருந்து சென்றுவிட்டான்.

ஆனால் அவன் அண்மையை மனம் விரும்பியது தான் உண்மை. இது ஹார்மோன்களின் கோளாறா... மனதில் இருப்பதை மறைத்துக்கொண்டு இருப்பது பெரிய வேதனையாக இருந்தது.

எவ்வளவு நாள் இந்த மாதிரி நடிக்க முடியும் என்று நினைத்தபொழுது ஒரு பெருமூச்சுப் பிறந்தது அவளிடம் இருந்து...

அடுத்த நாள் காலையில் மிதுலா கண் விழித்த பொழுது முதலில் பட்டது அந்தக் கிழிந்த சல்வார். நேற்று நடந்ததை அது அவளுக்கு நினைவூட்டியது.



நே... அதைப் பற்றி இனி நினைக்கவே கூடாது என்று முடிவு செய்தாள். அவள் கைப்பேசி சிணுங்கியது.

"ஹலோ அம்மா... குட் மார்னிங்..."

"குட்மார்னிங் மிது... உன் ப்ரோக்ராம் நேற்று டி.வி.யில பார்த்தேன். ரொம்ப நல்லா இருந்துச்சுடா...

இங்கே நம்ம வீட்டுக்கிட்ட இருக்கறவங்க எல்லோரும் பார்த்தாங்க. ரொம்ப நல்லாப் பேசின அப்படின்னு சொன்னாங்க..."

"ஓ... தேங்க்ஸ் அம்மா. அந்த ப்ரோக்ராம் சி.டி வந்தவுடன் நான் உங்களுக்கு அனுப்பறேன்.

யூ வில் லைக் இட். அப்புறம் அம்மா, நீங்களும் இங்க வாங்களேன். தம்பி இப்ப இங்கதானே இருக்கான்.

நீங்க மட்டும் ஏன் அங்க தனியா கஷ்டப்படணும். அட்லீஸ்ட் கொஞ்ச நாளாவது வந்து இருங்க..."

"இல்ல மிது... இங்க தோட்டம்..." என்று இழுத்தாள்.

"போங்க அம்மா... உங்களுக்குத் தோட்டம்தான் முக்கியம்..." என்று சிணுங்கினாள் மிதுலா.

"அப்படி இல்லை மிது... செடிக்குத் தண்ணீர் எல்லாம் ஊத்தணும்... அதான் யோசனையா இருக்கு..."

"அம்மா... பக்கத்து வீட்டு ஆன்ட்டிகிட்டே சொல்லிட்டு வாங்க. அவங்க பார்த்துப்பாங்க..."

"சரி மிது... நான் வர ட்ரை பண்றேன். நீ ஆஃபீஸ்க்குக் கிளம்பு. நான் அப்புறம் ஃபோன் செய்யறேன்..."

# 13

புத்தம்
புதிதாக
ஒரு
இடம்...
வானவில்
வீட்டுக்
கூரையாக
....
பூக்கள்
வீட்டுச்
சுவர்களாக
.....
குயில்
கீதம்
நமக்கே
நமக்காக
கனாக்
கண்டேன்
தோழி!

அன்று ஆபீஸில் மிதுலா நுழைந்தவுடன் எல்லோரும் அவள் ப்ரோக்ராமைப் பற்றியே பேசிக் கொண்டு இருந்தனர்.

ஒரு வழியாகத் தன் அறைக்கு அவள் வந்து வேலை பார்க்கத் தொடங்கிய பொழுது மணி பத்து.



அன்று மதியம் அவளுக்கு ஒரு கொரியர் வந்தது. பெரிய டப்பா போல் இருந்த அந்தக் கவரில் என்ன இருக்கும் என்று ஆவலோடு திறந்தாள் அவள்.

உள்ளே ஒரு அழகான டிரெஸ் இருந்தது. ஒரு லாங் ஸ்கர்ட் அண்ட் டாப்ஸ். அந்த ஸ்கர்ட்டின் துணியே மிக மென்மையாக இருந்தது.

ரோஜா இதழ் நிறத்தில் இருந்த அந்த ஸ்கர்ட்டில் கண்ணாடிகள் பதிக்கப்பட்டு இருந்தன. வெள்ளை நிறத்தில் பிங்க் எம்ப்ராய்டரி செய்யப்பட்டிருந்த அந்த டாப்ஸ் அதற்குப் பொருத்தமாக இருந்தது.

யார் அனுப்பியிருப்பார்கள் என்று புரியாமல் திகைத்தாள் அவள். பின்பு அவளுக்குப் பொறி தட்டியது. இது சச்சித் வேலையாக இருக்கும்.

நேற்று டிரெஸ் கிழிந்ததற்கு இவன் பிராயச்சித்தமாக வேறு டிரஸ் வாங்கி அனுப்பியிருக்கான் போல. செய்வதெல்லாம் செய்துவிட்டு கடைசியில் இப்படிச் செய்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடுமா என்ன...?

சே... சரியான திமிர் பிடித்தவன். பணம் இருக்கிறது என்ற திமிர். என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற அலட்சியம்.

இவனை தட்டிக் கேட்க யாரும் இல்லை என்ற திமிர். நான் இவனைச் சும்மாவிட மாட்டேன் என்று கோபமாக அவன் அறைக்குள் நுழைந்தாள்.

அங்கே கணினியில் மூழ்கி இருந்தவன் கதவு தள்ளப்படும் சத்தம் கேட்டுத் தலை நிமிர்ந்தான்.

அவள் கையில் இருந்த அட்டைப் பெட்டி மேல் அவன் பார்வை பதிந்தது.

"என்ன மிதுலா. டிரெஸ் பிடிக்கவில்லையா...? இல்லை, அளவு சரியில்லையா...?"

"நான் இந்த உடையை ட்ரை செய்து பார்க்கவில்லை. இது எனக்குப் பிடித்திருக்கிறது, பிடிக்கவில்லை என்பதெல்லாம் தேவையில்லாத விஷயம்.

ஏனென்றால் நான் இதை உங்களிடம் இருந்து வாங்கிக் கொள்ளப் போவதில்லை."

"ஓ... முடிவே செய்து விட்டாயா...?"

"ஆமாம்..."

"ஆனால் நான் உனக்கு ஒரு டிரெஸ் கடன்பட்டு இருக்கிறேன்..."

"ம்... அப்படி என்றால் அதற்கான பணத்தைக் கொடுத்து விடுங்கள்..."

"நீ பணம் வாங்கமாட்டாய் என நான் நினைத்தேன்."

"ஏன்...?"

"நீதானே சொன்னாய், என்னிடம். பணம் எல்லாவற்றையும் சரி செய்து விடாது என்று...

நேற்றுத் தேடித் தேடி உனக்காகப் பார்த்துப் பார்த்து இந்த டிரெஸ்ஸை வாங்கினேன்."

"நீங்களே கடைக்குப் போய் வாங்கினீர்களா...?"



"ம்... யெஸ்... உன்னையும் அழைத்துச் சென்று போயிருக்க வேண்டும். ஆனால் நீ வர மாட்டாய் என்று தெரியும் எனக்கு..."

"கரெக்ட். நான் வரமாட்டேன் அங்கெல்லாம்!" என்றாள் தணிந்த குரலில்.

அவனே கடைக்குச் சென்று தனக்காக உடையைத் தேர்வு செய்து இருக்கிறான் என்று நினைத்தபொழுது ஏனோ அவள் மனதில் ஒரு மெல்லிய சாரல் வீசியது.

அவன் யாராவது ஒரு ஆளை அனுப்பி வாங்கி வரச் செய்து இருக்கலாம். அப்படிச் செய்யாமல் அவனே சென்று உடையைத் தேர்வு செய்தது அவளுக்கு ஏதோ ஒரு உணர்வைத் தோற்றுவித்தது.

"நீ எப்பொழுது அந்த உடையை அணிந்துகொண்டு வரப் போகிறாய் என்று நான் ஆவலாகக் காத்துக்கொண்டு இருக்கிறேன்..."

"பட்... இந்த மாதிரி உடை எல்லாம் ஆஃபீஸிற்குப் போட்டு வர முடியாது..."

"ம்... நான் ஆபீஸிற்குப் போட்டு வரச் சொல்லவில்லை. என்னுடைய அப்பா உன்னை வீட்டிற்கு அழைத்து இருக்கிறார்..."

"எ... என்னையா...?"

"யெஸ்... உன்னைத்தான். நேற்று உன் ப்ரோக்ராமைப் பார்த்தவர் இம்பிரெஸ் ஆகிவிட்டார்.

வரும் சனிக்கிழமை அவருக்குப் பிறந்த நாள். ஒரு சின்னப் பார்ட்டி இருக்கிறது.

அதற்குத்தான் உன்னை அழைத்து வரச் சொன்னார். நீ அப்பொழுது அந்த உடையை அணிந்து கொண்டு வா. ப்ளீஸ்..."

அவள் முடியாது என்பது போல் தலை அசைத்தாள்.

"டு பேட் மிதுலா. நான் இவ்வளவு சொன்ன பிறகு கூட... நீ இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறாயே...

இந்த டிரெஸ்ஸிற்கான பணம் எல்லாம் என்னால் கொடுக்க முடியாது. இந்த டிரெஸ்ஸை வாங்கிக் கொள். இல்லாவிட்டால் உனக்கு எதுவும் கிடைக்காது..."

"பரவாயில்லை... ஐ வில் செட்டில் டவுன் ஃபார் நத்திங்..."

"கிஃப்ட் கொடுத்தால் அதை எப்படி கிரேஸ்புல்லா பெற்றுக் கொள்வது என்று யாரும் உனக்குச் சொல்லித் தரவில்லையா...?"

"இல்லை. ஐயாம் எ பிட் ஓல்ட் ஃபேஷன்ட் கேர்ல்."

"ம்... அப்ப நீ சனிக்கிழமை என்னோட வரவில்லையா - எங்க வீட்டு பார்ட்டிக்கு..."

"இல்லை. நான் வரவில்லை..."

"ஏன்..."

"ஐ டோண்ட் வாண்ட்.. ரிபீட் ஆஃப் யெஸ்டெர்டே..."

"ம்... ஐ ப்ராமிஸ். அப்படி ஏதும் நடக்காது..."



"நீங்கள் இப்படித்தான் சொல்வீர்கள்... பட்..." என்று அவள் முடிக்கும் முன்பு குறுக்கிட்டான் அவன்.

"எனக்காக நீ வர வேண்டாம். என் அப்பாவிற்காக வா... பாவம். வயதானவர்..."

அவள் முகத்தில் இருந்த இறுக்கம் தளர்ந்தது.

"சரி... நான் முயற்சி செய்கிறேன். பட் நான் ப்ராமிஸ் செய்யவில்லை..."

"தேங்க்ஸ். நீ வந்தால் என் அப்பா சந்தோஷப் படுவார். நீ யாரிடமாவது பர்மிஷன் வாங்க வேண்டுமா...?"

அவள் அவனை எரித்துவிடுவது போல் பார்த்தாள்.

"ஆமாம்..." என்றாள் அழுத்தமாக.

"ஓ.கே... நீ போகலாம்," என்றான் முகத்தில் அடித்தாற் போல அவன்.

அவன் அறையிலிருந்து வேகமாக வெளியேறினாள் அவள்.

"என்ன மிதுலா, டல்லா இருக்க..." என்றாள் ஹெலன்.

"ம்... நத்திங்..."

"பாஸ் ரொம்ப ஹேப்பியாக இருக்கார். தி ப்ரோக்ராம் ஹாஸ் கம் அவுட் வெல் அப்படின்னார்..."

"ம்... அப்படியா..."

"மிதுலா, ஆர் யூ ஓ.கே. ஏன் சுரத்தே இல்லாமல் இருக்க..."

அவள் மனதை அழுத்திக்கொண்டு இருந்ததை, அவள் யாரிடமாவது சொன்னால் மனம் அமைதி அடையும் என்று தோன்றியது.

மனதில் இருப்பதைப் 'படபட'வென அவளிடம் கொட்டினாள் மிதுலா. அவள் சொன்னதைப் பொறுமையாகக் கேட்டாள் ஹெலன்.

"ஏய்... ஐ திங்க் பாஸ் இஸ் இன் லவ் வித் யூ..."

"கமான் ஹெலன். நீயும் என்னைக் கேலி செய்யறியா...?"

"ஓ... அப்படி எல்லாம் ஏதும் இல்லை மிதுலா. என் மனதில் பட்டதைச் சொல்கிறேன்.

சம்திங் டெல்ஸ் மி தட் ஹி லைக்ஸ் யூ..."

"தெரியலை. ஐ யாம் நாட் கம்பர்டபிள் வித் ஹிம்..."

"ஓ.கே... ஆனால் நீ பெரிய ஐயாவிற்காகவாவது அவங்க வீட்டிற்குப் போகலாம் அப்படின்னு நான் ஃபீல் செய்யறேன்..."

"நான் யோசிக்கணும், ஹெலன்..."

"நான் உங்களை வற்புறுத்தலை. பட் நீங்க போனீங்கன்னா பெரிய ஐயா சந்தோஷப்படுவார்."

மிதுலாவின் கைபேசி சிணுங்கியது. புது நம்பர் தெரிய, யாராக இருக்கும் என்று யோசித்துக் கொண்டே பச்சை பட்டனை அழுத்தினாள்.

"ஹலோ மிதுலா ஸ்பீக்கிங்..."



"மிதுலா, ஹவ் ஆர் யூ. நான் சச்சித்தோட அப்பா பேசுறேன்..."

"குட் மார்னிங் ஸார். ஐ யாம் குட்... ஹவ் ஆர் யூ..."

"ஐ யாம் ஓ.கே... நீ என் பர்த்டே பார்ட்டிக்கு வருவதாகச் சொல். ஐ வில் பி அட் மை பெஸ்ட்!" என்றார் கம்பீரமாக...

"வந்து... நான்... எனக்குக் கொஞ்சம் டைம் வேண்டும்..."

"ம்... அடுத்த பிறந்த நாளுக்கு நான் இருப்பேனா என்று தெரியவில்லை.

ஐயாம் க்ளோஸ் டு எயிட்டி நவ்..."

"ஓ... நோ... ப்ளீஸ் இந்த மாதிரி எல்லாம் பேசாதீர்கள். ஐ வில் கம் ஸார்..."

"தேங்க்ஸ் மிதுலா. ஐ யாம் ஹாப்பி..." என்று சொல்லிவிட்டுச் சிரித்தார் அவர்.

அவள் முன்னே கையைப் பாக்கெட்டில் விட்டபடி நின்றுகொண்டு இருந்த சச்சித்தை அவள் அப்பொழுதுதான் கவனித்தாள்.

"தேங்க்ஸ் மிதுலா..." என்றான் உல்லாசமான புன்னகையோடு அவன்.

நினைத்ததைச் சாதித்துக் கொண்ட பெருமிதம் அவன் முகத்தில் தெரிந்தது.

"நான் உங்கள் அப்பாவிற்காகத்தான் ஒத்துக் கொண்டேன். வயதில் பெரியவர் அவர்.

என்னை மதித்துக் கூப்பிட்டாரே. அதனால்தான்..."

"தேங்க்ஸ்... பரவாயில்லை என் அப்பா. நான் இந்த டிரெஸ்ஸையும் அவர் வழியாகக் கொடுத்திருக்கலாம் போல..

நான்தான் தப்பு செய்துவிட்டேன். அவர் கொடுத்தால் நீ வாங்கி இருப்பாய். எனக்கு நம்பிக்கை இருக்கிறது..."

அவள் அவனை முறைத்தாள்.

"எனக்கு வேலை நிறைய இருக்கிறது..."

"ம்... நேரம் தான். யார் பாஸ் என்று தெரியவில்லை" என்றான் கண்கள் மின்ன அவன்.

அவள் உதட்டிலும் புன்னகை பரவியது.

"ம்... தட்ஸ் நைஸ்... நீ சிரித்துக் கொண்டு இருக்கும் பொழுதே நான் கிளம்புகிறேன்..." என்று சொல்லிக்கொண்டே அங்கிருந்து நகர்ந்தான் அவன்.

அடுத்த இரண்டு மணி நேரம் கணினியில் மூழ்கினாள் மிதுலா. மனதின் மூலையில் ஏனோ ஒரு குறுகுறுப்பு படர்ந்தது.

சச்சித் சொன்னதே அவள் காதில் ஒலித்துக்கொண்டு இருந்தது. சில நேரம் நன்றாக கூலாகப் பேசுகிறான்.

சில நேரம் தான் ஏதோ மாதிரி காய்கிறான். அவன் தன்னிடம் கேஷுவலாகப் பேசும்பொழுது தன் மனம் அலை பாய்வதை அவளால் உணர முடிந்தது.

தன் மனதில் தோன்றும் எண்ணங்கள் அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. தன் மனம் ஏன் இப்படி சச்சித்தின் மேல் அலை பாய்கிறது என்று குழம்பினாள் அவள்.



ஹெலன் வேறு ஏதேதோ சொன்னாள். எது நிஜம்? ஹெலன் சொல்வது போல் சச்சித்திற்கு என் மேல் ஈடுபாடா என்று நினைத்து மருகினாள் அவள்.

அப்படி எல்லாம் இருக்காது. நீனா வேறு இருக்கிறாள்.

அதனால் நான் இந்த மாதிரி நினைப்பதெல்லாம் தவறு என்று தன்னையே கடிந்து கொண்டாள் அவள்.

அந்த வாரக் கடைசி வேகமாகத் தன்னை நோக்கி ஓடிவந்தது போல் தோன்றியது அவளுக்கு.

"மிதுலா, இன்னிக்கு ஈவினிங் ஐந்து மணிக்கு ரெடியா இரு. நாம் இன்னிக்கு என் வீட்டுக்குப் போகிறோம்."

"பட்... பார்ட்டி சனிக்கிழமைதானே. இன்னிக்கு வெள்ளிக் கிழமைதானே. இன்னிக்கு ஏன் கிளம்பணும்..."

"ஐயாம் ஸாரி. நான் உன்னிடம் விளக்கமாகச் சொல்லலை. பார்ட்டி நாளைக்குத்தான்.

பட் என் அப்பா உன்னிடம் பேச ஆசைப்படறார். ஹி லைக்ஸ் டு டிஸ்கஸ் எ லாட் அபவுட் தி மேகசின்.

அதனால் அவர் உன்னை வரச் சொல்கிறார். பார்ட்டியின் பொழுது பேச டைம் இருக்காது. அதனால் தான் உன்னை அவர் இன்று இரவே வரச் சொன்னார்..."

"பட்... நான்..." என்று தயங்கினாள் மிதுலா.

"நாம் போகப் போவது என் வீட்டிற்கு. அங்கே என் அப்பா இருக்கிறார். அதனால் நீ பயப்படாமல் வா..."

"எனக்குப் பயம் ஒன்றும் இல்லை..."

"அப்படியா என்ன..." என்று அவள் அருகே வந்தான்.

அவள் முகம் சட்டென வெளிறியது. அவள் கண்களில் அவளை அறியாமல் பயம் வெளிப்பட்டது.

"உன் கண்கள் உன் மனதில் இருப்பதைக் காட்டிக் கொடுத்து விடும் மை டியர் கேர்ல்..."

"லுக்... அநாவசியப் பேச்சு வேண்டாம்... நாளைக்கு ஈவினிங் ரிடர்ன் ஆகணும் எனக்கு..."

"ம்... தெரியும். ஸண்டே யூ மே ஹாவ் இம்பார்ட்டண்ட் என்கேஜ்மெண்ட் வித் ஸம் ஒன்..."

"யெஸ்... கரெக்டா சொல்லிட்டீங்களே..."

"உன்னைப் பற்றித் தெரியாதா என்ன? ஈவினிங் கிளம்பித் தயாரா இரு. நான் உன்னை வந்து பிக்-அப் செய்கிறேன்.

ஐந்து மணிக்கு... டோண்ட் ஃபர்கெட்..."

"சரி," என்று முனகினாள் அவள்.

அன்று சீக்கிரமாக வீட்டுக்குக் கிளம்பிப் போனாள் மிதுலா. ஹெலனிடம் மட்டும் எங்கே போகிறோம் என்று சொன்னாள்.

"மிதுலா... என்ஜாய் வெல். யூ ஆல்ஸோ நீட் எ பிரேக். ரொம்ப நாள் நீங்கள் ஓய்வில்லாமல் ரோபோ போல் வேலை பார்த்தீர்கள்..."

"என்ஜாய் செய்வேன் என்று நினைக்கிறேன்..."



"சச்சித் ஸார் இருக்கிறார்தானே. அவர் உங்களைக் கவனித்துக் கொள்வார்!" என்று குறும்பாகக் கண் அடித்தாள் ஹெலன்.

"ஹெலன், வர வர நீ ரொம்ப நாட்டியாகிவிட்டாய்..." என்று அவளைக் கோபித்தாள் மிதுலா.

ஹெலன் சிரித்துக் கொண்டே அறையிலிருந்து வெளியேறினாள்.

கைப்பையை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு கிளம்பினாள் மிதுலா.

# 14

தினம்
தினம்
புதிதாக
வண்ணப்
பூக்களால்
ஆன
வானம்
நமக்காக!
குயில்
பாட்டு
தமிழில்
நமக்காக!
தேன்
மழை

எப்பொழுதும்
நமக்காக!
கனாக்
கண்டேன்
தோழி!

சரியாக ஐந்து மணிக்கு மிதுலாவிற்கு காலிங்பெல் ஓசை கேட்டது.

"ம்... சச்சித்தாகத்தான் இருக்கும். சரியான நேரத்திற்கு வருவது அவனோட ஸ்பெஷாலிடி என்று நினைத்தபடியே கதவைத் திறந்தாள் மிதுலா.

"ஹாய் மிதுலா... ஆர் யூ ரெடி...?"

"யெஸ்... போகலாம்..." என்றாள் கதவை முழுதாகத் திறக்காமலே.

"ம்... என்னை வீட்டிற்குள் அனுமதிக்க மாட்டாய் போல. எனக்கு உன் நோக்கம் புரிகிறது."

அவள் முகத்தில் ஆச்சரியம் படர்ந்தது. தன் மனதில் இருப்பதை இவன் கண்டுபிடித்துவிட்டானே என்று அவளுக்குத் திகைப்பாக இருந்தது.

"நான் போய்க் கைப்பையை எடுத்துக் கொண்டு வருகிறேன். ஒன் செகண்ட்..." என்று சொல்லிவிட்டுத் தயாராக இருந்த கைப்பையை எடுத்துக்கொண்டு வந்தாள்.

கூடவே இன்னொரு பையும் இருந்தது. அந்த டிராவல் பேக்கில் தனக்குத் தேவையான உடைகளை அவள் வைத்திருந்தாள்.

"இவ்வளவுதானா உன் திங்ஸ்..."



"ஆமாம். ஒரு நாள்தானே..."

"ம்... நீ எவ்வளவு நாள் வேண்டுமானாலும் தங்கலாம். எனக்கு ஆட்சேபணை இல்லை..."

அவள் அவனை முறைத்தாள்.

"ஐ மீன் என்னோட அப்பாவிற்கு நல்லா பொழுது போகும்.

நான் அதை மனதில் வைத்துத்தான் சொன்னேன்."

"சரி... போகலாமா..." என்றாள் பேச்சைக் கத்தரிக்கும் எண்ணத்தோடு.

கார் ஓ.எம்.ஆர் ரோட்டில் சீறிப் பாய்ந்தது. காரில் இருந்து ஒலித்த மென்மையான இசையும், இதமான பெர்ப்யூம் மணமும் அவளுக்குத் தூக்கத்தை வரவழைத்தது.

தன்னை மீறி சீட்டில் சாய்ந்தபடியே கண் அயர்ந்தாள் அவள். அவள் தூங்குவதற்கு வசதியாகப் பின்னால் இருந்த தலையணை ஒன்றை எடுத்து அவள் முதுகிற்கும், கழுத்திற்கும் வாகாக வைத்தான் அவன்.

கார் பச்சை சிக்னலிற்காகக் காத்துக் கொண்டு இருக்கும்பொழுது கண் விழித்தாள் அவள். பின்னால் இருந்த தலையணையை அவள் அப்பொழுதுதான் கவனித்தாள்.

"ஸாரி... நான் தூங்கிவிட்டேன் போல..."

"இதற்கு எதுக்கு ஸாரி. யூ மே பி டையர்ட்..."

அதற்குப் பின் அங்கே சில நிமிடங்கள் மௌனம் படர்ந்தது.

"என்ன மிதுலா... ஏதோ யோசனையில் இருக்க..."

"ம்... நத்திங். ஐ யாம் நாட் எ குட் கம்பெனி ஃபார் யூ..."

"நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. சில நேரம் வண்டி ஓட்டும்பொழுது யாராவது வாய் ஓயாமல் பேசிக் கொண்டு வந்தால் ஏனோ எரிச்சல் வரும்."

அவள் ஏதும் சொல்லாமல் வெளியே வேடிக்கை பார்த்தபடி வந்தாள். ஏரி போல் இருந்த இடத்தில் நிறையப் பறவைகள் இருந்தன.

பரவாயில்லை. இங்கே கூட நாரை போன்ற பறவைகள் இருக்கிறதே என்று ஆச்சரியமாக இருந்தது அவளுக்கு.

காரில் நிலவிய மௌனம் ஏனோ அவளுக்கு ஒரு அலுப்பை வரவழைத்தது.

"ஏன் பேசாமல் வர்றீங்க?" என்று மனதில் இருந்தது உதட்டில் இருந்து வார்த்தைகளாகத் தெறித்தன.

"வில் இட் மேட்டர் டு யூ இஃப் ஐ டோண்ட் டாக்..."

"ஐயாம் ஸாரி... நான் இனி ஏதும் கேட்கவில்லை"

"ஏன் இவ்வளவு சென்ஸிடிவாக இருக்கிறாய்? நாம் இருவரும் எப்பவும் சண்டை போட்டுக் கொண்டே இருக்கிறோம்.

அது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. பட் கொஞ்ச நேரம் நாம் சண்டை போடாமல் இருக்கலாமா? நம் ஆயுதங்களை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு... கொஞ்ச நேரம் அமைதியாக இருக்கலாமா...?"



அவன் வெளிப்படையாகப் பேசியது அவளுக்குப் பிடித்தது.

"சரி..." என்று தலை அசைத்தாள் அவள்.

அதற்குப் பின்பு இருவரும் பொதுவான விஷயங்களைப் பற்றி பேசிக்கொண்டு இருந்தனர். அரசியல், விளையாட்டு, சினிமா என்று எல்லாவற்றையும் பற்றிப் பேசிக்கொண்டு வந்தனர்.

"ம்... கின்னஸ் ரிகார்ட்தான்!" என்றான் சச்சித் சட்டென.

"என்ன, புரியவில்லை..."

"சண்டை போடாம அமைதியா பேசறோமே, அதுக்குத் தான் சொன்னேன்."

அவள் அதைக் கேட்டுச் சிரித்தாள்.

"இன்னும் எவ்வளவு தூரம் போகணும்...?"

"ம்... ஏன் போர் அடிக்குதா என்னோட வருவதற்கு...?"

"ஒரு கேள்விக்குப் பதில், இன்னொரு கேள்வியா...?"

"உன்னிடம் இருந்துதான் கற்றுக்கொண்டேன்..."

அவள் இதழ்களில் புன்னகை பரவியது.

"இன்னும் மூன்று கிலோமீட்டர் தான். அப்பாவிற்கு ஒதுக்குப்புறமாக இருக்கறதுதான் பிடிச்சிருக்கு.

அதனால தான் இங்கே வீடு கட்டினார். அமைதியாக நகரத்தின் பரபரப்பை எல்லாம் தாண்டி வீடு கட்ட வேண்டும் என்பது அவர் விருப்பம்..."

"தட்ஸ் நைஸ். நிஜமாலுமே இந்த இடம் ரொம்ப நல்லாதான் இருக்கு.

வழியில ஒரு ஏரி கூடப் பார்த்தேன். நிறையப் பறவைகள் வேறு இருந்தன அதில்..."

"ஆமாம்... இங்கே பள்ளிக்கரணை அருகில் கூட நிறையப் பறவைகள் இருக்கும்."

அதற்குள் அவர்கள் இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டதால் பேச்சு தடைப்பட்டது.

"வா... மிதுலா... இதுதான் எங்க வீடு..." என்றபடியே காரை பார்க் செய்தான் அவன்.

அது வீடு இல்லை, பங்களா என மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் அவள். வீட்டைச் சுற்றி மரங்கள். வீட்டின் முன் இருந்த அழகான செயற்கை நீர் ஊற்று பார்க்க அழகாக இருந்தது.

"வா... மிதுலா... உள்ளே வா, நாளைக்கு உனக்குத் தோட்டத்தைச் சுற்றிக் காட்டுகிறேன்."

"ம்... தேங்க்ஸ்!" என்றபடியே வீட்டினுள் அவனைப் பின் தொடர்ந்தாள் அவள்.

காலிங்பெல் அடிப்பதற்கு முன்பே கதவு திறக்கப் பட்டது.

"வா மிதுலா... சச்சித்! ஏன்டா லேட்?" என்று வரவேற்றார் ஒரு முதியவர்.

"வணக்கம்!" என்று கை குவித்தாள் மிதுலா.

"ஹாய் மிதுலா. வா உள்ளே!" என்று தோழமையோடு அவள் தோளைத் தட்டினார் அவர்.



"என்ன அப்பா. ஒரே குஷியா இருக்கீங்க?"

"ம்... இன்னிக்கு கோல்பில பிரதாப்பை தோற்கடிச்சிட்டேன்டா. அதான் ஒரே குஷியா இருக்கு.

அதோட மிதுலா இஸ் ஹியர்!" என்று சிரித்தார் அவர்.

"அப்பா... அவளைக் கன்வின்ஸ் செய்து அழைத்து வருவதற்குள்... காட்... ரொம்ப கஷ்டப்பட்டுவிட்டேன்."

மிதுலா சச்சிதத்தை முறைத்தாள்.

"என்னையும் மிதுலா உன்னைப் போல் நினைத்து விட்டாள் போல.

அதனால்தான் பயந்து போய் வர மாட்டேன்னு சொல்லிட்டா போல!"

"அப்பா... திஸ் இஸ் டூ மச்."

"மிதுலா... இவனை வைத்து என்னை எடை போடாதே. ஐயாம் ஏன் இண்ட்ரஸ்டிங் பெர்ஸன்.

உன் டி.வி. சேட் ஷோ பார்த்தேன். ரொம்ப அருமையாக இருந்தது. இட் வாஸ் வெரி நேச்சுரல்"

"தேங்க்ஸ் ஸார்..."

"என்னது ஸாரா. என் பெயர் பிரகாஷ். கால் மீ அங்கிள். இல்லை பிரகாஷ்..."

"அப்பா... அவள் என்னையே பெயர் சொல்லிக் கூப்பிட மாட்டேங்கறா.

உங்களையா பெயர் சொல்லிக் கூப்பிடப் போறா? குட் ஜோக்."

"ஏய், உன்னைக் கூப்பிடத் தயங்கறதுக்குக் காரணம் இருக்கு. யூ ஆர் ஹர் பாஸ். நாட் மீ."

"ம்... நீங்க பாஸோட அப்பா. உங்களை மிதுலா பிரகாஷ்ன்னு கூப்பிடறதை என்னாலே ஒத்துக்க முடியாது.."

அவர்கள் இருவரும் மாறி மாறிப் பேசிக் கொள்வதை விழி அகலப் பார்த்தபடி இருந்தாள் மிதுலா.

"சும்மா தொணதொணன்னு பேசாதே சச்சித். முதலில் மிதுலாவிற்கு அவளோட ரூமைக் காட்டு. ஷீ மே பி டயர்ட்."

"ஓ... ஷ்யூர். மிதுலா, வா..."

ஹாலைக் கடந்து சென்றான் சச்சித். இடது பக்கம் இருந்த ஒரு பெரிய அறையினுள் நுழைந்தான் அவன்.

"மிதுலா... இதுதான் உன் அறை. நீ ரிபிரெஷ் செஞ்சுட்டு வா. டின்னர் டைம் இஸ் எயிட் தர்ட்டி."

"தேங்க்ஸ்!" என்றபடியே அறையினுள் நுழைந்தாள்.

டி.வி., பெரிய கட்டில், கப்போர்ட், வால் ஹேங்கிங் என வெல் ஃபர்னிஷ்டாக இருந்தது அந்த அறை. தூசு ஏதும் இல்லாமல் துப்புரவாக இருந்தது எல்லா இடமும்.

ஹாலும் துப்புரவாக இருந்தது அவள் நினைவுக்கு வந்தது. பரவாயில்லை. வீட்டை நன்றாக மெயின்டெயின் செய்து இருக்கிறார்கள் என்று நினைத்தபடியே குளியல் அறைக்குள் நுழைந்தாள்.

முகத்தை நன்றாக ஃபேஸ் வாஷ் போட்டுக் கழுவினாள்.

குளியல் அறையினுள் இருந்த ஷவர், பாத் - டப், மெல்லிய திரைச்சீலை இவை எல்லாமே ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலை அவளுக்கு நினைவூட்டியது.



முழு நீளக் கண்ணாடியில் பார்த்தபொழுது ஏனோ தான் அந்த இடத்திற்கு ஒட்டாத, பொருந்தாத ஒரு பொருள் போல் தோன்றியது அவளுக்கு.

நான் இங்கே வந்து இருப்பது ஒரு பார்ட்டிக்கு. அது முடிந்தவுடன் நான் இங்கிருந்து கிளம்பிப் போகப் போறேன்.

அதற்குப் பின்பு எனக்கும் இந்த வீட்டிற்கும் சம்பந்தம் ஏதும் இல்லை. அதனால் நான் இப்படி சம்பந்தமில்லாத ஒரு பொருள் போல் இருப்பது தான் நல்லது என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள்.

அறையின் ஜன்னலைத் திறந்து வெளியே இருந்த காட்சிகளில் மனதைச் செலுத்தினாள் அவள்.

"மிதுலா... டின்னர் ரெடி. வர்றியா..." என்று சச்சித் கதவுக்கு வெளியே இருந்து குரல் கொடுத்தான்.

"ஓ... இதோ வரேன்..."

"ஸாரி மிதுலா. உன்னை டிஸ்டர்ப் செய்திட்டேனா?"

"நோ... சும்மாதான் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தேன்."

"ம்... கிட்ஸ் வில் டு தட். புதிதாக ஏதாவது ஒரு இடத்திற்குப் போனால் அந்த இடத்தை ஆச்சரியமாகப் பார்ப்பார்கள்.

நோ வொண்டர்... யூ பிஹேவ் லைக் தட்..."

"ஐயாம் நாட் எ கிட்..."

"சில விஷயங்களில் நீ 'கிட்' இல்லைதான்."

அவன் சொன்னதைக் கேட்டு அவள் முகம் சிவந்தது

"போகலாமா..."

"ம்... ஐயாம் ரெடி."

அவனைப் பின் தொடர்ந்தாள் அவள். தலைக்கு மேல் தொங்கிய சர விளக்குகளைப் பார்வை இட்டபடியே வந்தாள் அவள்.

"வா... மிதுலா. ஸிட் டவுன். என் பக்கத்தில் உட்கார்." என்றார் பிரகாஷ்.

"தேங்க்ஸ் அங்கிள்!" என்றவள், அவர் அருகில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.

"இன்னிக்கு ஸ்பெஷல் டின்னரா அப்பா?"

"யெஸ்... வீ ஹாவ் எ ஸ்பெஷல் கேர்ல். எ பியூட்டி புல் யங் கேர்ல்..."

"அப்பா... நான் சொல்ல வேண்டிய டயலாக்கை எல்லாம் நீங்க ஏன் சொல்றீங்கன்னு எனக்குப் புரியலை..."

"சச்சித்! யூ கேன் ஸம்திங் மோர்..." என்று அவனைப் பார்த்துக் குறும்பாகக் கண் அடித்தார் பிரகாஷ்.

அதைப் பார்த்த மிதுலாவின் கன்னத்தில் செம்மை படர்ந்தது. சே... இது என்ன அப்பாவும் பிள்ளையும் இப்படி எல்லாம் பேசறாங்க என்று தவித்தாள் அவள்.

"சச்சித்! மிதுலா... எப்படி வெட்கப்படறா பார்..."

அதைக் கேட்டு அவள் தலை குனிந்தாள்.



"அங்கிள், ப்ளீஸ்..."

"அப்பா! நீங்க சொல்றதால ஷி இஸ் கொயட். இதே நான் சொல்லி இருந்தா அவ்வளவுதான்.

அவ ஒரு தடவை கோபத்தால என்னை ஒரு அறை விட்டா பாருங்க... காட்!"

"ஏய், நீ சொல்லவே இல்லையே... என்னடா அது?"

"சச்சித்! ப்ளீஸ்..." என்று மேலே தொடர முடியாமல் அவள் கண்கள் கலங்கின. உதடு துடித்தது.

"மிதுலா... டேக் இட் ஈஸி. நானும் சச்சித்தும் அப்பா பிள்ளை மாதிரி பழகறது இல்லை.

சச்சித்தின் அம்மா அவன் பத்து வயதாக இருக்கும் பொழுது உடல் நிலை சரியில்லாமல் இறந்து விட்டாள்.

அன்றிலிருந்து சச்சித்திற்கு நான்தான் அம்மா. நான் தான் அப்பா. அவனை அம்மாவின் அன்பிற்காக ஏங்கவிடாமல் நான் வளர்க்க விரும்பினேன்.

அதனால் தான் இந்த மாதிரி... கூலாக, கேஷுவலாக எப்பொழுதும் இருப்போம். சச்சித் என்னிடம் எதையும் மறைத்ததில்லை..."

அங்கே ஒரு மௌனம் சட்டெனப் பரவியது. தன்னால் அங்கே ஒரு இறுக்கம் சூழ்ந்து கொண்டது போல் உணர்ந்தாள் மிதுலா.

"ஐ யாம் ஸாரி அங்கிள். நான் உங்களைப் பழசை எல்லாம் நினைத்துப் பார்க்க வைத்துவிட்டேன்."

"கமான் மிதுலா... டோண்ட் பீல் பேட். சாப்பிடு."

வட இந்திய முறைப்படி தயார் செய்து இருந்த உணவை ரசித்து சாப்பிட்டாள் அவள்.

"தேங்க்ஸ் அங்கிள். ரொம்ப நாள் கழித்து ரிலாக்ஸ்டாகச் சாப்பிடுகிறேன்..."

"நான்தான் உனக்கு தேங்க்ஸ் சொல்லணும். நீ வந்த பிறகு ஐ ஃபீல் வெரி யங் அண்ட் எனெர்ஜெடிக்..."

"அப்பா... போதும். நீங்க தூங்கணும்... குட் நைட்..."

## 15

உன்னைக்
காணத்
தான்
வெண்ணிலா
தினம்
வானில்
பவனி
வருகிறதோ?
உன்னைத்
தொட்டுத்
தீண்டவே
கடல்
அலைகள்
ஆர்வமாகக்
கரைக்கு
வருகிறதோ?



சொல்லிவிட்டாயா நீ?
.....
என் உத்தரவு இன்றி
நீ எதுவும்
செய்ய மாட்டாய் என்று...

**அ**டுத்த நாள் காலை ஏதோ பறவைகளின் சப்தம் கேட்க, கண் விழித்தாள் மிதுலா.

அந்த நுரை மெத்தையில் இன்னும் கொஞ்சம் நேரம் படுத்துத் தூங்க மனம் ஏங்கியது. தன்னைச் சமாளித்துக் கொண்டு படுக்கையில் இருந்து எழுந்தாள் அவள்.

இன்று காலையில் ஒன்பது மணிக்குத்தான் பர்த்டே பார்ட்டி. குளித்துவிட்டு மெதுவாகத் தயாராகலாம் என நினைத்தபடியே குளியல் அறையினுள் சென்றாள்.

அலுப்புத் தீர வெந்நீரில் நன்றாகக் குளித்தாள். குளித்துவிட்டு ஒரு டவலைச் சுற்றிக் கொண்டு வெளியே வந்தாள் அவள்.

கட்டிலில் அந்த உடை. சச்சித் அவளுக்கு கொரியர் மூலம் அனுப்பிய உடை அழகாக மடித்து வைக்கப்பட்டு இருந்ததைப் பார்த்துத் திகைத்தாள்.

ஏதோ தோன்ற, தன்னுடன் எடுத்து வந்த பையை இருக்கிறதா என்று கப்போர்டைப் பார்த்தாள். அவள் யூகித்தபடியே அவள் பை அங்கு இல்லை.

அவளுள் கோபம் புகை போல் படர்ந்தது. சே... இது சச்சித்தோட வேலைதான். என்ன திமிர்! என்ன தைரியம்!

என் அறைக்குள் வந்து என் கைப்பையை எடுத்துக் கொண்டு போவதற்கு... காட்! இட் இஸ் பெர்ஸனல் டு மீ.

இந்த உடையை நான் அணிந்து கொண்டு வருவேன் என்று எதிர்பார்க்கிறானா. நோ வே! என்னால் முடியாது என்று கோபமாக அறையை விட்டு வெளியேறினாள்.

அவள் அறைக்கு வெளியே நடந்து போய்க் கொண்டிருந்த சச்சித்தின் வழியை மறித்து நின்றாள் அவள்.

"ஹாய்... மிதுலா! குட் மார்னிங்."

"ஏன் இப்படி இன்டீஸெண்டாக வேலை செய்யறீங்க?"

"வாட் டு யூ மீன்?"

"நீங்க செஞ்ச வேலையைத்தான் சொல்றேன்!" என்று சீறினாள் அவள்.

"மிதுலா... இங்க கத்தாதே. வா உள்ளே!" என்று அவள் கையைப் பற்றி எதிரில் இருந்த அறையினுள் அவளை இழுத்துச் சென்றான்.

"இப்ப சொல். நான் என்ன இன்டீஸெண்டாகச் செய்தேன்."

"வாட் ஹாவ் யூ டன் வித் மை பேக். அதில் என் துணிகள் இருந்தது."

"எந்த பேக்...? எனக்குத் தெரியாது."

"பொய். சே... இப்படிப் பொய் சொல்ல உங்களுக்கு வெட்கமாக இல்லை."

"என்ன சொல்கிறாய் நீ? எனக்குப் புரியவில்லை."



"என் அறையின் கட்டிலில் உடையை வைத்தது நீங்கள். அந்த உடையை நீங்கள்தானே கொரியரில் அனுப்பினீர்கள். நான் அதைப் பெற்றுக் கொள்ளவில்லை. அதனால் இங்கே இந்த மாதிரி செய்கிறீர்கள்.

நீங்கள் என் பேக்கைக் கொடுங்கள். இல்லை யென்றால்... நான்..." என்று அவள் முடிக்கும் முன்பு அவன் குறுக்கிட்டான்.

"என்ன செய்வாய் நீ?"

"நான் கத்துவேன்."

"யூ ஆர் எ கிட். நீ இப்பொழுது கத்தினால் உன்னைத்தான் தப்பாக நினைப்பார் என் அப்பா."

"ஏ... ஏன்?"

அவன் கண்கள் தன் மீது சுவாரசியமாகப் படிந்திருப்பதை அவள் அப்பொழுதுதான் கவனித்தாள்.

குனிந்து தன்னைப் பார்த்தவள் திடுக்கிட்டாள். வெறும் பாத் டவலைச் சுற்றிக் கொண்டு தான் நிற்பது அவளுக்கு அப்பொழுதுதான் புரிந்தது.

அவள் முகம் அவமானத்தால் சிவந்தது. இதைக் கூடக் கவனிக்காமல் உடனே ஓடி வந்து விட்டோமே என்று தன் மேலேயே கோபம் வந்தது அவளுக்கு.

அவள் உடலின் சக்தி எல்லாம் போனது போல் அவமானமாக இருந்தது அவளுக்கு.

"என்ன மிதுலா... கத்தப் போறேன்னு சொன்ன...!"

அவள் கைகள் அனிச்சையாக டவலை இறுக்கப் பிடித்துக் கொண்டன. அவன் அறையிலிருந்து வெளியேறத் துடித்தாள் அவள்.

ஆனால் கால்கள் இரண்டும் பலம் இழந்து போய் அசைவின்றி அங்கேயே இருந்தன.

"என்... டிரெஸ் ப்ளீஸ்!" என்று முனகினாள் அவள்.

"நீ ரொம்ப அழகாயிருக்கிறாய் மிதுலா! உன் முகத்தில் செல்லமாக ஒட்டியிருக்கும் இந்த நுரையாக நான் இருக்கக் கூடாதா?" என்று சொல்லியபடியே தன் ஆள்காட்டி விரலால் அவள் நெற்றியை வருடினான் அவன்.

தன் உடலில் மின்சாரம் பாய்ந்தது போல் உணர்ந்தாள் அவள். மூச்சு விடவே சிரமமாக இருந்தது அவளுக்கு.

கால்கள் தள்ளாடின அவளுக்கு. அவள் உதடு துடித்தது. அதற்கு மேல் தன்னை அடக்கிக் கொள்ள முடியாத சச்சித் அவளை இழுத்து அணைத்தான்.

அவன் உதடுகள் அவள் முகம் முழுவதும் கோலமிட்டன. ஈரமான அந்த அணைப்பில் தன்னை இழந்தாள் அவள்.

"மிது... மை டியர் கேர்ல்..." என்று அவன் உதடுகள் அவள் காதோரம் கிசுகிசுத்தன.

அவன் கைகள் எல்லை மீறத் தொடங்கியதும் அவள் புலன்கள் விழிப்படையத் தொடங்கின.

"லீவ் மி!" என்று அவனைத் தள்ளி விட்டுவிட்டு அங்கிருந்து வேகமாக வெளியேறினாள் அவள்.



தன் அறைக்குள் வந்தவளால் அதிர்ச்சியிலிருந்து மீள முடியவில்லை. அவள் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது.

தன் மேலேயே அவளுக்குக் கோபம் வந்தது. சே.... நான் ஏன் அப்படி நடந்து கொண்டேன்? அவன் அண்மையில் நான் என்னை இழந்தது உண்மைதானே!

அவன் என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருப்பான். இவ்வளவு மோசமாக நான் நடந்து கொண்டேனே என நினைத்து நினைத்து அழுதாள்.

கட்டிலில் இருந்த உடை அவளைப் பார்த்துக் கேலி செய்வது போல் தோன்றியது அவளுக்கு.

தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அந்த உடையை எடுத்துப் பார்த்தாள் அவள். அழகான உடைதான். கண்ணாடி வேலைப்பாடு. எம்பிராய்டரி என்று பார்க்க ரொம்ப அழகாக இருந்தது.

ஆமாம்... அவனே பார்த்துப் பார்த்துத் தேர்வு செய்தது தாச்சே... அதனால் நன்றாகத்தான் இருக்கும் என்று நினைத்துப் பெருமூச்சு விட்டாள்.

அந்த உடையை அணிவதைத் தவிர வேறு வழி இல்லை என்று நினைத்தபடியே அதை அணிந்து கொண்டாள்.

அங்கிருந்த கண்ணாடியில் பார்த்த பொழுது, தான் இவ்வளவு அழகா என்று அவளுக்குத் தோன்றியது.

அறைக் கதவு தட்டப்பட்டது. சச்சித்தாகத்தான் இருக்கும் என்று நினைத்தாள் அவள். ஏனோ அவனைப் பார்க்க

வேண்டும் என்று நினைக்கும் பொழுதே அவளுக்குக் கூச்சமாக இருந்தது.

சற்று முன் நடந்ததை நினைக்கும் பொழுது அவளுக்கு அவமானமும், கோபமும், புரியாத வலியும் ஒரு கலவையாகத் தோன்றியது.

அறைக் கதவு மீண்டும் தட்டப்பட்டது. தன்னைச் சமாளித்துக் கொண்டு கதவைத் திறந்தாள் அவள்.

"அங்கிள், நீங்களா...!"

"யெஸ். நான்தான் மிதுலா. நீ ரெடியா? உன்னை அழைத்துக் கொண்டு போகலாம் என்று வந்தேன்."

"பட்... நானே வந்திருப்பேன். எதுக்கு நீங்க... பை தி வே ஐ ஃபார்காட் டு விஷ் யூ.

ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் தி டே அங்கிள்."

"தேங்க்ஸ் மிதுலா. ஆசிரமத்தில் இருந்து குழந்தைகள் வந்திருக்காங்க. இதெல்லாம் சச்சித் ஏற்பாடுதான்.

அவன் வருஷா வருஷம் இந்த மாதிரி குழந்தைகளை என்னுடைய பிறந்த நாளின் பொழுது வீட்டிற்கு அழைத்து வருவான்.

பின்பு எல்லாரும் சாப்பிட்ட பின்பு, அவர்கள் ஒன் டே டூர் அழைத்துப் போவதற்கு ஸ்பான்ஸர் செய்வான். அவன் தனியாகப் பிறந்ததாலோ என்னவோ, குழந்தைகள் மேல் அவனுக்கு எப்பவும் ஆசை."

"ஓ... அப்படியா! நல்ல விஷயம்தான் அங்கிள்."

"அப்புறம் மிதுலா... இந்த டிரெஸ் சச்சித் செலக்ட் செய்ததுதானே?"



"ஆ... ஆமாம் அங்கிள்."

"இட்ஸ் பெர்ஃபெக்ட் உனக்கு ரொம்பப் பொருத்தமாக இருக்கிறது மிதுலா.

இட்ஸ் வெரி நைஸ். பரவாயில்லை... சச்சித்திற்கு இதெல்லாம் தெரிகிறதே..."

அவள் முகத்தில் செம்மை படர்ந்தது. சச்சித் அவன் அப்பாவிடம் எல்லாவற்றையும் சொல்லி இருப்பானோ... அதை நினைக்கும் பொழுதே அவளின் மனதில் கூச்சம் படர்ந்தது.

வீட்டிற்கு வெளியே தோட்டத்தில் ஷாமியானா போட்டிருந்தது. அங்கே குழந்தைகள் எல்லாரும் உற்சாகமாக விளையாடிக் கொண்டிருந்தனர்.

அவர்களுக்குப் பிடித்த பாடல் அங்கு ஒலித்துக் கொண்டிருந்தது.

"ஹலோ மிதுலா! ஹவ் ஆர் யூ?" என்று மாதவி மேடமின் குரல் அருகே கேட்க வியந்தாள் அவள்.

"மேடம்! வாட் எ சர்ப்ரைஸ். எப்படி இருக்கீங்க? உங்களைப் பார்த்ததில் ஐயாம் வெரி ஹேப்பி."

"யெஸ் மிதுலா. எனக்கும் உன்னைப் பார்த்ததில் ரொம்ப சந்தோஷம்."

"ம்... எங்காவது வேலைக்குப் போகிறீர்களா மேடம்?"

"யெஸ்... சொல்ல மறந்து விட்டேனே... குழந்தைகளுக்கான ஒரு பப்ளிகேஷன்ஸில் நான் இப்பொழுது வேலை பார்க்கிறேன்.

இப்பொழுது ஒரு என்ஸைக்கிளோபீடியா தயாரிப்பதில் பிஸியாக இருக்கிறேன்.

இன்ஃபேக்ட் இந்த வேலை கிடைத்ததற்கே காரணம் சச்சித். அவர் ரிகமெண்டேஷனில்தான் எனக்கு இந்த வேலை கிடைத்தது."

அதைக் கேட்டவுடன் அவள் மனதில் சந்தோஷம் பரவியது. சச்சித்தோடு தான் 'மாதவி மேடமின் வேலை விஷயமாக'ச் சண்டை பிடித்தது நினைவுக்கு வந்தது.

ஆனால் சச்சித் மாதவி மேடமிற்கு நல்லது செய்திருக்கிறான். அவனே அவர்களுக்கு நல்ல வேலை வாங்கிக் கொடுத்திருக்கிறான்.

நான் அவனைத் தப்பாகப் புரிந்து கொண்டேனா? சச்சித்திற்கு இன்னொரு முகம் இருக்கிறதா? குழந்தைகளை நேசிக்கும் முகம். மாதவி மேடத்திற்குப் பிறர் அறியா வண்ணம் உதவி செய்யும் முகம்...

யோசனையில் ஆழ்ந்திருந்தவளைக் கலைத்தது சச்சித்தின் குரல்.

"ஹாய் மிதுலா... என்ன யோசனை?"

அவன் கண்களைச் சந்திக்கும் திறன் இன்றி அவள் தலை குனிந்தாள்.

"ஏய்... என்ன... இன்னும் கோபமா என் மேல்? நீ இந்த டிரெஸ்ஸில் ரொம்ப அழகா இருக்க.

உன்னை இந்த டிரெஸ் போட வைப்பதற்கு எனக்கு வேறு வழி இல்லை. அதனால்தான் உன் பையை எடுக்க வேண்டிய நிர்பந்தம். ஐ யாம் ஸாரி."



அவன் நினைத்ததை நடத்தி முடித்துக் கொள்பவன் என்பது அவளுக்குப் புரிந்தது.

ஏதும் பதில் சொல்லாமல் அங்கிருந்து நகர்ந்தாள் அவள்.

# 16

உன்
வாழ்வின்
சந்தோஷமான
தருணங்களில்
நான்
உன்னுடன்
இருந்து
இருக்கிறேன்!
ஆனால்
இப்பொழுது
உன்
கண்களில்
இருந்து
வழியும்
கண்ணீரைத்
துடைக்க
முடியாமல்
என் கைகளைக்
கட்டிப் போட்டு விட்டது
காலம்...

பார்ட்டி நன்றாக நடந்து முடிந்தது. அங்கிருந்த குழந்தைகள் எல்லோரும் ரொம்ப நன்றாக என்ஜாய் செய்தனர்.

எல்லாருக்கும் 'பேக்ட் ஃபுட்' என்பதால் குழந்தைகளுக்கும் சாப்பிட எளிதாக இருந்தது.

குழந்தைகளுக்குத் தேவையான ஐஸ்க்ரீமை ஸெர்வ் செய்தபடி இருந்தாள் மிதுலா.

சச்சித் அவளிடம் பேச முயற்சி செய்தான். அது அவளுக்குப் புரிந்தது. ஆனால் அவள் அவனிடம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

அவள் வாங்கி இருந்த ஒரு டி-ஷர்ட்டை அங்கிளிடம் கடைசியில் அவள் கொடுத்தாள்.

"வா... தேங்க்ஸ் மிதுலா. என்னோட ஃபேவரைட் கலர் ப்ளூ. ரொம்ப நல்லா இருக்கு. நானே ரொம்ப நாளா இந்தக் கலரில் டி-ஷர்ட் வாங்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

தேங்க்ஸ் எ லாட் மிதுலா!" என்று சிறு குழந்தை போல் குதூகலித்தார் பிரகாஷ்.

"அப்பா... உங்களைப் பார்த்தால் எனக்குப் பொறாமையாக இருக்கிறது. மிதுலா இதுவரை எனக்கு எதுவும் வாங்கிக் கொடுத்ததில்லை."

"யூ நீட் ஸம் லக் மை டியர் பாய்! என்ன மிதுலா. நான் சொல்றது சரிதானே?"

அவள் ஏதும் சொல்லாமல் மௌனமாக இருந்தாள். மாதவி மேடம் தனியாக இருப்பதை அவள் கவனித்தாள்.



அவர்களுடன் பேசலாம் என்று முடிவு செய்து அங்கே சென்றாள் அவள்.

அவளைப் பின் தொடர்ந்தான் சச்சித். சச்சித்தைப் பின் தொடர்ந்தார் அவன் அப்பா.

"மிதுலா! நீ பத்திரிகைக்குக் கட்டுரை எல்லாம் எழுதுவாய்தானே! போன தடவை நீ எழுதிய ஒன்றை சச்சித் காட்டினான். ரொம்ப நன்றாக இருந்தது.

பெண்கள் சாதிக்க வேண்டும் என்று நினைத்தாலும் அதற்கு என்னென்ன தடைகள் உள்ளன என்று அழகாக விளக்கியிருந்தாய்."

"தேங்க்ஸ் அங்கிள். நிறையப் பேருக்கு அந்தக் கட்டுரை பிடிக்கவில்லை. குறிப்பாக ஆண்களுக்கு!"

"ஓ... கமான் மிதுலா. சச்சித் அதையும் சொன்னான். இன்ஃபேக்ட் அவனையே நீ கன்வின்ஸ் செய்ய வேண்டி இருந்தது போல...

அந்தக் கட்டுரையைப் பிரசுரம் செய்ய சச்சித் சில நேரம் பிடிவாதம் பிடிப்பான்."

"அப்பா... என்னைப் பற்றி ஏதாவது நல்லதாகச் சொல்வீர்கள் என்று பார்த்தால்..."

அதைக் கேட்டு மாதவி சிரித்தாள். மிதுலாவின் இதழ்களிலும் புன்னகை படர்ந்தது. சச்சித்தும் அவர்களின் சிரிப்பில் இணைந்து கொண்டான்.

"மிதுலா! உனக்குத்தான் நான் நன்றி சொல்லணும். சச்சித் இந்த மாதிரி பேசிச் சிரித்து ரிலாக்ஸ்டாக இருந்து ரொம்ப நாள் ஆகிவிட்டது.

அவன் வேலை வேலை என்று எப்பொழுதும் அதிலேயே பிஸியாக இருந்து கொண்டே இருப்பான்."

"ம்... ஆமாம் அங்கிள்!" என்று முனகினாள் மிதுலா.

"சரி... மிதுலா. நீ போய்க் கொஞ்ச நேரம் தூங்கி ரெஸ்ட் எடு."

அங்கிருந்து போனால் போதும் என்று வேகமாக வெளியேறினாள் அவள். அவள் அறையினுள் நுழைந்த வுடன் அவள் கண்ணில் பட்டது அவள் கைப்பைதான்.

என்ன இருந்தாலும் அவன் செய்தது ரொம்ப அதிகப்படிதான் என்று அவனை மனதில் திட்டித் தீர்த்தாள் அவள்.

பொழுது போகாததால் தொலைக்காட்சியை 'ஆன்' செய்தாள். எந்த ப்ரோக்ராமிலும் அவள் மனம் பதிய வில்லை.

கட்டிலில் படுத்தவள் தன்னை மீறிக் கண் அயர்ந் தாள். நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தவளை எழுப்பியது கைபேசியின் ஓசை.

"சொல்லு அருண்... என்னடா?"

"ம்... நத்திங் அக்கா. நீ எப்படி இருக்கிறாய்? நீ நன்றாக என்ஜாய் செய்கிறாய் என்று நினைக்கிறேன்."

"ம்... யெஸ் அருண். இட்ஸ் எ குட் பிரேக் ஃபார் மீ."

"அக்கா... நல்லது. நீயும் பாவம்... எங்கேயும் போவதில்லை. அட்லீஸ்ட் இந்த மாதிரி எங்காவது போய் என்ஜாய் செய்தால்தான் உண்டு!" என்றான் அருண் கரிசனமாக.

"சரி... அருண். நான் அப்புறம் பேசுகிறேன். நன்றாகத் தூங்கி விட்டேன். இப்பொழுதுதான் கண் விழித்தேன்."

"ஓ... சரி அக்கா. டேக் கேர்."

கைக்கடிகாரத்தைப் பார்த்தாள் மிதுலா. மணி நான்கு என்று உறுதி செய்தது அது.

காட்! இவ்வளவு நேரம் தூங்கி விட்டேனே... சே... சே...! என்று தன்னையே கடிந்து கொண்டாள் அவள்.

அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே தோட்டத்துப் பக்கம் சென்றாள். மரங்களில் இருந்து எழுந்த காற்று ஜில்லென்று முகத்தில் பட்டது. மனதிற்கு இதமாக இருந்தது.

தோட்டத்தில் இருந்த வண்ண வண்ணப் பூக்களை சுவாரசியமாகப் பார்த்தபடியே சென்றாள் அவள். நீச்சல் குளம் ஒன்று அங்கே இருந்தது.

அதன் அருகே உட்காருவதற்குப் புல்வெளி இருந்தது. வேப்பமரக் காற்று சில்லென்று வீசியது புத்துணர்ச்சியைத் தந்தது.

புல்வெளியில் உட்கார்ந்தபடியே நீச்சல் குளத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

"ஹாய் மிதுலா!" என்று நீச்சல் குளத்தில் இருந்து வெளிவந்தான் சச்சித்.

நீர்த்துளிகள் தலையில் இருந்து சொட்ட, நீச்சல் உடையில் வெளியேறுபவனை விழிகள் அகலப் பார்த்தாள் மிதுலா.

"ஹலோ!" என்று அவள் முன்னே சிட்டிகை போட்டான் சச்சித்.

"என்ன யோசனை?"

"இ... இல்லை. நீங்கள் தண்ணீரில் இருந்தது எனக்குத் தெரியவில்லை."

"ம்... அது மேஜிக் மை கேர்ல். இங்கே ஸ்விம்மிங்பூலில் ஸ்பெஷல் கோட்டிங் ஒன்று பூசப்பட்டு இருக்கிறது. அதனால் வெளியே இருந்து பார்த்தால் ஏதும் தெரியாது."

"ஓ... அப்படியா!"

"ஏன்... உனக்கு என்னை நீந்தும் பொழுது பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறதா?" என்றான் கண்களில் குறும்பு மின்ன.

அவள் முகம் அவமானத்தால் சிவந்தது. அங்கிருந்து எழுந்திருக்க முயன்றாள் அவள். ஆனால் சச்சித் அவள் கையைப் பற்றினான்.

"கேள்வி கேட்டால் பதில் சொல்ல வேண்டும் மிதுலா"

"அர்த்தமில்லாத கேள்விக்கெல்லாம் நான் பதில் சொல்வது இல்லை. கையை விடுங்கள்."

"முடியாது... காலையில் விட்டதைத் தொடரப் போகிறேன்."

அவன் கண்களில் தெரிந்த தீவிரமும், பளபளப்பும் அவளுக்குப் பயத்தை ஊட்டியது.

"இந்த மாதிரி நடந்து கொள்ள உங்களுக்கு வெட்கமாக இல்லை..."

"நோ வே. ஐயாம் என்ஜாயிங் இட்!" என்று அவள் முகத்தைக் கைகளால் ஏந்தினான்.

தன் பலத்தை எல்லாம் திரட்டி அவனைத் தள்ளினாள் அவள். அவன் நீச்சல் குளத்தில் விழும் சத்தம் கேட்டது.

வேகமாக அங்கிருந்து தன் அறைக்குள் சென்றாள் அவள். இனி இங்கிருக்க முடியாது. இருக்கக் கூடாது என்று முடிவு செய்தாள் அவள்.

தன் கைப்பையை எடுத்துக் கொண்டாள். அதில் பணம் இருக்கிறதா என்று சரி பார்த்தாள். பின்பு வீட்டை விட்டு வெளியேறினாள்.

அங்கிளிடம் கூடச் சொல்லவில்லையே என்று மனம் உறுத்தியது. கைப்பையில் இருந்து ஒரு பேப்பரை எடுத்து அதில் எழுதத் தொடங்கினாள்.

'அங்கிள்! அவசர வேலை இருப்பதால் நான் உடனே கிளம்ப வேண்டிய நிர்பந்தம்.

தேங்க்ஸ் ஃபார் எவ்ரிதிங். ஐ என்ஜாயிட் இட்!' என்று எழுதினாள்.

பின்பு அதை ஹாலில் இருந்த டீப்பாயில் வைத்து விட்டு அங்கிருந்து நடந்தாள்.

அங்கிருந்து பஸ் ஸ்டாண்டை நோக்கி வேகமாக நடந்தாள். அவள் மனதில் ஏனோ ஒரு வலி படர்ந்தது.

சச்சித் தன்னிடம் நடந்து கொண்ட முறையே அவள் மனதை அழுத்தியது. அவன் தன்னைப் பற்றிக் கேவலமாக நினைத்துக் கொண்டிருக்கிறான்.

அதனால்தான் இப்படிப் பேசுகிறான், இப்படி நடந்து கொள்கிறான் என்று நினைத்தபடியே பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தாள்.

உடனே அவள் வீட்டிற்குச் செல்ல வேண்டிய பஸ் வந்தது. அதில் ஏறி உட்கார்ந்த பின்பு அவள் மனதில் ஒரு நிம்மதி படர்ந்தது.

இந்த வேலையைத் தொடர முடியுமா என்று தெரியவில்லை. சச்சித் இப்பொழுது நடந்து கொள்வது போல் நடந்து கொண்டே இருந்தான் என்றால் என்னால் இந்த வேலையில் நிலைத்து இருக்க முடியாது.

சீக்கிரமாக ஒரு முடிவு எடுக்க வேண்டும். ரொம்ப நாள் இதை இழுக்க முடியாது என்று யோசித்தபடியே உட்கார்ந்திருந்தாள் அவள்.

இந்நேரம் சச்சித்திற்கும் அவன் அப்பாவிற்கும் தெரிந்திருக்கும்... நான் வீட்டை விட்டு வெளியே வந்தது.

அங்கிள் வேண்டுமானால் கஷ்டப்படுவார், பாவம்... பட் சச்சித்திற்குக் கோபம் இருக்கும். பட் ஐயாம் நாட் பாதர்ட் என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

சச்சித்திற்கு நினைத்ததை நடத்தி முடிக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டு. பத்திரிகையிலும் சரி... உடை விஷயத்திலும் சரி... தான் நினைத்தபடி நான் நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறான்.



ஆனால் நான் அப்படி இல்லை. அவனுக்கு நான் சவாலாக இருக்கிறேன். அவன் மேல் நான் ஈர்க்கப்பட வேண்டும் என்று அவன் நினைக்கிறான்.

அவன் கண்ணில் என்னைப் பார்க்கும் பொழுது தோன்றுவது ஆசை. அது நிலைக்காது. வாழ்நாள் முழுவதும்.

சே... நான் என்ன அசட்டுத்தனமாக நினைக்கிறேன். சச்சித் என்னை அந்த மாதிரி எண்ணத்தோடு அணுகவில்லை.

அவன் ஏற்கெனவே என்னிடம் ஏதேதோ பேசி இருக்கிறான். விக்ரம் பற்றி ஏதோ விசாரித்தானே... 'விக்ரம் உன்னுடன் தங்கியிருக்கிறானா?' என்றுதானே கேட்டான்.

அவன் மனதில் அந்த மாதிரி எண்ணங்கள்தான் இருக்கின்றன. அவனுக்கு நீனாவிடம் ஈர்ப்பு. அவள் இப்பொழுது மலேசியாவில் இருக்கிறாள்.

இல்லாவிட்டால் இந்த ஃபங்ஷனிற்கு வந்திருப்பாளே.... அன்று வெளியே சென்றபொழுது நீனாவோடு தானே ஃபோனில் பேசினான்.

ஏனோ ஒரு ஏமாற்றம் அவள் மனதை அழுத்தியது. சோர்வாகக் கண் மூடி உட்கார்ந்தாள் அவள்.

"மேடம்! இதுதான் டெர்மினஸ். இறங்கலையா?"

"ஓ... ஸாரி. ஏதோ யோசனை!" என்று சொல்லியபடியே பஸ்ஸிலிருந்து இறங்கினாள் அவள்.

எப்படியோ வீட்டை அடைந்தாள் அவள். கைபேசி சிணுங்கியது.

"சச்சித்..." என்று திரையில் தெரிந்தது. அதை கட் செய்தாள் அவள்.

அப்பொழுதுதான் பார்த்தாள். கைபேசியில் பத்து மிஸ்டு கால்ஸ். எல்லாமே சச்சித்திடமிருந்து.

"என்ன அக்கா! உடம்பு சரியில்லையா? யூ லுக் டயர்ட்!"

"ஒண்ணும் இல்லை அருண். ட்ராவல் செஞ்சது டயர்டா இருக்கு. தட்ஸ் ஆல்."

"ம்... சரி அக்கா. நீங்க ரெஸ்ட் எடுங்க."

வீட்டுத் தொலைபேசி ஒலி கேட்டது.

"அக்கா! என்னோட கடைசி செமஸ்டர் மார்க் லிஸ்ட் பார்த்தீங்களா?"

டெலிபோனின் ரிசீவரை எடுத்தவள் அருணுக்குப் பதில் சொன்னாள்.

"லிட்டில் டியர்! நீ இன்னும் மாறவே இல்லை. உன் கப்போர்டில் இருக்கிறது பார்."

"ஹலோ... மிதுலா ஸ்பீக்கிங்!" என்றாள் ரிசீவரைக் காதில் வைத்தபடியே.

மறுமுனையில் எந்தப் பதிலும் இல்லை. 'டொக்' என்று ரிசீவர் வைக்கும் சப்தம் கேட்டது அவளுக்கு.



# 17

ஒரு
குழந்தையின்
புன்னகையில்
உன் முகம்
எனக்குத்
தெரிகிறது...
புள்ளியாகத்
தெரியும்
நட்சத்திரக்
கூட்டத்தில்
உன் முகம்
எனக்குத்
தெரிகிறது...
என்னைக்
கொல்லாமல்
கொல்கிறாய்
நீ

அடுத்த நாள் காலை ஆஃபீஸுக்குப் போக வேண்டுமே என்ற ஒரு உணர்வு அவள் மனதை ஆக்கிரமித்தது.

கட்டிலில் குழந்தை போல் தூங்கும் தம்பி அருணைப் பார்த்தாள். இவனுக்காகவாவது நான் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும்.

வேறு வேலை கிடைக்கும் வரை நான் இதில் தொடர்ந்து இருக்க வேண்டும். வேறு வழி இல்லை என்று தீர்மானித்தாள் மிதுலா.

குளித்து விட்டு பிரேக்பாஸ்ட், லஞ்ச் எல்லாம் செய்து முடித்தாள். மனம் முழுவதும் சச்சித்தை எப்படி எதிர் கொள்வது என்று போராட்டமாக இருந்தது.

ஏனோ சுயபச்சாதாபத்தால் அவளுக்குக் கண்கள் கலங்கின. வாழ்க்கை என்பது ஏன் போராட்டமாகவே இருந்து வருகிறது.

அப்பா மாரடைப்பால் இறந்த பின்பு அவள் படிப்பை முடித்திருந்ததால், உடனே வேலைக்குப் போக வேண்டிய நிர்பந்தம்.

முதலில் அந்த அனுபவம் புதிதாக இருந்தது. கொஞ்சம் திகைப்பாக இருந்தது. பின்பு கொஞ்சம் கொஞ்சமாக அது பழகி விட்டது.

மாதவி மேடம் இருந்த வரை எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் சச்சித் வந்த பின்பு ஏனோ தேவையில்லாத பிரச்சினைகள்.

அவன் அப்பா நன்றாகப் பாந்தமாகப் பழகுகிறார். பட் இவன்... காட்! வாயிலிருந்து அமிலம் போல் அல்லவா வார்த்தைகள் விழுகின்றன.

என்னென்னவோ சொன்னானே என்னைப் பற்றி. காதல் அனுபவங்களை நான் ஏற்படுத்திக் கொள்கிறேன் என்பது போல் சொன்னானே...

சே... அவனைப் போல் என்னையும் நினைத்து விட்டான் போல... என்று மனம் குமைந்தாள்.

ஏதோ ஞாபகத்தில் சூடான பாத்திரத்தை அடுப்பில் இருந்து இடுக்கி இல்லாமல் நேரடியாகக் கையால் எடுக்க முயன்றாள்.



சுள்ளென்று சூடு கைவிரல்களில் பரவியது. தன்னை மீறி 'அம்மா' என்று அலறினாள்.

"அக்கா... என்ன ஆச்சு?" என்று பதறினான் அருண். அவன் பேச்சு குழறலாக ஒலித்தது.

"அருண்... ஒண்ணும் இல்லை. கையில் சூடு பட்டிடுச்சு... நீ அங்கேயே இரு."

பாவம் அருண்! பதறினால் அவன் வாய் குழறும். அவன் கால் சரியில்லாததால்தான் இந்த மாதிரி வாய் குழறல் ஏற்படுகிறது என்று மருத்துவர்கள் சொல்லி விட்டார்கள்.

அதனாலேயே அவனைப் பதட்டப்படாத சூழ்நிலையில் வைத்துப் பாதுகாப்பாய் வளர்த்து வந்தார்கள்.

இன்று தன்னால் தம்பி பதட்டப்படும்படி ஆகிவிட்டதே என்று மனம் வருந்தினாள் அவள். கை விரல்களைப் பார்த்தாள்.

சிவந்து, கன்றிப் போய் இருந்தன. தோல் மென்மையாக மாறி இருந்தது. ஏன் இப்படி அஜாக்கிரதையாக இருந்தோம் என்று தன்னையே கடிந்து கொண்டாள் மிதுனா.

"அக்கா... ரொம்ப வலிக்குதா? ஐஸ் க்யூப்ஸ் எடுத்துக் கொண்டு வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு, காலை விந்தியபடி வேக வேகமாக ஐஸ் கட்டிகளை ஃப்ரிட்ஜிலிருந்து எடுத்து வந்தான் அருண்.

"அக்கா... இருங்க. நான் தடவி விடறேன் கையை நீட்டுங்க."

ஐஸ், கை எரிச்சலுக்கு இதமாக இருந்தது.

"அக்கா... இன்னிக்கு எப்படி ஆஃபீஸில வேலை பார்ப்பீங்க... கை வலிக்காதா?"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை அருண். நேரம் ஆக ஆகச் சரியாகிவிடும்!" என்றாள் மிதுலா.

அவன் முன்னே வலியைக் காட்டக்கூடாது என்ற எண்ணத்தில் சொன்னாள் மிதுலா. ஆனால் கை எரிச்சல் அதிகமாகத்தான் இருந்தது.

சமையல் எல்லாம் முடிந்த பின்பு ஸ்கூட்டியில் ஆஃபீஸிற்குக் கிளம்பினாள் அவள். ஸ்கூட்டியின் ஹாண்டில் பாரைப் பற்றிய பொழுது வலி அதிகரிப்பது அவளுக்குத் தெரிந்தது.

பல்லைக் கடித்தபடி ஒரு வழியாகத் தன்னைச் சமாளித்துக் கொண்டு ஆஃபீஸை அடைந்தாள் அவள்.

"ஹாய் மிதுலா... ஹவ் ஆர் யூ? பாஸ் வீட்டு ஃபங்ஷன் எப்படி இருந்தது?" என்று உற்சாகமாக வரவேற்றாள் ஹெலன்.

"ம்... இட் வாஸ் நைஸ் ஹெலன். அப்புறம் உன்னுடைய வீக் எண்ட் எப்படிப் போனது?"

"நன்றாக இருந்தது. நான் உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும் மிதுலா. எப்படி ஆரம்பிப்பது என்று தெரியவில்லை."

"என்ன ஹெலன், பீடிகை பலமா இருக்கு. கம் அவுட் வாட் இஸ் தி மேட்டர்?"



"ம்... வந்து... வந்து..."

"ஏய் என்ன இது? இப்படி வெட்கப்படற. இஸ் ஸம்திங் கோயிங் ஆன்? அதர் யூ இன் லவ்."

"யெஸ் மிதுலா."

"வாவ்... யார் அது ஹெலன்? ஹி இஸ் எ லக்கி மேன்."

"ம்... உனக்குத் தெரிந்தவர்தான்."

"ஏய்... ஒழுங்கா பெயரைச் சொல். யார் அது?"

"விக்ரம்..."

"வாவ்... நான் இதை எதிர்பார்க்கவே இல்லை ஹெலன். இட்ஸ் எ பிளஸெண்ட் சர்ப்ரைஸ். எப்படி ஹெலன் ஆரம்பிச்சது உங்க லவ்?"

"அவரை முதல் தடவை பார்த்தப்பவேயே என் மனதில் ஏதோ ஒரு புதிய உணர்வு மிதுலா. 'மிஸ்டர் ஹாண்ட்ஸம்' அப்படின்னு அதனால்தான் பெயர் வைத்தேன் நான் அவருக்கு. அப்புறம் உன்னைப் பார்க்க வரும்பொழுது பேச ஆரம்பித்தோம். நேற்றுதான் விக்ரம் என்னைப் ப்ரபோஸ் செய்தார். நானும் சரி என்று சொல்லி விட்டேன். ஐ ஜஸ்ட் கான்ட் பிலீவ் இட்."

"எனக்கும் அப்படித்தான் இருக்கிறது ஹெலன். விக்ரம் என்னிடம் இதைப் பற்றிப் பேசவே இல்லையே."

"நான்தான் பேச வேண்டாம் என்று சொல்லி இருந்தேன் அவரிடம். நான்தான் முதலில் உன்னிடம் சொல்வேன் என்று விக்ரமிடம் சண்டை பிடித்தேன்."

"ம்... தட்ஸ் நைஸ். இப்பவே உன் பேச்சை விக்ரம் கேட்க ஆரம்பித்து விட்டாரா?" என்று சிரித்தாள் மிதுலா.

ஹெலனும் அவள் சிரிப்பில் இணைந்து கொண்டாள். மிதுலா சச்சித் தன் அறைக்குள் நுழைவதை அப்பொழுது தான் கவனித்தாள்.

அவள் சிரிப்பு சட்டென உறைந்தது. ஹெலனுக்கும் சச்சித் வருவது தெரிந்தது.

"மிதுலா... நான் கிளம்பறேன். குட்மார்னிங் சச்சித்!" என்று சொல்லியபடியே அவள் அறையிலிருந்து கிளம்பினாள் ஹெலன்.

"குட்மார்னிங் ஹெலன்!" என்றான் சச்சித்தும் பதிலுக்கு.

"ஹாய் மிதுலா... குட் மார்னிங்."

"குட் மார்னிங்."

எவ்வளவுதான் மறக்க முயன்றாலும் அவன் வீட்டில் நடந்த நிகழ்ச்சிகள் அவள் மனதில் மீண்டும் படம் போல் விரிந்தன.

"நான் உனக்கு ஒரு ஈமெயில் அனுப்பி இருந்தேனே. பார்த்தியா?"

"இ... இல்லை. ஒரு செகண்ட். இப்பொழுது பார்க்கிறேன்."

"ம்... எதையும் நீ கவனித்துச் செய்ய மாட்டாயா? இல்லை பாதியிலேயே விட்டுவிட்டு வந்து விடுவாய். இல்லை கவனிக்க மாட்டாய்.



இதுதான் உன்னுடைய ட்ரேட் மார்க். என்ன நான் சொல்வது சரிதானே!"

அவள் பற்களால் கீழ் உதட்டை அழுத்தமாகக் கடித்தாள். கோபத்தை எல்லாம் அப்படிச் செய்வதன் மூலம் அடக்கினாள் மிதுலா.

"கங்கிராட்ஸ் மிதுலா!" என்றான் சம்பந்தமில்லாமல், லேசான புன்முறுவலோடு அவன்.

"எதுக்கு... எனக்குப் புரியலை!"

"அதைத்தான் நான் விளக்கமாக உனக்கு ஈமெயில் அனுப்பி இருக்கிறேன்.

நம் பத்திரிகை இப்பொழுது தென் இந்தியாவில் முதல் இடத்தில் உள்ளது விற்பனையில்.

கங்கிராட்ஸ் மிதுலா. இந்த வெற்றியில் உன் பங்கு ரொம்ப முக்கியம்!" என்று கை குலுக்குவதற்காக நீட்டினான் அவளை நோக்கி.

"ஓ... ஐயாம் ஹேப்பி!" என்று விழிகள் அகலப் புன்னகையோடு பதிலுக்குக் கை நீட்டினாள் மிதுலா.

அவன் கைகுலுக்கும் பொழுது அவள் கை எரிச்சல் அதிகமானது.

கையை இழுத்துக் கொண்டாள் சட்டென அவள். வலியால் பொறுக்க முடியாமல் கண்கள் கலங்கின.

"ஏன் மிதுலா! இப்படி பிஹேவ் செய்யற... நான் ஏற்கெனவே சொல்லி இருக்கேன். எனக்குத் தொட்டால் ஒட்டிக் கொள்ளும் வியாதி ஏதும் இல்லை!" என்று உறுமினான் சச்சித்.

"இல்லை... நான்..." என்று அவள் முடிக்கும் முன்பு அவள் டெஸ்க்கில் இருந்த தொலைபேசி சிணுங்கியது.

அவள் எடுக்கப் போகும்பொழுது அவள் அணிந்திருந்த வாட்ச் ஸ்ட்ரேப் அவள் சுடிதாரில் மாட்டிக் கொண்டது.

வாட்ச்சை அவள் எடுக்க முயன்று கொண்டிருந்த பொழுது சச்சித் அவள் டெலிபோனை அட்டெண்ட் செய்தான்.

"குட்மார்னிங்... மிதுலாஸ் ஆஃபீஸ்."

அதற்குள் அவள் சுடிதாரில் சிக்கியிருந்த வாட்ச்சை ஒரு வழியாக எடுத்து விட்டாள்.

ஏதும் சொல்லாமல் ரிசீவரை அவளிடம் நீட்டினான் அவன்.

"ஏய்... சொல்லு. என்னது பச்சை டி-ஷர்டா? அங்கதான்டா இருக்கும்.

அயர்ன் செஞ்சு வெச்சிருக்கேன். கப்போர்டில் பார். ம்... இருந்துதா... குட். யூ ஆர் எ ஸ்வீட் டியர்... டா. டேக் கேர்!" என்று சொல்லிவிட்டு ஃபோனின் ரிசீவரை வைத்தாள் அவள்.

"ஸோ நேற்று ஃபோனில் பேசும்பொழுது நீ கொஞ்சியது இவனோடுதானா...!" என்று கத்தினான் சச்சித்.

"என்ன உளறல்... இது?" என்று படபடத்தாள் அவள்.

"அவன் குடித்து விட்டுக் குளறியபடி பேசுகிறான். சே... உன் வீட்டில் உன்கூடவே தங்கி இருக்கிறான்.



அவன் குடிப்பதற்கு நீதான் பணம் சம்பாதித்துக் கொட்டுகிறாயா?"

சச்சித்தின் வார்த்தைகள் நெருப்புத் துண்டம் போல் அவள் மேல் பட்டன.

"அருண் குடிக்கவில்லை. அவன் பதட்டப்பட்டால் இப்படித்தான் குழறிப் பேசுவான்.

அவனால் சரியாக நடக்க முடியாது. காலை விந்தி விந்தித்தான் நடப்பான். அவன் என் தம்பி!" என்று சொல்லும்பொழுது அவள் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது.

"காட்... உன் தம்பியா அவன்? ஓ காட்!" என்று தலையில் கை வைத்து உட்கார்ந்தான் அவன்.

"வொய் தி ஹெல் யூ டிட் நாட் டெல் மீ திஸ் மிதுலா?" என்றான் இறுகிய முகத்தோடு.

"நீங்கள் எங்கே என்னைச் சொல்ல விட்டீர்கள்? அதோடு என் பெர்சனல் லைஃப் பற்றி நான் ஏன் உங்களிடம் பேச வேண்டும்?

இது ஒன்றும் அவ்வளவு முக்கியமான விஷயம் இல்லை... உங்களுக்கு!" என்றாள் அழுத்தமாக.

"ம்... ஆமாம். எனக்கு இது முக்கியமான விஷயம் இல்லைதான்... உன்னைப் பொறுத்தவரை. உனக்கு என் மேல் நல்ல ஒபினியன் இல்லை. ஸோ நான் உன்னைப் பற்றி என்ன நினைக்கிறேன் என்பது உனக்கு முக்கியம் இல்லை."

"இ... இல்லை. நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை."

"பர்ஃபெக்ட் இட் மிதுலா. யூ ஹாவ் மேட் இட் க்ளியர்!" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து அகன்றான் அவன்.

அவன் சென்ற பிறகு அவளின் அழுகை அதிகமானது. ஏனோ ஒரு ஏமாற்றம் அவள் மனதில் படர்ந்தது.

தன்னைச் சமாளித்துக் கொண்டு சச்சித்தின் நினைவை வலுக்கட்டாயமாக மனதில் இருந்து அகற்றினாள்.

கணினியை உயிர்ப்பித்தாள். அதில் வந்திருந்த ஈமெயில்களில் இருந்து சச்சித்தின் மெயிலை ஓபன் செய்து படிக்கத் தொடங்கினாள்.

பத்திரிகை முதல் இடத்தில் வந்தது குறித்து அவளைப் பாராட்டி, அவள் செய்துள்ள வேலைகளை எல்லாம் விவரித்து வாழ்த்துத் தெரிவித்திருந்தான். மகிழ்ச்சியில் அவள் கண்கள் கலங்கின.

## 18

ஒரு
நீளமான
இரவு
அது
.........
உன்னைப்
பிரிந்த



அந்த
இரவு
.......
என்
உயிர்
முன்
நின்று
போன
அந்த
இரவு
.......
உன்னை
மீளாத்
துயிலில்
தள்ளிய அந்த
இரவு
.........
நானும் அதில்
இப்பொழுது!

**அ**ன்று இரவு தூங்க முடியாமல் அழுதபடியே இருந்தாள் மிதுலா. பின்பு ஒரு முடிவுக்கு வந்தாள்.

காலையில் ஆபீஸ் சென்றவுடன் சச்சித்தின் அறைக்குள் சென்றாள் மிதுலா.

"நான் என் ராஜினாமாவை உங்களிடம் கொடுக்க வந்தேன்!" என்று கடிதத்தை அவனிடம் நீட்டினாள்.

அதை அவன் வாங்காமல் அவளைப் பார்த்தான்.

"ஏன்?"

"ம்... ஐ ஃபீல் இட்ஸ் டைம் டு மூவ்."

"அது சரியான பதில் இல்லை. நீ இங்கு சந்தோஷமாக இல்லையா?"

"தட் ஹாஸ் நத்திங் ஃபார் மை ரெஸிக்னேஷன். பத்திரிகை புதிய வடிவில் இருக்கிறது. நன்றாக விற்பனையும் ஆகிறது.

அதனால் ஐ ஃபீல் ஃபோரிங். நான் புதிதாக ஏதாவது முயற்சி செய்து பார்க்க விரும்புகிறேன்."

"உனக்கு வேறு இடத்தில் வேலை கிடைத்திருக்கிறதா?"

"இல்லை. ஆனால் கிடைத்துவிடும் என்கிற நம்பிக்கை இருக்கிறது."

"உனக்குக் கிடைக்கும். கண்டிப்பாகக் கிடைக்கும். யூ ஆர் எ கேர்ல் ஆஃப் மெனி டேலண்ட்ஸ்."

அவன் அதை எந்த அர்த்தத்தில் சொன்னான் என்று புரியாமல் குழம்பினாள் மிதுலா.

"உன் ராஜினாமாவை நான் ஏற்றுக் கொள்கிறேன் மிதுலா. நீ எப்பொழுது ரிலீவ் ஆக வேண்டும் என்று விரும்புகிறாய்?"

"உங்களுக்கு வேறு ஒரு எடிட்டர் கிடைக்கும்வரை நான் இங்கு இருப்பேன்."

"கூடிய விரைவிலேயே நான் புது எடிட்டரை இங்கு வேலைக்கு அமர்த்தி விடுகிறேன்."



"ஸோ... யூ ஆர் ஹாப்பி டு கெட் ரிட் ஆஃப் மி ஸூன்..."

"யெஸ்!" என்றான் அமர்த்தலாக சச்சித்.

அவள் வேகமாக அவன் அறையிலிருந்து வெளியேறினாள். ஏனோ ஒரு ஏமாற்றம் அவள் மனதில் படர்ந்தது.

சச்சித் தன் ராஜினாமாவை உடனே ஏற்றுக் கொண்டது ஏனோ அவளுக்கு வலியைக் கொடுத்தது. மறுத்து ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லையே அவன்.

அப்படி என்றால் நான் எப்பொழுது ராஜினாமா செய்வேன் என்று காத்துக் கொண்டிருந்தானா? சே... என்ன ஒரு அவமானம் என்று மனம் புழுங்கினாள் மிதுலா.

அடுத்த ஒரு வாரம் சச்சித்தை அவள் பார்க்கவே இல்லை. அவன் ஆஃபீஸில்தான் இருந்தான். ஆனால் அவளை அவன் அலுவல் சம்பந்தமாக எதையும் கேட்க வில்லை.

அவனின் பாராமுகம் அவளுக்குக் கோபத்தையும் எரிச்சலையும் தந்தது. இனி இங்கு இருந்தால் தனக்குப் பைத்தியம் பிடித்து விடும் என்று பயந்தாள் அவள்.

அடுத்த நாள் மிதுலா சச்சித்திற்குத் தன்னைச் சீக்கிரமாக ரிலீவ் செய்யும்படி இமெயில் அனுப்பினாள்.

'நாளை ரிலீவ் ஆகலாம் நீ!' என்று உடனே பதில் இமெயில் வந்தது அவனிடம் இருந்து. கூடவே அவன் செட்டில்மெண்ட் விவரங்களையும் அந்த மெயிலில் விளக்கமாக விவரித்து இருந்தான், அவன்.

அதைப் பார்த்தவுடன் ஏனோ ஒரு துக்கம் பந்து போல் அவள் அடிவயிற்றில் இருந்து கிளம்பியது.

ஹெலனிடம் மட்டும் தான் ரிஸைன் செய்ததைச் சொல்லியிருந்தாள் மிதுலா. அதனால் அவளிடம் மட்டும் ரிலீவ் ஆகப் போவதைப் பற்றிப் பேசினாள் அவள்.

ஒரு ஃபேர்வெல் பார்ட்டிக்கு ஏற்பாடு செய்யப் போன ஹெலனை அவள் தடுத்தாள்.

"ப்ளீஸ் ஹெலன்... உனக்கு என் மேல் அக்கறை, பிரியம் இருக்கிறது என்றால் நான் சொல்வதைக் கேள். எனக்கு இந்தப் பார்ட்டி எல்லாம் வேண்டாம்."

"அப்ப... மிதுலா! ப்ளீஸ்... எங்க ஞாபகார்த்தமாக நாங்க கொடுக்கிற பரிசையாவது நீ ஏத்துக்கணும்."

"சரி... பட்! ரொம்ப காஸ்ட்லி எல்லாம் வேண்டாம்."

அடுத்த நாள் ஹெலன் ஒரு அழகான கைக்கடிகாரத்தை அவளுக்குப் பரிசளித்தாள்.

"வாவ்... தேங்க்ஸ் ஹெலன்!"

சச்சித் வந்து தன்னுடன் பேசமாட்டானா என அவள் மனம் ஏங்கியது. மாதவி மேடம் ஃபேர்வெல் பொழுது வந்தானே!

ஏன் இதற்கு வரவில்லை என்று யோசித்தபடியே உட்கார்ந்திருந்தாள் அவள்.

"சச்சித் வருவதாகத்தான் இருந்தது மிதுலா. பட் ஏதோ அவசர வேலை. அதான் வெளியே போயிருக்கார்..." என்றாள் ஹெலன்.



"ம்... ஹி இஸ் எ பிஸி மேன்!" என்றாள் மிதுலா.

அன்று முழுவதும் சோர்வாக இருந்தாள் மிதுலா. கடைசியில் சாயங்காலம் ஆறு மணி ஆனவுடன் தன் அறையை ஒரு முறை ஏக்கமாகப் பார்த்தாள்.

அவளை அறியாமல் அவள் கண்கள் கலங்கின. தன்னைச் சமாளித்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறினாள்.

ஹெலன் அவள் ஸ்கூட்டி வரை வந்து அவளை வழி அனுப்பினாள்.

"தேங்க்ஸ் ஹெலன்!"

"மிதுலா... நான்தான் உனக்கு தேங்க்ஸ் சொல்லணும். உன்னால்தான் எனக்கு விக்ரமின் அறிமுகம் கிடைத்தது.

நான் விக்ரமோடு உன் வீட்டிற்கு வருகிறேன். வீ வில் கோ அவுட்."

"ஓ... ஷ்யூர். ப்ளீஸ் கம்!"

வீட்டிற்குள் நுழைந்தாள் மிதுலா. ஏனோ வீட்டில் இருந்த தனிமை அவளுக்குப் பயத்தைக் கொடுத்தது. அருண் வீட்டில் இல்லை.

திருச்சி சென்று இருக்கிறான். சச்சித்தின் பாராமுகம் ஏன் என்னைப் பாதிக்கிறது? அவன் அப்படி இருந்தால் நான் நிம்மதியாகத்தானே இருக்க வேண்டும்.

நான் ஏன் ஏமாற்றப்பட்டது போல் உணர்கிறேன். இதற்கு என்ன அர்த்தம்? நான் அவனை விரும்புகிறேனா?

கடவுளே! இது என்ன கொடுமை? சச்சித்திற்கு என் மேல் இருப்பது வெறும் ஈர்ப்புதான். ஹீ இஸ் எ பிஸினெஸ் மேன்.

தீபக் சொன்னது போல் அவன் நீனாவை விரைவில் திருமணம் செய்து கொள்வான். அதுதான் நடக்கப் போகிறது என்று நினைக்கும் பொழுதே அவள் மனம் சோர்ந்து போனது.

கட்டிலில் படுத்தபடி ரொம்ப நேரம் அழுது கொண்டிருந்தாள் அவள். பின்பு தன்னைச் சமாதானம் செய்து கொண்டு சமையல் அறையினுள் சென்றாள்.

சூடான தண்ணீரில் குளித்தாள். இந்தத் தண்ணீர் என் உடலின் சோர்வை நீக்குவதுபோல் என் மனதின் சோர்வை நீக்க வழி உள்ளதா என்று தன்னையே கேட்டுக் கொண்டாள் அவள்.

குளித்துக் கொண்டு இருந்தவளின் யோசனையைக் கலைத்தது காலிங்பெல்லின் சத்தம். ம்... ம்... பூக்காரியாக இருக்கும் என்று நினைத்தபடியே அவசரமாக உடலை டவலால் துடைத்துக் கொண்டு இரவு உடையை அணிந்து கொண்டாள்.

வேகமாகச் சென்று கதவைத் திறந்தவள் அங்கே சச்சித் நிற்பதைப் பார்த்து அதிர்ந்தாள்.

"ஹலோ! நான் உள்ளே வரலாமா?" என்று சொல்லியபடியே உள்ளே நுழைந்தான் அவன்.

அவன் பார்வை தன் மேல் சுவாரசியமாகப் படிவதை அவளால் உணர முடிந்தது. அவசரமாகக் குளியல்



அறையிலிருந்து வெளியே வந்ததால், சரியாகத் துடைக்காமல் இரவு உடையை அணிந்தது என் முட்டாள்தனம் எனத் தன்னையே கடிந்து கொண்டாள்.

"ஒரு நிமிஷம்...!"

" எங்க போற மிதுலா?"

"நான் வேற உடை அணிந்து வருகிறேன்."

"தேவை இல்லை. இதைக் காட்டிலும் டவலில் நான் உன்னை அன்று...." என்று அவன் முடிக்கும் முன்பு அவள் சீறினாள்.

"எதற்காக இங்கே வந்தீங்க?"

"நான் போக வேண்டும் என்று விரும்புகிறாயா?"

"உட்காருங்கள். குடிக்க ஏதாவது எடுத்து வரவா?"

"வேண்டாம். நான் அவசர வேலையாக வெளியே போக வேண்டி இருந்தது. ஸாரி... அதனால்தான் உன் பார்ட்டிக்கு என்னால் வர முடியவில்லை."

"இட்ஸ் ஓ.கே...!"

"ம்... இதை உன்னிடம் கொடுக்கத்தான் வந்தேன்!" என்று ஒரு நகைப் பெட்டியை அவளிடம் நீட்டினான்.

"வே... வேண்டாம். என் ஸெட்டில்மெண்ட் கிடைத்து விட்டது."

"அது வேறு... இது வேறு. நான் உனக்கு பெர்ஸனலாக இதைக் கொடுக்க விரும்பினேன். ப்ளீஸ் திறந்து பார்."

அவள் அந்தப் பெட்டியைத் திறந்தாள். உள்ளே ஒரு அழகான வளையல் முத்துக்கள் பதிக்கப்பட்டு இருந்தது.

"போட்டுப் பார்!" என்றவன் சட்டென அதை எடுத்து அவள் கையில் அதை அணிவித்தான்.

"இ... இல்லை வேண்டாம். இது ரொம்ப விலை அதிகம் போல் தெரிகிறது."

"நீ நன்றாக வேலை பார்த்தாய். அதற்கு ஒரு பரிசு. தட்ஸ் ஆல்!"

"இது கம்பெனிப் பணமா?" என்றாள் மெல்லிய குரலில்.

"யெஸ்... கம்பெனியின் பணத்தில்தான் நான் இதை உனக்கு வாங்கினேன்.

போதுமா! இப்பொழுது உனக்குத் திருப்தியா?"

"தேங்க்ஸ்."

"உன் கைக்கு இது ரொம்ப அழகாக இருக்கிறது!" என்று அவள் கையைப் பற்றி உதடுகளைப் பதித்தான் சச்சித்.

விழி அகல அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். அவள் கூந்தலில் அவன் கை விரல்கள் விளையாடிக் கொண்டிருந்தன.

தான் ஒரு புதிய உலகில் இருப்பது போல் உணர்ந்தாள் அவள்.



டெலிபோன் மணிச் சத்தம் அவளை நிஜ உலகிற்கு அழைத்து வந்தது. அவனைத் தள்ளி விட்டுவிட்டு டெலிபோன் ரிசீவரை எடுத்தாள்.

"ஹாய் தீபக்! சொல்லு. ம்... ஆமாம்... வேலையை ரிஸைன் செய்து விட்டேன்.

உனக்கு ஏதாவது வேலை தெரிந்தால் சொல். ஐ நீட் இட் அர்ஜெண்ட்லி!" என்று சொல்லி விட்டு ரிசீவரை வைத்தாள்.

"டு யூ லைக் தீபக்... மிதுலா...!" என்று உறுமினான் சச்சித்.

"வாட் டு யூ மீன்...?"

"கேட்பதற்குப் பதில் சொல்."

"நான் பத்திரிகைத் துறையில் இருப்பதால் எனக்கு அவனைத் தெரியும். மற்றப்படி வேறு ஏதும் இல்லை."

"அவன் என்னிடம் அப்படிச் சொல்லவில்லை."

"புரியவில்லை...."

"ஹி டோல்ட் சம்திங் பேட் அபவுட் யூ. ஒரு அஸைன்மெண்ட் முடிப்பதற்கு அவன் உனக்கு உதவி செய்தானாம். அதற்காக நீ... அவனோடு...!" என்று முடிக்க முடியாமல் அவன் முகம் இறுகியது.

"ஷட் அப்!" என்று சீறினாள் அவள். கோபத்தால் அவள் முகம் சிவந்தது.

"ஸாரி மிது...!"

"போங்க... இங்கிருந்து. ஐ ஹேட் யூ!" என்றவளின் குரல் உடைந்தது.

"மிது... ப்ளீஸ். நீ உன் தம்பியோடு தங்கியிருந்ததை நான் தவறாகப் புரிந்து கொண்டேன்.

நீ அவனை டியர்... விட்டில் டியர் என்று அழைத்த பொழுது என் மனம் பொறாமையால் தூள் தூளானது.

சொல் மிதுலா. உன் மனதில் நான் இருக்கிறேனா?" என்றவன் அவள் கையைப் பற்றினான்.

"கையை விடுங்கள்."

"நீ பதில் சொல். அப்பொழுதுதான்...."

"என் கையை விடுங்கள். அப்பொழுதுதான்...!"

"முடியாது மை டியர் கேர்ல். நீ பதில் சொல்வதற்கு எவ்வளவு நேரம் ஆனாலும் பரவாயில்லை.

உன் கையை நான் விடப் போவதில்லை. இட்ஸ் நைஸ் டு ஹோல்ட் யுவர் ஹாண்ட்."

அவன் குரலில் இருந்த குறும்பும் கனிவும் அவளை ஏதோ செய்தது.

"ப்ளீஸ் சச்சித்!" என்று முனகினாள் அவள்.

"உன் ஸ்கின் எப்படி இவ்வளவு மென்மையாக இருக்கிறது!" என்று அவள் முகத்தில் கட்டை விரலால் கோடு போட்டான் சச்சித்.

ஏதும் சொல்ல முடியாமல், மூச்சுக்கூட விட முடியாமல் திணறினாள் அவள். அவன் கைவிரல் மெதுவாக அவள் கழுத்தில் இறங்கியது.



"சச்சித்! ஸ்டாப் இட்... இதெல்லாம் நீனாவோடு வைத்துக் கொள்ளுங்கள்...!" என்று படபடத்தாள் அவள்.

"என்ன உளர்ற மிதுலா! நீனா என் நண்பனின் மனைவி."

"பட்... தீபக் சொன்னான். நீங்களும் நீனாவும் திருமணம் செய்து கொள்ளப் போவதாக...!"

"நோ... நீனாவிற்கும், அவள் கணவன் அஜித்திற்கும் சின்னப் பிரச்சினை.

அதை நான்தான் தீர்த்து வைத்தேன். அதனால்தான் நான் நீனாவோடு அடிக்கடி பேசிக் கொண்டிருந்தேன். தீபக் நம் ரெண்டு பேரையும் முட்டாள் ஆக்கி விட்டான்."

"ஆனால்... அன்று நீங்கள் ஃபோனில் பேசும் பொழுது எனக்காக அவள் காலம் முழுவதும் காத்திருப்பாள் என்று சொன்னீர்களே...!"

அவன் அதைக் கேட்டுச் சிரித்தான்.

"மக்கு! நான் அன்று பேசிக் கொண்டிருந்தது, ஒரு ஐந்து வயதுக் குழந்தையிடம். பெயர் பார்கவி.

அவள் ஒரு அநாதை. அவளுக்கு இருதயத்தில் ஓட்டை. மருத்துவச் சிகிச்சை அவளுக்குத் தேவை.

அதற்கான பணத்தை நான்தான் கொடுத்து வருகிறேன். அவள் அமெரிக்கா செல்ல ஆசைப்பட்டாள். அதனால் என் பெரியப்பா வீட்டிற்கு அவளைக் கொஞ்ச நாள் அனுப்பி வைத்தேன். அவளைப் போய் நீ..." என்று மீண்டும் சிரிக்கத் தொடங்கினான்.

"ஐயாம் ஸாரி... நான் உங்களைத் தப்பாக நினைத்து விட்டேன். வெளிநாட்டில் படித்ததால் நீங்கள் என்னென்னவோ தேவையில்லாத எண்ணங்களை மனதில் வைத்துக் கொண்டிருந்தீர்கள் என்று நான் நினைத்தேன்."

"நான் நீ அப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறாய் என்று நினைத்து... உன்னை ஏதேதோ சொல்லி விட்டேன்.

ஐயாம் ஸாரி மை டியர் கேர்ல்!" என்றவன் அவளை அணைத்தான்.

அவள் அவன் தோளில் முகம் புதைத்தாள்.

"என்னைப் பிடித்திருக்கிறதுதானே!" என்று அவள் காதில் கிசுகிசுத்தான் அவன்.

"ம்..."

"அப்புறம் ஏன் அன்று நான் தொட்ட பொழுது இறுக்கமாக இருந்தாய்?

ஐ வாஸ் ஹர்ட். என்னை எனக்குப் பிடிக்கவில்லை என்று நான் முடிவே செய்து விட்டேன்."

"நீங்கள் சும்மா நேரத்தைப் போக்குவதற்காக என்னிடம் பழகுகிறீர்கள் என்று நான் நினைத்தேன்!" என்றாள் மெல்லிய குரலில்.

"உன்னை முதன் முதலாகப் பார்த்த பொழுதே என் மனம் தடுமாறியது மிதுலா.

ஆனால் உன்னை எப்படி அணுகுவது என்று எனக்குத் தெரியவில்லை. எனக்குப் பெண்களிடம் ரொம்பப் பழக்கம் இல்லை.



அதனாலேயே எனக்கு உன்னை எப்படிக் கையாள்வது என்று தெரியவில்லை. பட் அப்பாவிடம் எல்லாவற்றையும் மனம் திறந்து பேசினேன்."

"காட்... அங்கிளிடமா?"

"யெஸ்... அதனால்தான் அவர் உன்னை அழைத்து வரச் சொன்னார்.

நீ வீட்டை விட்டுச் சட்டுன்னு ஓடி வந்து விட்டாய்!" என்று அவள் காதைச் செல்லமாகத் திருகினான்.

"ம்... நீங்க செஞ்சது மட்டும் சரியா?"

"ஏய் சண்டைக் கோழி! சீக்கிரமே நம்ம கல்யாணத்தை வைக்கச் சொல்லணும்.

இல்லாட்டி உன்னைப் பேச முடியாதபடி செய்யணும். அதற்கு..." என்றவன் அவள் இதழ்களில் உதட்டைப் பதித்தான்.

கண்மூடிப் புதிய உலகில் சஞ்சரித்தாள் மிதுலா.

"உன் தம்பியை நான் பார்க்க வேண்டும் மிதுலா. நம் திருமணத்திற்குப் பின்பு அவன் நம்ம கூடவே இருக்கட்டும். அவனுக்குத் திருமணப் பரிசு நான் கொடுக்கப் போகிறேன். என்ன சொல்?"

"என்ன சொல்லுங்கள்?"

"ஒரு ஆட்டோமேடிக் கார்."

அதைக் கேட்ட அவளின் கண்கள் கலங்கின. எம்பி அவன் நெற்றியில் இதழ் பதித்தாள் அவள்.

"அட... நீ இப்படிச் செய்வன்னு தெரிஞ்சிருந்தால் அப்பவே இதைச் சொல்லி இருப்பேனே!" என்றான் கண்களில் குறும்பு மின்ன.

"தேங்க்ஸ் சச்சித். நாம் திருமணம் செய்து கொள்ளப் போவது தெரிந்தால் ஹெலன் சந்தோஷப்படுவாள்."

"ஹெலன் வந்து என்னிடம் பேசினாள். விக்ரம் பற்றி அவள் சொன்னவுடன் என் மனதில் நிம்மதிப் பூக்கள்.

இனி இந்த மிதுலா... எனக்கே எனக்கு...!" என்று அவள் கையைத் தன்னுடன் பிணைத்துக் கொண்டான்.

அவன் தோளில் தலை சாய்த்தாள் மிதுலா. இனி அவர்கள் வாழ்க்கையில் எப்பொழுதுமே ஆனந்தம்தான்.